www.gnanam.info www.gnanam.lk

ISSN 2478-0340

பெப்ரவரி 2017

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

201



விலை: ரூபா 100/=

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்

ஒளி:17
சுடர்:09
201

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.


## ஆசிரியர் குழு

**ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்**

**இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்**

**நிர்வாக ஆசிரியர் : ஞா. பாலச்சந்திரன்**

## தொடர்புகளுக்கு

**தொ.பேசி.** ☞ 0094-11-2586013
0094-77-7306506

**தொ.நகல்** ☞ 0094-11-2362862

**இணையம்** ☞ www.gnanam.info
www.gnanam.lk
**தளம்.ஞானம்.இலங்கை**

**மின்னஞ்சல்** ☞ editor@gnanam.info
editor@gnanam.lk

**அஞ்சல்** ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka

**வங்கி விபரம்** ☞ T. Gnanasekaran
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(**மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்**)

**சந்தா விபரம்** ☞ Sri Lanka

| | |
|---|---|
| **ஒரு வருடம்** | :ரூ 1,000/= |
| **ஆறு வருடம்** | :ரூ 5,000/= |
| **ஆயுள் சந்தா** | :ரூ 20,000/= |

| | **ஒரு வருடம்** |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |


***⊙ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்பு களின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.***
***⊙புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந் தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகிய வற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.***
***⊙பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.***
***⊙படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.***

# இதழினுள்ளே.....




⊙ **கவிதைகள்**

| | |
|---|---|
| *வதிரி. சி. ரவீந்திரன்* | *06* |
| *தீபச்செல்வன்* | *12* |
| *ஹேமச்சந்திர பதிரன* | *13* |
| *ஜெஸீமா ஹமீட்* | *27* |
| *ரஷீத் எம். இம்தியாஸ்* | *31* |
| *பொலிகை ஜெயா* | *50* |
| *தாமரைத்தீவான்* | *52* |

⊙ **சிறுகதைகள்**

| | |
|---|---|
| *ஸ்ரீரஞ்சனி (கனடா)* | *03* |
| *பிரமிளா பிரதீபன்* | *22* |
| *கொற்றை பி. கிருஷ்ணானந்தன் (குட்டிக்கதைகள்)* | *28* |
| *வேல் அமுதன் (குறுங்கதை)* | *31* |
| *எஸ். முத்துமீரான் (உருவகக்கதை)* | *35* |

⊙ **கட்டுரைகள்**

| | |
|---|---|
| *சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்* | *14* |
| *சை. பீர்முகம்மது* | *24* |

⊙ **பத்தி**

| | |
|---|---|
| *மானா மக்கீன்* | *30* |
| *பேரா. துரை மனோகரன்* | *32* |

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**

| | |
|---|---|
| *கே. பொன்னுத்துரை* | *37* |

⊙ **வாசகர் பேசுகிறார்** *55*

# "சர்வதேச இலக்கிய விருது" பெறும் ஈழத்துக் கவிஞர் சேரன்

**கே**ரளாவின் முக்கியமான உலகப் புகழ்பெற்ற கவிஞர், பாடலாசிரியர், இலக்கியவாதி, பேராசிரியர் ONV **குருப்** அவர்கள் கடந்த ஆண்டு 13.02.2016 இல் காலமானார். இவர் இந்தியாவின் உயர் இலக்கிய விருதான ஞானபீட விருது உட்பட பத்மஸ்ரீ, பத்ம விபூஷன் ஆகிய உயர்விருதுகளைப் பெற்றவர். கேரளப் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதி பட்டம் பெற்றவர். இவரது நினைவாக நிறுவப்பெற்ற ONV. Foundation இவரது முதலாவது நினைவாண்டில் இம்மாதம் 17ஆம் திகதி (17.02.2017) அன்று நடைபெறவுள்ள நிகழ்வில் இருவருக்கு **சர்வதேச இலக்கிய விருது** மற்றும் **யுவகவி** விருது ஆகியன வழங்கப்பட இருப்பதாக அறிவித்துள்ளது.

ONV குருப் அவர்களின் நினைவாக வழங்கப்படும் **சர்வதேச இலக்கிய விருதை (2016)** முதன்முதலில் பெறுபவர் ஈழத்துக் கவிஞரான, **சேரன் உருத்திரமூர்த்தி** அவர்கள் என்பது பெருமைக்குரியது.

ஈழத்து நவீன கவிதையின் முதல்வர்களில் ஒருவரான மஹாகவின் மகனான சேரன், யாழ்ப்பாணம் அளவெட்டியில் பிறந்தவர். 1972 இல் இருந்து கவிதைகள் எழுதிவரும் இவர், இலக்கியம் விமர்சனம், சிறுகதை, ஓவியம் ஆகிய துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்.

கனடா யோர்க் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் முனைவர் பட்டம்பெற்று மானிடவியல் துறைப் பேராசிரியராக கனடா வின்சர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வரும் கவிஞர் சேரன் அவர்கள் பல்துறை ஆளுமை கொண்டவராக உலகப் பரப்பில் அதிகமாக அறியப்பட்டவர்; சமகால தமிழ்க் கவிஞர்களில் மிக முக்கியமானவராகவும் அனைத்துத் தரப்பினராலும் உன்னிப்பாக அவதானிக்கப்படுபவராகவும் இவர் திகழ்கிறார்.

1978, 1983 காலகட்டத்தில் இலங்கையின் இனப்பிரச்சினை வன்முறையாக வெளிப்பட்டபோது, யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. அச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே அவரது **இரண்டாவது சூரிய உதயம்** என்ற பலரது கவனிப்புக்கும் உள்ளான கவிதை.

இவரது படைப்புகள் பலவும் ஈழத்தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு நல்குவதாகவும், ஈழத்துத் தமிழர்களில் துன்பியல் வாழ்வியலைப் பதிவு செய்பவையாகவும் ஈழத் தமிழர்களின் இனப்படுகொலையை வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவனவாகவும் அமைந்தன.

"ஒடுக்கப்படுவதையும், உரிமை வேண்டுதலையும் ஒரு வலுவான கவிதை மொழியில் இவரது படைப்புகள் பேசுகின்றன. இவரது கவிதைகளில் பலவற்றை எதிர்ப்பு, எதிர்பார்ப்பு, தவிப்பு, கொதிப்பு, ஆற்றாமை என்பன கொண்ட முடிவுறா பெருங்கனவாகக் காணமுடிகின்றது. மூன்று தசாப்தகால இலங்கை இனவிடுதலைப் போராட்டத்துக்கும் பொருந்தக்கூடியனவாக இவை அமைந்துள்ளன."

கவிஞர் சேரனின் கவிதைகள் மலையாளம், தெலுங்கு, கன்னடம், சீனம், ஜப்பானிய மொழிகள் உட்பட 15க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கில மொழிபெயர்ப்பில் இவரது நான்கு தொகுதிகள் வெளிவந்துள்ளன. உலகளாவிய ரீதியில் பலரால் அறியப்பட்ட சமகாலத்து ஈழத்துக் கவிஞராக சேரன் திகழ்கிறார்.

உலகப் புகழ்பெற்ற ஈழத்துக் கவிஞர் சேரன் சர்வதேச இலக்கிய விருது பெறுவது ஈழத் தமிழர்களுக்கும் ஈழத்து இலக்கியத்திற்கும் பெருமை சேர்க்கும் நிகழ்வாகும். அவரை ஞானம் மனப்பூர்வமாக வாழ்த்தி மகிழ்கிறது.

❍❍❍



நூல் வெளியீடு முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த எங்களின் காருக்குள் புயல் வீசியது. சுனாமி வேகமாக அடித்து என்னை மூச்சுத் திணறச் செய்தது.

வீட்டுக்குள் போனதும், மீதிப் புத்தகங்களுடனான அந்த காட்போட் பெட்டியும் அதனுள் இருந்த புத்தகங்களும் சுதர்சன் எறிந்த வீச்சிலிருந்த அந்த வெறுப்பையும் ஆத்திரத்தையும் உள்வாங்கி, அவற்றின் வடிவத்தை இழந்துபோயின.

தென்றலின் இனிய வருடல் பட்டதுபோல இலேசாகப் பறந்த என் மனசுக்குள், கற்களை வாரி வீசிவிட்டதுபோல அங்கங்கே கீறல் பட்டுப் பலமாக வலித்தது, கனத்தது.

அந்த வெளியீட்டுக்கு இருபது பேர் மட்டில்தான் வந்திருந்தார்கள். ஆனால், அவர்கள் யாவருக்கும் என் கதைகளுடன் பரிச்சயம் இருந்தது. அதனால் அனைவரும் தத்தம் கருத்துக்களை பகிர்ந்து கொண்டிருந்தனர். மொத்தத்தில் அது ஒரு ஆரோக்கியமான கருத்துப் பரிமாறலாக அமைந்திருந்தது. ஆறுமுகம் மாஸ்ரரின் முறை வந்தபோது, எனது கதைகள் சமூகப் பார்வையுடையவை எனத் தான் சொல்ல மாட்டேன் என்றார். என் கருப்பொருள்களை ஆதாரமாக வைத்து சிலர் அதற்கு எதிராகத் தங்கள் கருத்துக்களை முன்வைத்தபோது சபை சுவாரஸ்யமாக இருந்தது.

இதயபூர்வமான என் நன்றியுரையில் என் குடும்பத்தவருக்கும் நன்றி சொல்ல வேண்டுமென ஏனோ என் மனதில் படவில்லை. அப்பா, அம்மா சகோதரர் உட்பட யாருமே என் எழுத்தில் ஈடுபாடு காட்டாததை மனதில் வைத்து, என் குடும்பத்தவர்கள் என் எழுத்தை என்றுமே பெரிதாக வரவேற்றதில்லை எனக் கதையோடு கதையாக என் கதையை நான் சொன்னது, என் வாழ்க்கைப் படகினைத் திசைமாற்றப் போகின்றது என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை.

அந்தக் குறிப்பைக் கேட்ட சுதர்சனின் நண்பன் ஒருவன், சுதர்சனுக்கு இட்ட தூபம்தான் அப்படிப் புகைத்துத் தள்ளியது. அந்த நச்சுப் புகைக்குள் மூச்செடுக்க முடியாமல் நாங்கள் தவித்தோம். மற்றவர்களின் அபிப்பிராயங்கள்தான் தன் வாழ்வுக்கான அங்கீகாரமென நம்பும் சுதர்சனின் ஆத்திரத்தை அது பலமாகவே ஊதிப் பெருப்பித்துக் கொண்டிருந்தது.

கண்களில் திரண்ட கண்ணீரும், மனக் கொதிப்பும், என்னத்தைப் பிழையாகச் சொன்னேன் என மன்னிப்புக் கேட்க விரும்பாத என் அகம்பாவமும் என்னையும் ஆரோகணத்தில் கத்தவைத்தன. சுதர்சன் செய்த உதவிகளுக்காக நன்றி சொல்லாதது பிழை எனச் சொல்லாமல் விட்டதால் உருவான அந்த மோதலின் அனலைத் தகிக்க முடியாது பிள்ளைகள்



சிறுகதை

# சில்வண்டு

ஸ்ரீரஞ்சனி (கனடா)

மிகவும் வாடிப்போய்விடுகின்றனர். இதயம் பலமாக அடித்துக்கொண்டிருந்தது. உடம்பு நடுங்கியது. அதிலிருந்து ஒரு மாற்றம் தேடி கொம்பியூட்டருக்குள் தஞ்சமடைந்த நான், விமர்சனம் செய்தவர்களுக்கு நன்றி தெரிவித்து ஈமெயில் எழுதுகின்றேன்.

"உங்களுடைய விமர்சனத்துக்கும் நேரத்துக் கும் என் மனம் நிறைந்த நன்றி.

நல்லதொரு விமர்சகரும் எழுத்தாளருமாகிய உங்களின் இன்றைய விமர்சனமும் பாராட்டுக் களும் எனக்கு மகிழ்வையும் என் எழுத்துப் பற்றிய நம்பிக்கையையும் தந்திருக்கின்றன. அதற்கு என் மனமார்ந்த நன்றி." என பெயரை மாற்றி மாற்றி, அதே கடிதத்தை நான்காவது விமர்சகருக்கும் அனுப்பிமுடித்தபோது, பிரேமிட மிருந்து பதில் வந்தது,

**அன்புள்ள ரஜனி**

**என்னுடைய விமர்சனம் உங்களுக்கு உதவியதில் எனக்கு மகிழ்ச்சி.**

**பாரதியின் பாடல்கள் இன்றும் நிலைத்திருப் பதைப் போன்று, சமூக அக்கறை மிக்க உங்கள் எழுத்துக்களும் என்றும் நிலைத்திருக்கும். அவை புலம்பெயர் வாழ்வின்மீது புதிய வெளிச்சமொன்றைப் பாய்ச்சியிருக்கின்றன.**

**உங்களுக்கு வசதியானபோது, உங்களு டைய சில கதைகள் பற்றியும் ஆறுமுகம் மாஸ்ரர் அவை பற்றித் தெரிவித்த கருத்துக்கள் பற்றியும் நேரில் கதைக்க விரும்புகின்றேன். உங்கள் வசதியைத் தெரிவியுங்கள்.**

**மீண்டும் வாழ்த்துக்களுடன்**
**பிரேம்**

அந்த ஈமெயில் அன்றிரவு எனக்கிருந்த மனநிலைக்கு மிகுந்த ஒத்தடமாக இருந்தது. இருந்தாலும், இவர் ஏன் நேரில் கதைக்க வேண்டும் என்கின்றார் என்ற கேள்வி ஒன்று எனக்குள் மெதுவாகத் தலைதூக்கியது. அதை அடுத்த நாள் என் மகளுடன் பகிர்ந்து கொள் கின்றேன்.

ஏன் அப்படி எப்பவுமே ஆண்களில் சந்தேகப்பட வேண்டும் என என்னைக் கேட்கிறாள் என் மகள். என் எழுத்துக்களைச் செப்பனிடக்கூடிய அனுபவமிக்க பிரேமின் நட்பை வளர்ப்பது, எனக்கு நன்மையாக இருக்கும் என மேலும் அவள் அபிப்பிராயப்படுகின்றாள். இந்த நாட்டுக் கலாசாரத்தில் வாழும் அவளின் கருத்தில் பொருள் இருப்பது மாதிரி எனக்கும் படுகின்றது. யோசித்துப் பார்த்தபோது அவரின் உடை, நடை, பாவனைகளும் நம்பிக்கையைத் தருகின்றன. எனவே எதிர்பார்ப்புடன் பதிலெழுது கின்றேன்.

**அன்புள்ள பிரேம் அவர்களுக்கு,**

**நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள் என்பதை அறிய எனக்கு ஆவலாக உள்ளது, உங்களுக்கு வசதியானபோது சந்திப்பதற்கு நான் நிச்சயமாக ஆவன செய்வேன்.**

**அன்புடன்**
**ரஜனி**

**அன்புள்ள ரஜனி**

**வருகின்ற ஞாயிறு மாலை ஒரு புத்தக வெளியீட்டில் பேசுகின்றேன். சனி மதியம் குறும் திரைப்படவிழா இருக்கின்றது. இரு நிகழ்வுகளும் ஸ்காபோறோவில்தான் நடைபெறுகின்றன. ஞாயிறு வந்தால் என்னுடைய பேச்சையும் கேட்கலாம்.**

**அன்புடன்**
**பிரேம்**

**அன்புள்ள பிரேம் அவர்களுக்கு,**

**திங்கள் பாடசாலை நாள் என்பதால் ஞாயிறு மாலை வருவது எனக்குக் கஷ்டம், குறும் திரைப்பட விழாவுக்கு வருகின்றேன், சந்திப்போம்.**

**அன்புடன்**
**ரஜனி**

அப்படியே, குறும் திரைப்பட விழாவுக்குச் சென்று பக்கத்தில் அமர்ந்துகொள்கின்றேன். இருந்தாலும், எங்களின் உரையாடல் அந்தப் படங்களைப் பற்றித்தான் இருந்ததேயன்றி அன்றைய கருத்தாடல் பற்றியதாக இருக்க வில்லை. முடிந்து விலகும்போது தனது தொலைபேசி இலக்கங்களைத் தந்து கோல் பண்ணுங்கோ கதைப்பம், எனச் சொல்கின்றார், பிரேம்.

அதன்படி நானும் அவரை அழைக்கின்றேன். தன்மேல் உள்ள கோபத்தால், தான் சொன்ன கருத்தை மறுப்பதற்காகவே ஆறுமுகம் மாஸ்ரர் அப்படி அன்று சொன்னார் என்றும், பிரச்சாரத் தொனியைக் குறைத்து கலைநயத்துடன் எழுதினால் என் கதைகள் இன்னும் நன்றாக இருக்கும் என்றும் சொல்கின்றார்.

அவருடைய விமர்சன உரை ஒன்றைக் கேட்டு, அதில் லயித்து, அவரது அந்தத் தமிழை நான் மிக ரசித்ததால், அவரின் பேச்சில் எனக்கொரு போதை ஏற்பட்டிருந்தது உண்மையே. பின்னர், இலக்கிய விழா ஒன்றில் எமக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஒரு மேசையில் தனித்திருந்து பேசியபோது, அக்கறையாக என் எழுத்துக்கள் பற்றி விசாரித்ததும் என் நூலுக்கான விமர்சகர்களில் ஒருவராக அவரையும் அழைக்கத் தூண்டியது.

பெரிதாக நெருங்கிய நண்பர்கள் என எவருமின்றி, அதுவும் எந்த ஆண் நண்பர்களுமின்றி குடும்பமும் நானும் என இருந்த நான், எங்கிருந்து சில நாட்களுக்குள் இப்படி நட்பு வந்ததோ தெரியவில்லை. ஆனால் மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது எனப் பரசவித்துப் போகின்றேன். தொலைபேசி உரையாடல்களும் மின்னஞ்சல் உரையாடல்களும் தினமும் தொடர்கின்றன.

**அன்புள்ள ரஜனி**

**வீரகேசரியில் உங்களுடைய பேட்டி படித்தேன். மிக அழகாக உங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றீர்கள். உங்களைப் போன்ற சொல்திறனும் செயற்திறனும் மிக்க பெண்களால்தான் இந்த நானிலம் மேம்படும்.**

**பெண்ணின் இயல்புகள் என ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட மௌனமும் மென்மையும் கலைந்து, உங்களது மொழியின் வீச்சு மென்மேலும் பிரவாகம் எடுக்கவேண்டும்.**

**உங்களுடைய எழுத்துப் பயணத்துக்கு உதவிசெய்யக்கூடிய சில புத்தகங்களை நான் தெரிந்தெடுத்து வைத்திருக்கின்றேன். ரொறன்ரோவும் மாக்கமும் சந்திக்கும் வடக்குப் புறத்தில் என் குடில் அமைந்திருக்கின்றது. வசதியானபோது பெற்றுக்கொள்ளுங்கள்.**

**அன்புடன்**
**பிரேம்**

என்னுடைய வளர்ச்சியில் அவர் காட்டும் அக்கறை, பாரி மன்னனின் தேர் அன்று அந்த முல்லைச் செடிக்குக் கொடுத்த தெம்புக்கு ஒத்த தெம்பை எனக்குத் தருகின்றது

**அன்புள்ள பிரேம் அவர்களுக்கு,**

**உங்கள் பாராட்டுக்கும் அன்புக்கும் உதவிக்கும் மிக்க நன்றியுடையேன். நான் அந்தப் பக்கம் வரும்போது வருகின்றேன். டவுன்ரவுண் பக்கம் வந்தால் நீங்களும் எங்கள் வீட்டுக்கு வரலாம்.**

**அன்புடன்**
**ரஜனி**

**அன்புள்ள ரஜனி**

**பால்பனிப் பொழிவின் போது, இருவர் கை கோர்த்து நடக்கும் சந்தோஷத்துக்கு ஒப்பானது நல்ல நண்பர்களின் நட்பு.**

**உங்களைவிட பல வயதுகள் மூத்தவனான நான் இப்படிக் கேட்பது உங்களுக்கு அசௌகரியத்தைக் கொடுக்கக்கூடும் என்றாலும் உங்களை ஒன்று கேட்கலாமா? என்னை விழிக்கும்போது பிரேம் அவர்களுக்கு எனச் சொல்லாமல், வெறுமனே பிரேம் எனமட்டும் எழுதுவீர்களா? என்னுடைய தங்கைச்சிமார் என்னை, டேய் தம்பி, வாடா, என்று தான் கூப்பிடுவார்கள். என் நணபர்களும் பிரேம் என்றழைப்பதையே நான் விரும்புவேன்.**

**அன்புடன்**
**பிரேம்**

**அன்புள்ள ரஜனி,**

**எப்படியிருக்கின்றீர்கள்?**

**அன்பைத் தேடி பிச்சைக்காரனாக அலைந்த எனக்கு உங்களுடைய நட்பும் அன்பும் வாழ்க்கையில் பிடிப்பை ஏற்படுத்துகின்றன. என்றும் உங்கள் அன்புக்கு நான் நன்றியாக இருப்பேன்**

**அன்புடன்**
**பிரேம்**

அவருக்கு கான்சர் வந்தபோது, அதற்கு ஆயுர்வேத சிகிச்சைதான் செய்ய வேண்டுமென மனைவி அடம்பிடித்துப் பிரிந்து போயிருந்திருப்பதாகவும் அவர் மூலம் அறிந்த போது, தனியாக அவர் வாழும் வீட்டுக்கு எப்படி நான் வர முடியும் என்கிறேன். அதற்கு அவர், தனது வீட்டுக்கு இப்படிப் பல பெண்கள் உதவிபெற வருவதுண்டு என இலக்கிய உலகில் எனக்குத் தெரிந்த சிலரின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அத்துடன் அவர் பற்றிய நல்லெண்ணமும் நானென்ன சின்னப் பிள்ளையா என்ற நினைப்பும் தலைதூக்க, சரி, விரைவில் உங்கள் வீட்டுக்கு வருகின்றேன் என்கிறேன்.

நான் எழுதிக்கொண்டிருந்த கதைகளை

## ஈழமும் தமிழும்




## கீழிலிருந்து மேலாக பாடிய பாடல்

**பாடியவர் : மு. கார்த்திகேயப் புலவர் (காரைத்தீவு)**


**காலம் : 19ஆம் நூற்றாண்டு**

சேனாதிராய முதலியாருடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்த ***கார்த்திகேயப் புலவர்*** கூரிய அறிவுகொண்டு விளங்கியவர். இவர் ஒரு வித்தியாசாலை நிறுவி பலருக்கு கல்விகற்பித்தவர். ஒருமுறை கார்த்தி கேயப் புலவரும் ***சி.வை. தாமோதரம்பிள்ளை***யும் உரையாடிக் கொண்டிருக்கும் போது தாமோதரம்பிள்ளை அவர்கள், கார்த்திகேயப் புலவரின் கவிபாடும் வன்மையை வெளிக்காட்ட விரும்பினார். கார்த்திகேயப் புலவரை நோக்கி,

**"கற்றைச் சடையுடைத் தேவே கயிலைக் கறைக் கண்டனே"**

என்னும் இறுதியடியைக் கொடுத்து முன் மூன்றடியையும் பாடி நிரப்புமாறு கூறினார். கார்த்திகேயப் புலவர் சி.வை.தா. கேட்டதற்கமைய முதல் மூன்றடிகளைப் பாடி பின்வரும் பாடலை பூர்த்திசெய்தார்.

எற்றைக்கு முன்னடி பேணும் வரமே யெனக்கருள்வை
பற்றைக் களைந்திடு ஞானிகள் போற்றும் பழம்பொருளே
பெற்ற முகைத்திடு மங்கையொர் பங்க பிறையுலவுங்
கற்றைச் சடையுடைத் தேவே கயிலைக் கறைக்கண்டனே



அவரின் பின்னூட்டல்களுக்காக அனுப்புகின்றேன். படித்த பெண்ணைத் திருமணம் செய்யாததால், தன் ஆய்வை விளங்கி உதவிசெய்ய ஒருவர் இல்லை எனச் சுயபச்சாதாபம் பேசியதுடன் உதவியாளரின் அறிவையும் அக்கறையையும் பாராட்டிப் பாராட்டி அந்த உதவியாளரை மனசால் நெருங்க முயன்ற பேராசிரியர் ஒருவர், பின்னர் அந்த உதவியாளரை முத்தமிட்ட சம்பவம் ஒன்று கதையில் சொல்லப்பட்டிருந்தது. அந்த பேராசிரியர் பாத்திரத்தை பெண்தாசன் என மிகவும் கோபமாக வைகின்றார், பிரேம். இன்னொரு கதையில், கோமாவில் படுத்திருக்கும் கணவனுடனும் சின்னப் பிள்ளைகளுடனும் அல்லலபடும் இளம் பெண் ஒருத்திக்கு மிக உதவியாகவும் நல்ல நண்பனாகவும் இருக்கும் ஒருவன், அவள் விரும்பினால் தான் இணையத் தயாராக இருப்பதாக சாடை காட்டியபோது அவனை நல்ல நண்பனாகவே அவள் பேண விரும்புகிறாள் எனமுடிவை நான் அமைத்திருந்தேன். அப்படியில்லாமல் அவன் அவளுக்குத் தேவைப்படுகின்றான் என்ற முடிவைத் தான் போட்டு கண்ணை மூடி மானசீகமாக யோசித்தபோது அது மிக நல்ல கதையாக இருந்தது என்கின்றார், பிரேம்.

புதுமையை வரவேற்கும் அவரின் அந்த இயல்பும், சக எழுத்தாளரை ஊக்குவிக்கும் பண்பும் அவர்மேல் எனக்கு மிகுந்த மரியாதையைக் கொண்டுவருகின்றன.

இன்னொருநாள் கதைக்கும்போது, இலவசமாக வெளிவரும் சஞ்சிகை ஒன்றின் ஆசிரியர் பெண்கள் கேட்டால்தான் பிரதிகளை வீடுதேடிக் கொண்டு போய்க் கொடுப்பாராம். அவரின் சேஷ்டையை ஒழிக்கவேணும். ஒரு நாளைக்கு அவரை நீங்கள் ரிம் ஹோட்டனுக்குக் கூப்பிடுங்கள், கொஞ்ச நேரத்திலை நான் அங்கை வாறன். அவரை அம்பலப்படுத்தலாம் என்கிறார். பச்சோந்திகளை அம்பலமாக்க விரும்பும் அவரின் அந்த ஆத்திரம் எனக்குப் பிடித்துப்போகின்றது.

ஜூன் 27அன்று. நான் அவரின் வீட்டுக்குப் போனபோது, 9ஆம் இலக்கத்தில் முக்கியமான விடயங்கள் தன் வாழ்வில் நடப்பதாகச் சொல்லிக்கொள்கின்றார். நான் முக்கியமானவர் என நினைப்பவர், என்னை முன்னிலைப்படுத்தி இப்படிக் கதைத்தது, ஓரிரு அங்குலங்கள் நான் இன்னும் உயர்ந்திருப்பது போன்றதொரு உணர்வை எனக்குத் தருகின்றது.

வரவேற்பறையைச் சுற்றி நோட்டமிடுகின்றேன். பேரப் பிள்ளையுடனான படமும், மகனின் திருமணப் படமும் பிரேம் போட்டு மாட்டப்பட்டிருந்தன.

“தாடியில்லாமல் உங்களைப் பார்க்க ஆரோ போலிருக்கின்றது”

“யா, தாடியை எடுக்காவிட்டால் மகனின்ரை கலியாணத்துக்கு வரமாட்டன் எனப் பெரிய ஆர்ப்பாட்டம் நடந்தது. அதுதான் வெட்டினது. தாடியில்லாமல் என்னைப் பாக்க எனக்கே பிடிக்கவில்லை. மகனுக்கும் என்ரை தாடி பிடிக்கும்... ரஜனி, உங்களுக்கு என்ரை தாடி பிடிச்சிருக்கா?’’

மெல்லச் சிரிக்கின்றேன், நான். “ஓம், உங்களுக்கு தாடி வடிவாயிருக்குது”

வரவேற்பறையிலிருந்து குசினியைப் பிரித்து நிற்கும் திரைகூட அழகாக துப்பரவாக கலைநயத்துடன் இருந்தது. பலதையும் பேசிக்கொண்டோம்.

“சுதர்சனை எனக்கு முந்தியே தெரியும். எப்படி அவரோடை நீங்கள் வாழுறியள் என நான் யோசிக்கிறன்”.

“என்ரை முதலாவது கதைக்கு அவர் எழுதின விமர்சனம்தான் எங்கடை கலியாணத்துக்குக் காரணமானது. ஆனால், இப்ப இலக்கியம் என்பது வேலையில்லாதவையின்ரை வேலை எண்டு அவர் நினைக்கிறார்.”

“அதை மட்டும் நான் சொல்லேல்லை, இரண்டுபேரின்ரையும் இயல்பு வேறுபாட்டையும் சேர்த்துத்தான் சொல்றன்.”

“ஆருக்குத்தான் பிரச்சினையில்லை, வீட்டுக்கு வீடு வாசல்படி.”

“சாப்பிட்டு விட்டுப் போறியளா?” என்றபோது, “என்ன எனக்கும் சேர்ந்து சமைத்து வைத்திருக்கிறீங்களா?” என்கிறேன்.

“சமைக்கிறது கஷ்டமில்லை, சேர்ந்து சாப்பிடுறதுக்கு ஒருத்தர் கிடைக்கிறதுதான் கஷ்டம்”, என்றபோது, என்ரை வயிற்றைக் குளிர்விக்கும் சந்தர்ப்பத்தையும் அவருக்குக் கொடுக்கிறேன்.

பின்னர், சரி போவோம் என வெளிக்கிட்ட போது, “என்ரை அரண்மனையைப் பார்க்கப் போறீங்களா? இதுதான் என்ரை ரூம். இந்த மேசையிலிருந்துதான் நான் எழுதுகிறனான், இந்தச் சாய்மனைதான் என்ரை வாசிப்பிடம், இது என்ரை புத்தக அலுமாரி. உங்களுக்கு விருப்பமானதை எடுத்துக்கொள்ளலாம்,” ஏனடா தன்ரை படுக்கை அறையை இவர் எனக்குக் காட்டுகின்றார், என நான் நினைத்துக் கொண்டபோது, “இது மாலாவின்ரை அறை,

வெறுமனத்தான் இருக்கு. சுதர்சனோடை சண்டை எண்டால் இங்கு வந்திருக்கலாம்," என மற்ற அறையைச் சுட்டிக் காட்டுகின்றார். சீரியசாகச் சொல்கின்றாரா, அல்லது பகிடியாகச் சொல்கின்றாரா என ஊகிக்க முடியாத ஒரு குரலாக அது இருக்கின்றது.

அவவின்ரை அறையா என எனக்குள் எழுந்த கேள்விக்கு, அவராகவே பதிலளிக்கின்றார்.

"சேர்ந்திருக்கேக்கையும் 10 வருஷமா வேறைவேறை ரூம் தான்... இரண்டாவது வேலை முடிஞ்சு சாமத்திலை வருவன் ... பிறகு ஏதாவது செய்து சாப்பிட்டிட்டு, பேசாமல் படுத்திடுவன்".

"வேலையாலை வந்து, சாமத்திலை - அதுவும் பசியோடை நீங்கள் சமைக்க அவ படுத்திருப்பாவா?" அவவில் குற்றமாகச் சொல்லாமல் தன்னுடைய நிலைப்பாடாக பிரேம் சொன்னது பிரேமின் மேல், இனம்புரியாதொரு பரிதாபத்தை எனக்குள் குவிக்கின்றது. அது என்னுடைய வீட்டில் நடந்தால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது.

வாசலில், "கான் ஐ காவ் எ "ஹக்?"எனப் பிரேம்கேட்டபோது என்னை அறியாமலேயே என் மூக்கால் அவரின் கன்னத்தில் முத்தமிடுகின்றேன், நான்.

அடுத்தநாள் வேலையிலிருந்து கோல் பண்ணுகின்றேன். "ரஜனி, இராத்திரி நல்லா நித்திரை கொண்டீங்களா? கன நாளைக்குப் பிறகு இராத்திரித்தான் நான் முழுசா நித்திரை கொண்டனான்."

"உங்கடை சாப்பாட்டுக்கும் உபசரிப்புக்கும் மிக்க நன்றி. நான் எதுவும் கொண்டுவரவில்லை. வந்து நீங்கள் சமைச்சுத்தர சாப்பிட்டிட்டு வந்திருக்கிறன்"

"சரி, இன்னொரு நாளைக்கு நீங்கள் சமைச்சுத் தந்தால் போச்சுது. உங்களை நினைச்சுப் பாக்கிறன். உங்கடை தியாகங்களுக்காண்டி ஆராவது கோயில் கட்டிக் கும்பிடப் போயினமோ?"

"நான் என்ன தியாகம் செய்யிறன்?"

"விருப்பமில்லாத வாழ்வை நிர்ப்பந்தக் களுக்காக வாழுறது தியாகமில்லையா?"

"பிரச்சினைகள் இப்ப எவ்வளவோ குறைஞ்சிட்டுது. இனி இப்படியே வாழ்ந்து முடிக்கிறதிலை கஷ்டம் இருக்காது. பத்து வயசிலை ஒரு பிள்ளை வேறை இருக்கிறாள்."

"சுதர்சன் எவ்வளவு அதிஷ்டசாலி எண்டு அவருக்குத் தெரியுமா எண்டு நான் யோசிக் கிறன்."

அன்று மாலை மகளுடன் 'ரொய்ஸ் ஆர் அஸ்'க்குப் போனபோது பிரேமின் வீட்டில் சாப்பிட்டதையும் நான் எதையும் எடுத்துப் போகாததையும் அவரின் பேரப் பிள்ளைக்கு அவர் மியூசிக் படிப்பிக்க விரும்புவதையும் சொல்லி என்ன வாங்கலாம் என ஆலோசனை கேட்கிறேன். அவள் ஒரு பியானோவைக் காட்டுகின்றாள்.

இரண்டு நாட்களின் பின், மகளின் ஆலோசனைப்படி வாங்கிய பியானோவைக் கொண்டு பிரேமிடம் சென்றபோது டவுன்ரவுணில் இருக்கும் அவர் பேத்தி தன்னிடம் வரும் போது மட்டுமே வீடு கலகலப்பாக இருப்ப தாயும் அல்லது தான் ஃபிரிஜ் உடனும் தலைய ணையுடனும்தான் கதைப்பதாகவும் பிரேம் பகிடியாகச் சொன்னாலும்கூட, அந்தக் குரலி லிருந்த சோகம் என் மனதில் பதிந்து கொள் கின்றது. அது பிரேமின் மேலான கரிசனையை அதிகரிக்கின்றது. அத்துடன் பிரேமுடனான உரையாடல்கள் மனதுக்கு இதமாக இருக் கின்றன

இப்படியே சந்திப்புகள் தொடர்கின்றன. இன்னொருநாள் எனக்குப் பிடிப்பவை உங்களுக்கும் பிடிக்குமல்லவா, அதனால் சில பாட்டுக்களை உங்களுக்காகப் பதிவுசெய்தேன், அவற்றைக் கேட்க வசதிப்படுமா எனக் கேட்டு, 'உறவுகள் ஒரு தொடர்கதை', 'அஞ்சலி, அஞ்சலி', 'நீகாற்று, நான்மரம்' போன்ற பாட்டுக்களைப் பதிவுசெய்து தருகிறார். 'என்மேல் பட்ட மழைத்துளியே இத்தனை நாளும் எங்கிருந்தாய்', என்ற பாடல் கசெட்டின் முடிவிலும் ஆரம்பத் திலும் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

நீண்ட காலமாக சினிமா பார்க்காமலும் சினிமாப் பாடல்களைக் கேட்காமலும் இருந்த எனக்கு சுதர்சனுடனான எங்கள் உறவில் காதல் இல்லாமல் போய்விட்டதே என்ற ஆதங்கத்தை அந்தப் பாடல்கள் ஏற்படுத்துகின்றன. எங்க ளுடைய தாம்பத்தியத்தை மேம்படுத்த ஏதாவது செய்ய வேண்டுமென்ற தாபம் எனக்கு ஏற்படு கின்றது. வெளியில் கடும்காற்றும் மழையும் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டி ருக்கின்றன

எங்களுடைய அலைவரிசைகள் மிகவும் எதிர் எதிரானவை என்பதற்கும் மேலாக, வாழ்க் கையில் ஏற்பட்ட எதிர்பாராத திருப்பங்களின் விளைவுகளான வீழ்ச்சிகளாலும், வன்முறை களால் உருவான இடைவெளிகளாலும் வளர்க்கப்

பட்ட முரண்பாடுகள் இருவரையும் வேற்றுக் கிரக வாசிகளாகவே மாற்றியிருந்தன.

விட்டிட்டு ஓடிடு என மனசுக்குள் துரு துருத்திக் கொண்டிருந்த அந்த உச்சஸ்தாயி யிலான அபசுரம், சுதர்சனுக்கு திடீரென ஏற்பட்ட மாரடைப்பால், ஓங்கி ஒலித்த நிலையி லிருந்து முனகிக் கொள்ளும் நிலைக்கு மாறியிருந்தாலும், பிரச்சினைகள் குறைவதாய் இல்லை. இருந்தாலும், இனி இந்த வாழ்க்கையை இப்படியே வாழ்ந்து முடித்துவிடலாம் என மனம் அமைதி நிலை ஒன்றை அடைந்ததன் விளைவுதான் அந்த சிறுகதைத் தொகுப்பு எனலாம். இரண்டு வருடங்களுக்குள் 20 சிறுகதைகளை நான் எழுதியிருந்தேன். அவரும் பலவகைகளிலும் அந்த நிகழ்வுக்குத் தோள் கொடுத்திருந்தார்.

"சிவானியின் ஈமெயில்களும் கரிசனை களும்தான் என்னை இந்த இரண்டுவருஷமா வாழவைத்தன. அதோடை, ஊரிலையிருக்கும் பழைய காதலி ஒருத்தியிடமிருந்து நடுச் சாமத்திலை கோல் வரும் எடுக்காமலிருக்க முடிவதில்லை. அவள் போனுக்குள்ளாலை முயங்குவாள். இன்சினியர் பெண்சாதி ஒருத்தி தன்ரை புருஷனுக்கு எதுவும் விளங்குதில்லை என எனக்குச் சொல்லும் போது கேட்காமல் இருக்க முடிவதில்லை. இப்ப என்ரை வாழ்க்கைக்குள்ளை நீ வந்ததிலை எல்லாமே தேவையில்லாமல் போய்ச்சுது".

அப்படி வெளிப்படையாகச் சொல்பவருக்கு என்ன சொல்வது எனத் தெரியாமல் அவரின் அந்த மயக்கும் விழிகளைப் பார்க்கின்றேன். நான். பாவமாக இருக்கின்றது. வெளியில் இடிமுழக்கத்துடன் மழைபலமாகக் கொட்டு கின்றது, அந்தக்கண்ணாடி யன்னலில் வந்து வேகமாக முட்டி முட்டி மோதுகின்றன, மழைத் துளிகள். எப்படியாவது உள்ளுக்குள் வந்துவிட முயற்சிக்கும் என்பதுபோன்ற அவசரம் அந்த சத்தத்தில் தெரிகின்றது.

"நீ ஒரு எழுத்தாளர் எண்டபடியால் உன்னை என்னாலை விளங்கிக்கொள்ள முடியும். அதாலை மனிசிட்டை சொல்லாததுகளைக் கூட உன்னட்டைச் சொல்ல முடியுது. உன்னை என்ரை தாயா, சினேகிதியா, கடவுளா எல்லாம் பாக்கிறன், "... எனச் சொன்னவர், என்னை மெதுவாக முத்தமிடுகின்றார். நான் மிகவும் விலகி நின்று அது எனக்கேற்படுத்திய அசௌக ரியத்தைச் சொல்கிறேன்.

பின்னர், இன்னொரு நாள் முதுகை வருடித் தந்தபோது, பின்னுக்கு விலகிய நான், பின் திடீரென முன்னுக்குப் போய் அவரை முத்தமிடுகின்றேன். உடனடியாக அடுத்த நிலைக்கு அவர் தயாரானதுகூட எனக்குத் தெரியாமல் போய்விடுகின்றது, என்ன நடக்கின்றது என்ற சுயநினைவின்றிய உடல் முழுவதுமான வருடல்களுக்குப்பின் வீட்டுக்குப் போய் உரஞ்சி உரஞ்சிக் குளிக்கின்றேன்.

இது நல்லதல்ல எனச் சொல்ல வேண்டு மென்ற நினைப்புடன் அடுத்த நாள் வீட்டுக்கு சென்றபோது, என் கையைக் கோர்த்துக் கொண்டு இலக்கியக் கூட்டங்களில் முன்வரிசையில் உட்கார்ந்திருக்கவேண்டுமென ஆசையாக இருக் கின்றது என்கிறார். உலக அழகிகள்கூட தன் மனதைச் சலனப்படுத்துவதில்லை என்றும், ஆனால் என்னுடன் ஏதோவொரு பூர்வஜென்ம பந்தத்தை உணர்வதாகவும் சொல்கின்றார். எனக்கு வாயடைத்து விடுகின்றது.

நீ என் மனைவி என உலகமெல்லாம் ஓங்காரமிட்டுச் சொல்லவேணும் போலிருக்கு என்றபோது அவருக்குள் என்னை நான் இழக்கின்றேன். நான் பொம்பிளை இல்லை, எனக்கு எந்தவித ஆசையும் இல்லை என என்னை நம்ப வைத்த நிகழ்வுகளைச் சவாலாக்கும் ஆசை எனக்குள் முகிழ்கின்றது. முடிவில், உடல் சுகம் என்றால் என்னவென்று தெரியாமல் வாழ்ந்த என் நரம்புகளை மீட்டிய அவர் பெரும் வித்துவானாக எனக்குத் தெரிகின்றார். அவர் மீட்டிய இசைக்குள் அடிமை யாகின்றேன். ருசியாகச் சமைத்து அன்புடன் ஊட்டிவிடும் போது, நான் செய்வதை ரசித்து அனுபவிக்கும் போது, அந்த ரம்மியமான தருணங்களை எல்லாம் அணு அணுவாக ரசிக்க ஆரம்பிக்கின்றேன். சலங்கை கட்டிவிட்டது போன்று இதயம் மிகவும் ஆர்ப்பரிக்கின்றது. மனசு உயர உயரப் பறக்கின்றது.

என்னுடைய பிள்ளைகளிடம் நான் எதையும் மறைப்பதில்லை என்றபோது, ஓம் அவர்களிடமும் நம் காதலைச் சொல் என்கிறார். பிள்ளை களும் நான் சந்தோஷமாக இருக்கவேண்டும் என ஆசைப்படுகின்றனர். அப்படியாக, எனது முதலாவது கதை மூலம் ஏற்பட்ட ஒரு உறவு, எனது முதலாவது கதைப் புத்தகத்தால் வித்திடப் பட்ட இன்னொரு உறவால் முறிவடைந்து, என்னுடைய அந்தப் புதிய சந்தோஷத்துக்கு விவாகரத்து வெகுமதியாகின்றது. அது பிரேமுக்கு மிகவும் வசதியாகப் போய்

விடுகின்றது. வீடு பார்த்த போது, முதல் போடு வதற்காக 5000 டொலர் நான் தருவேன் என்கிறார், என் கண்கள் நனைகின்றன. ஆனால் பின்னர் ஒரு 500 கூடத் தரவில்லை என்பது வேறுகதை.

தன் பிள்ளை கனடாவில் வளராததால் எங்கள் உறவை விளங்கிக்கொள்ள மாட்டான், கொஞ்சக் காலம் போகட்டுமன் என்கிறார்.

ஆனால், வெளியில் நின்றால் என்னுடைய அழைப்புக்களுக்குப் பதிலளிக்காமலிருப்பது, ஃபேஸ்புக்கில் என்படங்களுக்கு லைக் போடாமலிருப்பது, சந்திப்பது மற்றவர்களுக்கு தெரியாமல் இருக்க முயற்சிப்பது போன்றவை எனக்கு கோபத்தைத் தருகின்றன. ஏன் என்று கேட்டால் அது என் பாதுகாப்புக்காக என்கிறார், படத்துக்கு மேல் பல லைக் போட்டு தனிச் செய்தி அனுப்புகிறார். சரி என்னைக் கட்டாட்டிலும் பரவாயில்லை, பிரிஞ்சிருக்கிற மனுசியை டைவோஸ் பண்ணுங்கள் என்றால், என்ன அதுபற்றி நான் யோசிக்கேல்லை எண்டா நினைக்கிறாய், அதோடை ஆர் கதைக்கிறது, கேட்கிறவையோடை சண்டைக்குப் போகும். இனி நான் கோடெல்லாம் ஏறியெல்லோ அலைய வேண்டும். சாகும்வரையும் நான் உனக்குத் தானடி சொந்தம், என்னிலை நம்பிக்கை இல்லையாடி என கொஞ்சம் அதிகமாகச் சரசம் செய்கின்றார்.

உந்த செக்ஸ்க்காகத்தான் என்னோடை பழகிறியளோ என எனக்கு சிலவேளைகளில் சந்தேகம் வருது எண்டால், சரி அதை விட்டிடு என்பார், பிறகு திடீரென புதிசா முன்பொரு முறையும் செய்யாத விதத்தில் இன்பம் தருவார். அது எங்கை இதெல்லாம் படிச்சியள் எனக் கேட்டு நான் மாறி மாறி அவரின் உதடுகளையும் விரல்களையும் முத்தமிடுவதில் முடியும். கள்ளர்மாரி இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை என்றால், அப்ப விட்டிடுவமோ என்பார். என்ன பகிடியா விடுகிறியள் என எனக்கு கோபம் வந்தால், கொஞ்சம்பொறு என ஆறுதல்படுத்துவார்.

இப்படியாக மூன்றுவருஷம் கழிந்தபின்னர், பென்சன்காசு எதற்கும் போதாமலிருக்கிறது, சாப்பாட்டுக்கும் இடத்துக்கும் வசதியா எங்கா வது சீனியர் ஹோம் அப்பிளை பண்ண லாமோ என யோசிக்கிறன், அவளும் கஷ்டப் படுகிறாளாம், ஏதோ கட்டியிட்டன், மகனும் கவனிக்க மாட்டான் அதாலை இடமும் சாப்பாடும் கொடுக்கிறது என்ரை கடமை, வந்து ஒருமூலையிலை இருந்திட்டுப்போகட்டும் என யோசிக்கிறன் என்கிறார். அப்படி அவவோடை அவர் இருக்கப்போனால் நான் எந்த உறவும் வைத்திருக்க மாட்டேன். என்கிறேன்.

"நீ என்ரை நிலைமையை விளங்கி எனக்கு உதவிசெய்யாட்டால் நான் என்ன செய்யேலும், பார்வைக்குத்தான் ஆறடி மனிசன்நான், மெல்லிய மனசடி எனக்கு உடைந்து போயிடுவனடி, என்னை விளங்கிகொள்", எனக் கெஞ்சுகிறார். பிள்ளை களும் நண்பர்களும் எனக்குப் பைத்தியமா, இப்பவே வெட்டிவிடு என ஏசுகிறார்கள். ஆனால் என்னால் அவரின் உறவைவிட முடியாம லிருக்கிறது.

எதற்கும் கொஞ்சநாள் பிரேமை சந்திக்கா மலிருப்பது, ஒருமுடிவெடுக்க நல்லது என நினைக்கிறேன். அதை ஈமெயிலில் எழுதுகிறேன். சந்திக்காவிட்டாலும் கதையேன் என்கிறார். நான் பதில் போடவில்லை. எங்கு நிற்கின்றாய் என கோல் வந்தது. கடையில் நிற்கின்றேன் என்றதும் அங்கு வந்து வெவ்வேறு நிறங்களில் வேறுபட்ட தலைப்புகள் எழுதி சில பைல்களைக் கொண்டுவந்து தந்தார். அன்றைக்கு ஏதோ பில்லைக் காணேல்லை எண்டு தேடினாய், இந்த பைல்களிலை தனித் தனிய எல்லாத்தையும் அடுக்கிவை என்கிறார், எனக்கு மனம் கசிகிறது.

அதே கட்டத்தில் சுதர்சன் திரும்ப என்னுடன் சேர விரும்பம் தெரிவித்திருந்தார். அப்படி என்னால் வந்து மீண்டும் வாழமுடியாது என்பதை விளக்கி எழுதிய பிரதியை பிரேமுக்கும் காட்டுகின்றேன். காதல் உள்ள ஒருவர் இப்படி மனிசியோடை திரும்பப்போக மாட்டார். ஏமாந்து போகப்போறாய் கவனமாயிரு எனமகள் எனக்கு அட்வைஸ் பண்ணுவதைச் சொல்லி பிரேமின் மார்பில் முகம்புதைத்து அழுகின்றேன். அவரின் அன்பு வேணும் என அவரிடம் யாசிக்கிறேன். அவளுக்கு எங்கே எங்கள் காதல் விளங்கப்போகுது, என என் தலையைக் கோதி, கண்ணீரைத் துடைக்கின்றார், பிரேம். அவர் என்னை கைவிடமாட்டார் என்ற என்னுடைய நம்பிக்கை எனக்குள் மீண்டும் வலுப்பெறுகின்றது.

ஆனால், மனிசியுடன் குடியிருக்கப் போனபின், வருகிறேன் எனச் சொல்லிவிட்டு வராமல் விடும்போது எனக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை என ஆர்ப்பாட்டம் செய்கி றேன். அவ வீட்டிலிருந்தால் கதைக்கேலாது என்றபோது, அப்ப மனிசியிட்ட சொல்லு அல்லது நான் வந்து சொல்கின்றேன் என அடம் பிடிக்கிறேன். இரண்டுநாள் கழித்து வந்தபோது, எனக்கு முடிவுவேணும் என திரும்பத்திரும்ப நான்கேட்கிறேன். கிட்ட வராதை கொஞ்சிப்

போடுவன் என்கிறார், அவர். அந்தக் கொஞ்சல் என்னை இறுதிவரை கொண்டுசெல்லும் என்பது புரிந்த தப்பித்தலுக்கான அவரின் ஆயுதம் என எனக்குப் புரிந்ததால் நான் அன்று கிட்டப் போகவே இல்லை.

நாலுநாள் கழித்து, தொடர்புகொள்ள வேண்டாம் என திடீரென பொலிஸ் மூலம் செய்தி அனுப்பிவிட்டு, ஃபேஸ்புக்கையும் புளாக் பண்ணுகிறார்.

என்ன நடந்தது என்பது எனக்குப் புரியவேயில்லை. உலகமே அழிந்ததுபோல ஒப்பாரிவைக்கின்றேன் நான். சரி,காதலித்தார், பிறகு பிடிக்காட்டால் விடுகிறதிலை என்ன பிழை என்கின்றனர் சிலர், இன்னும் சிலரோ அவர் இளமையிலிருந்தே அப்படித்தான், என உதாரணம் சொல்லி பொம்பிளை நான் அல்லவா யோசித்திருக்க வேண்டும் என்கின்றனர். என்னதான் செய்ய முடியும், பேசாமல் மறந்துவிட வேண்டியதுதான் எனப் புத்திமதிசொல்லவும் ஒரு சிலர் மறக்கவில்லை. எப்படி உங்களை அவர் ஏமாத்தியிருப்பார் எண்டு என்னாலை சொல்லேலும், நான் நினைச்சாலும் இப்படிச் செய்யமுடியும் என ஒருவர் தன்ரை கெட்டித்தனம் சொல்ல, இன்னொருவரோ நாங்களும் இருக்கிறம், எங்களிட்டை ஒருத்தரும் வருகினம் இல்லையே எனப் பச்சாதாபம் கொட்டுகின்றார்.

வாழ்க்கையிலை சாத்திரம் கேட்காத நான் அதற்காகவும், பிராயசித்தங்களுக்காகவும் செலவுகள் செய்வதையும், பச்சோந்தியானதைச் சொல்லிச் சொல்லி அழுது புலம்புவதையும், துரோகத்தைத் தாங்க முடியாமல் படும் அல்லலையும், மறக்க முடியாமல் காத்திருந்து தவிப்பதையும், பார்த்து எனக்காகக் கலங்கிய என்சினேகிதி வினோ, பிரேம் தானாக அவளிடம் விழுந்த தருணத்தை இறுகப் பற்றிக் கொள்கிறாள்.

ஃபேஸ்புக் செய்திகள், ஈமெயில்கள், பின் அவற்றை அழித்து விட்டாளா எனச் செக் பண்ணல்கள், தனிமையில் சந்தித்தல்கள், புரிந்துணர்வற்ற மனைவி மாலா என்ற பச்சாதாபங்கள், இரண்டு அறைவாழ்க்கை என்ற புலம்பல்கள், பரிசு வழங்கல்கள் என அவருடைய லீலைகள் அத்தனையையும் எனக்காகச் சகித்து, ஏன் எனக்கு இப்படித் துரோகம் செய்தார் என அறிய வினோ விளைந்த போது, அதே "கான் ஐ காவ் எ "ஹக்?" என அவர் கேட்டாராம். அவளுக்கு அது உச்சியில் அடிக்க மேலும் அவளால் நாடகம் போட முடியவில்லை. நாலு கேள்வி நறுக்காய் கேட்டுவிட்டு கொடுத்த பரிசுகளையும் திருப்பிக் கொடுத்துவிட்டு வந்திருக்கின்றாள்.

அப்போதும்கூட அவள் கைகளைப்பற்றி தன் கைகளுக்குள் வைக்க முயற்சித்தாராம் என அவள் எனக்குச் சொன்னபோது, ஐம்பதைத் தள்ளிய சூடு காயமுதல் இருபத்தி ஐந்தா என என்னால் ஜீரணிக்க முடியவில்லை. ஆனால் அதுதான் கற்பனை உலகிலிருந்து நிஜத்துக்கு என்னைக் கொண்டுவருகின்றது. பொறுப்பான ஒரு தொழிலைச் செய்யும் நான், பிள்ளைகளை வழி நடத்திய நான், அதுவும் எனது ஐம்பதாவது வயதில் இப்படி ஒரு பொறுக்கியிடம் ஏமாந்திருக்கின்றேன் என்பது தெளிவாகப் புரிந்தது. என்னை என்னாலேயே மன்னிக்க முடியவில்லை.

சரி, இப்படி ஏமாந்தேன் என இன்னும் ஒருவர் சொல்லாமல் என்னால் காப்பது நடக்கக்கூடிய ஒருவிடயமல்ல, உலகிலுள்ள அத்தனை பேரின் முகமூடிகளையும் கழற்ற என்னால் முடியாது. ஆனால் பிரேமிடம் ஏமாந்தேன் என இன்னொருவர் நோகாமலிருக்க என்னால் இயன்றதைச் செய்ய வேண்டும் என முடிவெடுத்துக் கொள்கின்றேன், நான். மனதில் சற்று அமைதி வருகின்றது, முகத்தை நன்கு கழுவித் துடைத்துவிட்டு கொம்பியூட்டரின் முன்னால்போய் இருக்கின்றேன், நான்.

○○○

## பகிர்வோம்....



### ஈழமும் தமிழும்

மன்னார் பகுதியில் வாழ்ந்த ***சின்ன இபுறாகிம் மொகைதீன்*** என்பவர் அட்டவதானியாகத் திகழ்ந் துள்ளார். இவர் பாடிய பாடல்கள் கிடைத்திலது என்கிற பதிவுள்ளது.

ஒருநாள் இவர் அட்டவதானம் செய்யும்போது பாடிய பாடலொன்றினை, முகம்மது காசிம் என்பார் வேண்டுமெனவே பிழையாக எழுதிக்கொடுத்து அதிற் குற்றம் உள்ளது எனச் சாதித்தார் எனவும், அதனைத் தாங்கமுடியாதவராய் சின்ன இபுறாகிம் மொகைதீன் அவர்கள்,

***ஆவென்னு மட்சரத் தாதியென்றறியாத***

எனத் தொடங்கும் பாடலொன்றைப் பாடினார் என்றும் பதிவுள்ளது.

# வற்றாப்பளை கண்ணகி வழக்குரை காதை

-தீபச்செல்வன்

01

வண்டில் பூட்டி வந்து
வயல் வெளியிலிருந்து
கோவில் முற்றத்தில் பானை வைத்து
பாற்பொங்கலிட்டு
விடியும் பொழுதுவரை
கடல் நீரில் எரியுமுன் விளக்கின் ஒளியில்
முகம் பரப்பியிருக்க
ஏழு கன்னியரிலொருத்திபோலான என் தோழி
இம்முறையும் திரும்பவில்லை

குருதியூறி ஓலங்களால் நிரம்பிய
இதேபோலொரு வைகாசியில்
அவள் காணாமற் போனதும் இவ்வெளியிற்தான்

சுடுமணல்போல் இருதயம் தகித்துக் கிடக்க
இருண்ட தாழைமரங்களுக்குள்
கேட்கும் ஒற்றைக்குரல்கள்
அவள் குறித்தொரு இரகசியமும் சொல்லவில்லை

உடைந்த குரலில் ஆயிரம் கண்கள் கசிய
தனித்தலைபவனின் காலடிகளைத்
தொடரும் நாரைகளும்
மௌனம் கலைத்தேதும் பேசவில்லை

02

அன்று உன் முன்னே
குழந்தைகளை துரத்திச் சுட்டழித்த
ஹெலிகொப்டர்கள் இன்றுன்மீது
குருதி மொச்சையடிக்கும் பூக்களை
வீசக் கண்டு சிவக்கின்றனவுன் கருங்கண்கள்

பண்டார வன்னியன் படைவெல்கையில்
கண்களால் நகைத்த வன்னித் தாய்
ஓயாத அலைகளில் குதூகலித்தாளெனப் பாடிய
இடைச்சிறுவன் தொலைந்ததும் இக்கடலில்தான்

நீதிக்காய் மதுரையை எரித்து
கோபத்தை தணிக்க நீ வந்துறைந்த
வற்றாக் கடலில்
நம் பிணங்கள் மிதக்கையில்
எப்போதும் நகைக்கும் உன் தாமரை கண்கள்
வெகுண்டு துடித்தனவாம்

உன் முன் எதிரி எமை கொன்று வீசுகையில்
புன்னிச்சை காய்களால்
பறங்கித்துரையை துரத்தியபோல்
பகைவரைத் துரத்தியிருந்தாலென்ன?
உன் முன் எமைநோக்கி எதிரிகள் குண்டெறிந்தபோது
கள்வரின் கண்களை மறைத்ததுபோல்
பகைவர் கண்களைக் குருடாக்கியிருந்தாலென்ன?

நீ மட்டுமே பார்த்திருந்தாய்
அடிமையை எதிர்த்தவெம் முதுகுகளை கூனச் செய்தனர்
எம் வானத்துச் சூரியனை வீழ்ந்துருகச் செய்தனர்
எம் நட்சத்திரங்களைக் கருக்கினர்
உன் பூர்வீக ஜனங்களை நாடற்றவர்களாக்கினர்

நீ மட்டுமே பார்த்திருந்தாய்
கைப்பற்றிய என் குழந்தைகளை
யுத்த வெற்றிப் பொருட்களாய் காட்சியப்படுத்தியதை
சரணடைந்த என் சனங்களை
இன்னொரு தேச அடிமைகளாய் துன்புறுத்தியதை
வெள்ளைக் கொடி ஏந்திய என் போராளிகளின் மார்பில்
துப்பாக்கிகளால் துளையிட்டதை

மாபெரும் தாகம் நிரம்பிய நம் குரல்
உன் முன்பேதான் கரைக்கப்பட்டது
மாபெரும் தகிப்போடிருந்த நம் கனவு
உன் முன்பேதான் புதைக்கப்பட்டது.

உன் தலைவன் கோவலனை கொலை செய்கையில்
நீயடைந்த ஆற்றாத் துயரம்போல்
பாண்டிய மன்னனை தேடிச்செல்கையில்
நீயடைந்த வெஞ்சினம்போல்
உன் கணவன் குற்றமற்றவன் என வெகுண்டெழுந்து
நீ உடைத்தெறிந்த பொற் சிலம்புபோல்
நீதிக்காய் ஆவேசத்துடன்
கொதித்துச் சிதறிய மாணிக்கப் பரல்கள்போல்
புன்னகை கழன்று கண்ணீர் பிரவாகித்து
பெருங்கடலானவுன் கண்களைப் போல்
பொங்கி வழியுமொரு
வைகாசி விசாகப் பொங்கல் போல்
ஊதி வெடிக்கின்றன நம் இருதயங்கள்

03

முள்ளிவாய்க்காலெதிரே
நந்திக்கடலோரமிருந்து
ஆயிரங்கண்களால்
யவாற்றையும் பார்த்திருந்த சாட்சியே
நீ கண்டிருப்பாய்
என் காதலி என்ன ஆனாளென?

ஆடுகளுமற்று
பாற்புக்கை காய்ச்சி
உன் தலையில் பேனெடுக்கும்
இடைச் சிறுவர்களுமற்றிருக்கும் நந்தி வெளியில்
நூற்றாண்டுகளாய்த் தனிமையிருக்குமுன் போல்
திரும்பி வராத தோழிக்காய் உழல்கிறேன்

நீதிக்காய் வழக்குரைத்து
நெடுஞ்செழியனை நடுங்கச்செய்து
அநீதியை சாம்பாலாக்கிய நந்திக்கடலரசியே
காணமற்போன என் காதல் தோழியை மீட்க
முல்லைக் கடல் பட்டின
அநீதிச் சபைக்கு வந்தொரு வழக்குரைப்பாயா?

பண்டார வன்னியன்:
வெள்ளையருக்கு எதிராக
போரிட்ட வன்னி அரசன்.
ஓயாத அலைகள்:
இலங்கை இராணுவத்தை
தோற்கடித்து முல்லைத்தீவை
கைபற்றிய விடுதலைப்
புலிகளின் இராணுவ
நடவடிக்கை. வற்றாப்பளை:
மதுரையை எரித்த பின்னர்
கண்ணகி ஈழத்தில் வன்னியில்
வந்து இறுதியாக தங்கிய ஊராக
நம்பப்படுகிறது. இது ஈழ இறுதி
யுத்தம் நடந்த முல்லைத்தீவு
மாவட்டத்தின் முள்ளிவாய்கால்
அருகிலும்
நந்திக்கடல் வெளியிலும்
உள்ளது.

# வடக்கிற்கொரு அதிவேக பாதை

ஹேமசந்திர பதிரன

கடவுள் எனக்கு
வரமொன்றை அளித்தால்
வடக்கிற்கொரு
அதிவேகப் பாதையைத் தான்
நிச்சயமாகக் கேட்பேன் நான்.

வடக்கு மக்களின்
மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளிலும்
கவலையான நிகழ்வுகளிலும்
கலந்து கொள்ள வேண்டும் நான்
அவர்களின் மகிழ்வைப் போன்றே
கவலையும் பகிர்ந்து கொள்ள
விருப்பமுடையவன் நான்

வடக்குப் புத்தக வெளியீட்டு விழாக்கள்
இலக்கிய கலந்துரையாடல்கள்
கவியரங்குகள் இன்னும்
பற்பல இலக்கிய நிகழ்வுகளில்
கலந்து கொள்வது மகிழ்ச்சியே தரும்

ஆங்கிலம் கற்பதற்கு
ஆசிரியரின்றி தவிக்கும்
வடக்கு மாணவருக்கு நான்
ஆங்கிலம் கற்பித்து
தொண்டு செய்ய வேண்டும்.

இன நல்லுறவை வளர்ப்பதற்கென
சிங்களம் கற்க விரும்புவோருக்கு
சிங்களம் கற்பித்து
இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த
பங்களிப்பு செய்ய விரும்பும்
தமிழபிமானி நான்.

# அரங்கில் சபையினர் வந்தனம்



சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
நிகழ்கலைத்துறை,
பாண்டிச்சேரி பல்கலைக்கழகம்


**பலர் ஒன்று சேர்ந்திருக்கின்ற அவையின் முன் நிகழ்த்தும் நிகழ்த்துனர்களின் திறனைப் பார்த்து அவர்களை கௌரவிக்கும் பார்வையளார்கள் என்று குறிப்பிடப்படுபவர்களை முன்நிறுத்தி, நாடக அரங்கில் பார்வையாளர்களை புரிந்து கொள்ளும் தன்மையில் இக்கட்டுரை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வைப் பார்ப்பவர் 'அவையில் அமர்ந்திருப்பவர் – அவர்களுடைய முக்கியத்துவம் என்ன?, நாடகச் செயற்பாட்டில் பார்ப்பவர்களின் செயல் நிலை என்ன?, இந்திய நிலையில் எவ்வாறு முக்கியம் பெறுகின்றனர்?, நாடக கோட்பாட்டாளர்கள் எவ்வாறு பார்ப்பவர்களை முன்நிலைப்படுத்தினர், அரங்க வெளி பார்ப்பவர்களின் தன்மையை எவ்வாறு மாற்றியமைகின்றது என்பது தொடர்பான தேடலுக்கான முதல் அடி எடுத்து வைப்பாக இக்கட்டுரை அமைகின்றது.**



அவையினர் முன் நிகழ்த்தும் கலை அரங்கக்கலையாகும். அரங்கக்கலை என்னும்போது குறிப்பாக நாடகத்தையே குறிக்கின்றது. நாடகம் என்று கேட்டதுமே நடிகர்கள் நடிப்பதும், பாட்டுப்பாடுவதும், வசனம் பேசுவதும் என்ற எண்ணம்தான் முதலில் மனதில் எழும். அவையினர் – நாடகக்கலையின் பிரிக்க முடியாதவர்கள் மட்டுமல்ல இன்றியமையாதவர்களும் கூட.

## I

இக்கலையினை அறிவியல் நிலைப்படுத்திப் பார்க்கும்போது பிரதான இரு விடயங்கள் தெளிவுபெறும். ஒன்று நாடகம் மற்றையது அரங்கம். இவ்விரண்டிலும் நடிகர்களும்,பார்வையாளர்களும் இணைந்தே இருப்பர். இந்த இருவர்களின் கூட்டுச் செயற்கையின் உயிர்ப்பே இக்கலையின் உயிர்நிலையாக அமைகின்றது.



நாடகமும், அரங்கியலும் என்ற சொற்களுக்கான ஆங்கிலப் பிரயோகம் முறையே DRAMA & THEATRE என்பது,கிரேக்கச்சொல்லடியாக வந்ததன் பொருள் "A thing Done" ' A seeing Place' என்பதாகும். இதன்படி நாடகம் என்பது நிகழ்த்தப்படுவது எனவும் அரங்கு பார்க்குமிடம் எனவும் பொருள்படும்.

நாடகம் நிகழ்த்தப்படுவதாயின் அது நிகழுமிடமாகிய அரங்கைத் தன்னோடு கொண்டிருக்கிறது. அரங்கு பார்க்குமிடமாயின் அது

பார்ப்பதற்கான நாடகத்தையும் தன்னுள்ளே கொண்டிருக்கிறது. ஆகவே பார்ப்பதற்கான செயற்பாடு நிகழ்த்தப் படுவதனால் பார்க்கப் படுகின்றது. நிகழ்த்துவதற்கான செயற்பாடு பார்க்கப்படுவதனால் நிகழ்த்தப்படுகின்றது.

நாடக நிகழ்த்துதல் என்பதே - மேடை வெளியில் உலாவுபவர்கள் அவையில் வந்திருப்பவர்களுடன் செயற்படுத்தும் கொண்டு - கொடுத்தல் செயற்பாடாகும்.

அரங்கச் சிற்பமோ, ஒளியமைப்போ, இசையமைப்போ, ஆடையணிகலன்களோ, ஒப்பனையோ இன்றி நாடகம் நடைபெறும் என்பதோடு, இவற்றுள் ஒன்றோ, ஒன்றிக்கு மேற்பட்ட அம்சங்கள் இல்லாமல் நாடகம் தோன்றியிருக்கின்றது. அழியாத நாடக இலக்கியங்கள் தோன்றியிருக்கின்றன என்பது நாடக வரலாறு தருகின்ற செய்தியாகும். ஆனால் நடிகர்களும் அவையினரும் இல்லாது நாடகம் நிகழ்ந்ததில்லை. அவ்வாறு நிகழ்த்தவும் முடியாது. நடிப்பு - அவை இவ்விரண்டும் அரங்கக் கலையின் தவிர்க்கமுடியாத அம்சங்கள் ஆகும்.

இது ஒரு குறிப்பிட்ட தளத்திலே நடை பெறும். அது உயர்வான தளமாக இருக் கலாம், சமதரையாக இருக்கலாம் அல்லது தாழ்நிலமாக இருக்கலாம். சதுரமாக, நீள் சதுரமாக, முக்கோணமாக, வட்டமாக போன்ற அமைப்பிலும் இருக்கலாம். இத்தளம் எவ்வாறு இருப்பினும், அது வெளியாகக் காணப்படும் கதியை ஒரு இயக்கத்தினூடாக அர்த்தப்படுத்திப் பார்க்கும்போது ஆற்றுகை இடம்பெறுகின்றது. நாடகம் என்பது வெளியை அர்த்தமுள்ள நிகழ்வாக்குவதாகும்.

I

நாடக சாலையில் அவையினரை நிகழ்ச்சி பார்க்க வந்திருப்பவர்கள் என்று ஒதுக்கி வைக்க முடியாது.

பார்வையாளர்கள் தம் காசையும் நேரத் தையும் செலவழிக்க வழியில்லாமல் அரங்கினுள் நுழைகின்றார்கள். இதற்காக பணத்தையும் நேரத்தையும் செலவழித்து ஒத்திகை நடத்தி ஒரு நாடகம் தயாரிக்க வேண்டுமா என்ன?

நாடகம் அர்த்த பொருளுடன் விளங்குமாயின் அது பொழுதுபோக்கு என்ற தன்மையில் இருந்து அறிவியல் தன்மைக்கு எம்மை இட்டுச்செல்லும்.

நாடகம் எழுதுவோர் நாடக அரங்கை மனதில் வைத்துக்கொண்டே எழுத வேண்டும். நடிகர் மேடையில் நடிக்கத்தக்க காட்சிகள் பார்வையாளரின் மனநிலை என்பனவற்றைக் கருத்திற்கொண்டே நாடகம் எழுதவேண்டும். பார்வையாளரின் உள்ளத்தில் என்னாகுமோ என்னும் ஏக்கத்துடனும், எதிர்பார்ப்புடனும் கதை நாடகமாக்கப்படவேண்டும். நாடகம் கண், செவி என்னும் இரு புலன்களினூடாக நுகரப்படுவது.

ஒரு அரங்காற்றுகையில் நெறியாளரும் அந்த ஆற்றுகையில் கலந்துகொள்ளும் கலைஞர்களும் இணைந்து இரண்டு விடயங்களில் கவனத்தை செலுத்துவார்கள்.

1. இலக்குப் பார்வையாளர்
2. அவர்களுக்கு முன் வைக்க இருக்கும் கரு அல்லது தகவல்

II

பார்வையாளர் என்னும் தமிழ் சொற் பதத்திற்கு ஆங்கில சொற்பதம்'Audience' என்பதாகும். ஆங்கிலத்திலும் தமிழிலும் இது Nounஆக பெயர்ச்சொல்லாகத் தொழிற்படும். இச் சொல்லினுடைய கருத்து என்னவெனில் நாடகம் அல்லது இசை நிகழ்ச்சி,மேடைப்பேச்சு, தொலைக்காட்சி, முதலியவற்றைப் பார்ப்போர் / கேட்போர் கூட்டம் என்பது அகராதியின் குறிப்பாக அமைந்துள்ளது.

Audience என்னும் ஆங்கிலச் சொல்லுக்கான ஒத்த சொற்பிரயோகங்களாக பின்வருவனவற்றை அவதானிக்கலாம். viewers, addressees, listeners, onlookers,watchers, hearers, consultation, appointment, hearing

இச்சொற்களைத் தனித்தனியே உன்னிப்புடன் நோக்கும்போது அதன் அர்த்தம் சில மாறுபட்ட தன்மையுடையதாகக் காணப்படும்.

பார்வையாளர்கள் என்பது குறிப்பிட்ட நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்கள் கூட்டத்தினைக் குறிக்கின்றது. இம்மக்கள் கூட்டம் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்பவராக இருப்பார்கள். அந்த நிகழ்ச்சி ஒரு கலை



வெளிப்பாடாக இருக்கலாம். இந்நிகழ்வு அதன் வெளிப்பாட்டுத் தன்மையில் அல்லது அதன் ஊடாடும் தன்மையில், அந்நிகழ்வில் கலந்துகொள்பவர்களை வெவ்வேறு பெயர்களில் அழைப்பார்கள்.

இலக்கியத்துடன் ஊடாடுபவர்களை வாசகர்கள் என்றும், வானொலி நிகழ்ச்சியோடு இணைந்திருப்பவர்களை கேட்போர் (Listeners) என்றும், தொலைக்காட்சியுடன் இணைந்திருப்பவர்கள் நேயர்கள் என்றும் திரைப்படத்துடன் இணைந்திருப்பவர்கள் ரசிகர்கள் என்றும், அரங்க ஆற்றுகையுடன் தொடர்பு கொண்டிருப்பவர்களை பார்வையாளர்கள் என்றும் அழைக்கும் தன்மை எம்மிடையே உண்டு. இந்த மாற்றுத்தன்மைக்கான காரணம் நிகழ்வின் வெளிப்படுத்தும் ஊடகத்தின் தன்மையைப் பொறுத்தது.

பார்வையாளர்கள் பங்குபற்றும் உறுப்பினர்கள் என்றவகையில் வித்தியாசமான வழிகளில் வித்தியாசமான கலை வெளிப்பாட்டுடன் இணைந்திருப்பார்கள்.

சினிமா, தொலைக்காட்சிக்கு பார்வையாளர்கள் போன்றும் வானொலிக்கு கேட்பவர்களும் நேரடியான தொடர்பற்று வேறுபட்டு நிற்கும் நிலை நாடகப் படைப்புக்கு இல்லை. இதில் பார்வையாளர்களும் கேட்பவர்களும் ஏற்பவர்களாக இருப்பார்கள். நாடக அரங்கில் பார்வையாளர்கள் சங்கம சிருஷ்டி கர்த்தாக்கள் ஆகின்றனர்.

ஒரு சில நிகழ்ச்சியில் மட்டும் பங்கு பெறவைப்பதற்காக குறிப்பிட்ட பார்யைாளர்களை அனுமதிக்கின்றனர். சாதாரண கரவொலிக்காகவும். விமர்சனங்களுக்காகவும் நிகழ்ச்சி அவர்களை அழைக்கின்றது.

இந்தப் பார்வையாளர்களின் உட்பார்வை/ நுண்ணறிவு வடிவம் கலைகளின் வடிவத்தையும் பாதிப்படையச் செய்யும். படங்கள், காண்பியக் காட்சிகள்,வானொலி நிகழ்ச்சிகள், மற்றும் பிற வடிவங்கள் பார்வையாளர்களின் விமர்சனங்கள் மற்றும் பரிந்துரைகளால்பாதிப்புக்குளாகும்.

இன்னும் சில முன்னேற்றம் அடைந்துள்ள தென்ற நிலையில் பெரும்பாலும் பொதுவாக பங்குபற்றும் பார்வையாளர் நிலை என்பது நான்காவது சுவராகவே காணப்படுவர்.

IV

நாடகத்தின் முழுப்பரிமாணத்தை பூரணப் படுத்துபவர்கள் நடிகனும், பார்வையாளனும். பார்வையாளர் இன்றி ஆற்றுகை/நிகழ்த்துகை முழுமை பெறுவதில்லை.நிகழ்த்துகைக் களத்திலிருந்து வெளியிடப்படும் உணர்வுகளைப் பார்வையாளர்கள் ஏந்தி, தம்முடைய எதிர்வினையை அரங்கிற்கு அனுப்புகின்றார்கள். அது புன்னகையாக அமையலாம், அல்லது பலத்த கரவொலியாக அமையலாம் அல்லது மனதை வருடக்கூடிய சோகமாக இருக்கலாம்.

அதாவது நடிகனுக்கும், பார்வையாளனுக்குமிடையில் இடைவிடாத ஊடாட்டம் நிகழ்வதன் மூலமே நாடகம் நிகழ்கின்றது. ஒன்றால் ஒன்று வளரும். ஒன்றில் ஒன்று தங்கி இருக்கவேண்டிய நிலை இருக்கின்ற அதேவேளை ஒன்றை ஒன்று வளர்த்துவிடுகின்றது. இந்த ஒரு ஊடாட்டம் சமூக அக்கறையுடையதாக, களிப்பூட்டுவதாக, அல்லது அறிவூட்டுவதாக அமையும்.

அரங்கில் நடிகனுக்கு சமனாக பார்வையாளனுக்கு அந்தஸ்து கொடுக்கப் படவேண்டும். நடிகனை எப்பொழுதும் விழிப்புடன் செயற்படுத்துவதில் பார்வையாளனின் பங்களிப்பு முக்கியமானது. ஆகவே நாடகத்தில் நடிகன் எப்பொழுதும் விழிப்புடன் செயற்பட வேண்டியவன். அவன் நாடகம் பார்க்க வந்திருக்கும் அவையினரின் பார்வையை ஆள்பவன். உண்மையில் அவையில் நாடகத்தைப் பார்க்க வந்திருப்பவர்களின் பார்வையை நடிகன் ஆள்வதால் அவனே பார்வையாளராக இருக்கவேண்டும்.

(பார்வையாளர் என்னும் சொல், பார்வையினை அவர்கள் ஆள்கின்றார்கள் என்னும் கருத்தினைத் தருகின்றது. உண்மையில் அவர்கள் பார்வையை ஆள்வதில்லை. நிகழ்த்திக் காட்டுபவர்கள்தான் பார்வையை ஆள்கின்றார்கள். நிகழ்த்திக்காட்டுபவர்களை நெறிப்படுத்துபவர்தான் இவர்களுடைய பார்வையை ஆள்பவர்கள். இவர்களைப் பார்ப்பவர்கள் அல்லது பார்ப்போர் எனக்கொள்வது பொருந்தும் என பேரா.கா.சிவத்தம்பி அரங்கோர் அறிமுகத்தில் குறிப்பிட்டுள்ளார்.)



பார்வையை ஆள்வது என்பது இலகுவான விடயம் அல்ல. பார்வையை ஆள்பவன் என்பதால் அவனது பார்வை விழிப்புடன் இருக்கவேண்டும் ஏனெனில் அவன்மேல் பல பார்வைக்கோடுகள் விழுந்தவண்ணம் இருக்கும். விழும் பார்வைக் கோடுகளை ஏந்தித் தனது பார்வைச் செயற்றிறனை மேடைத்தளத்தில் வெளியிடுபவன். இந்த விழிப்பு நிலையில் நாடகம் நகரும்.

நடிகன் அப்பாத்திரத்தை விளங்கி அதனை விளக்குகின்றான். அதேகணம் தன்னையும் விளக்க முற்படுகின்றான். ஆகவே நடிகனுடைய விழிகளின் பயணப்பாதை விழிப்புடன் அமைந்திருக்கவேண்டும். நடிகன் இரண்டு பரிமாணங்களை தன்னுள் மாற்றுகின்றான் என்றால் அது அவையில் வந்திருக்கும் பார்ப்பவர்களுக்காகத்தான்.

நடிகன் பார்ப்பவர் முன் தோன்றுதல் என்பது தவிர்க்கமுடியாத ஒன்று. நாடகத்தில் அவனின் தோற்றம், இயக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. அதாவது அவனது உடல் தோற்றத்தையும், அவன் பலர் முன் தோன்றுவதையும் குறிக்கின்றது.

அவையினர் நிலையில் இருந்து பார்க்கும் போது நடிகர்கள் தாம் ஏற்கும் பாத்திரங்களை மேடையில் தோன்றி தனது அகச்சூழலை, மேடையில் அமைக்கப் பட்ட புறச்சூழலோடு இணைத்துக் காட்டுகின்றார்கள்.இதில் பல பாத்திரங்கள் தோன்றும்போது மற்றொரு கதாபாத்திரங்கள் எதிர் செயலாற்ற, அச் செயலுக்கு முந்திய பாத்திரம் மாற்றுச் செய லாற்ற, என நாடக ஓட்டம் தொடர்கின்றது. செயலாற்றலைக் கொடுக்கும் கதாபாத்திரம் எது? அதனை பெறும் பாத்திரம் எது? அதனைப் பெற்று திரும்பக் கொடுக்கும் பாத்திரம் எது? என்பது பார்வையாளர் நிலையில் கவனிப்பில் இருக்கும். இச் செயல்நிலை, - பாத்திரங்கள் தங்களுக்கு நேருக்கு நேர் ஈடுபடுகின்றார்களா?, பங்கிட்டுக்கொள்கின்றார்களா?, மாறுபடுகின் றார்களா? என்பதுடன் பாத்திரங்களின் அகச்சூழலை அறிந்துகொள்ளவேண்டும்.

ஒவ்வொரு தருணத்திலும் நிகழும் நிகழ்வுகளை அரங்கில் உள்ள அனைவருமே பகிர்ந்துகொள்ள வேண்டும். உள்ளுணர்வளவில் மட்டுமின்றி உடலுணர்வளவிலும் நிகழும். எத்தனை கதாபாத்திரங்கள் தோன்றுகின்றனவோ அத் தொடர்பு அத்தனை கதாபாத்திரங்களிடையேயும் சமமாக அமையவேண்டும். உடல் நிலைகள் நிற்கும்போது மட்டுமின்றி, திரும்பும்போதும் அதனைக் கவனிக்க வேண்டும்.

மேடையில் உள்ள பாத்திரத்தின், பேச்சின் கவனத்தை ஈர்த்துக்கொள்வது இயல்பு. மேடையில் உள்ள எல்லாப் பாத்திரங்களின் போக்கையும் அவையினர் உணர வேண்டியிருப்பதால், அதற் கேற்ப நடிகர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்வது முக்கியம். நடிகர் நகரும்போதும் நடிகர் தம்மைப் பலப்படுத்த வேண்டும்.

நகரும்போதும் உடலின் நிலையை கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த நகருதல் பாத்திரங்கள் தொடர்பையும் அதன் நிகழ்த்துதல் செயற்பாட்டையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்த்தும். இவற்றைவிட பாத்திரங்கள் மேடைப் பொருட்களுடன் தொடர்புகொள்ளுதல் என்பது முக்கியமானதாகும். இவ்விடயங்களை பார்ப்பவர்கள் அவதானித்த வண்ணம் அமர்ந்தி ருப்பார்கள்.

அரங்கின் நகர்வுகளிற்கு அர்த்தம் கண்டு பிடிக்க பார்ப்பவர் முனைவார்கள். ஒரு குறிப் பிட்ட பரந்த கால இடைவெளியை, குறிப்பிட்ட கணத்திற்குள் ஆற்றுகை நிலைக்கு கொண்டு



வரும்போது அது அர்த்தம் பொதிந்ததாக இருக்கவேண்டும் என்று பார்ப்போர் நினைப்பது என்பது முக்கிய விடயமாகும்.

அரங்கக் கலை பார்வையாளர்களை ஈர்க்கும், எண்ணப்பதிவுகளை ஏற்படுத்தும், மனதை முறுக்கும், எண்ணங்களை சுத்தமாக்கும், செயற்பட வைக்கும், காலத்தையும் தளத்தையும் தாண்டி நிற்கும்.

இதனாலேயே அவையினரை இந்திய மரபில் ஸஹ்ருதயன் என்று குறிப்பிட்டு உயர்ந்த இடத்தில் வைத்திருக்கின்றது. நாடகசாலை ஸஹ்ருதயர்கள் சங்கமிக்கும் சங்கமமாகும்.

எவன் ஒருவன் ஒருவருடைய மகிழ்ச்சியைக் காணும்போது தானும் மகிழ்கிறானோ, துயரத்தைக் காணும்போது துயர் அடைகின்றானோ அவனே நாடகம் பார்க்கத் தகுதியானவன். நாடகத்தைப் பார்த்து அதனை ரசிப்பவர்களுக்கு பரதமுனிவர் கொடுக்கும் பெயர் ஸஹ்ருதயன்.

ஒரு சிருஷ்டி கர்த்தாவைப் போல, அவனது உள்ளம் அனுபவிக்கும் மனநிலையில் வேறுபடுகின்றது. இத்தன்மையில் தளம், காலம் என்பவற்றில் இருந்து அவன் விடுபட்டுச் சிருஷ்டியின் தளம், காலம் என்பனவற்றிக்குச் செல்கின்றான்.

மற்றைய கலையை விட நாடகக்கலை சிருஷ்டிக்கும்போதே சிருஷ்டிக்கும் கலையும் இணைந்து மேடையில் பார்வையாளர்கள் முன் நிகழ்வதாகும்.

காளிதாஸன், பாஷா போன்ற மகாகவிகளின் நாடகங்கள் ஸஹ்ருதயர்களின் முன்னால் அரங் கேறின.

V

உலக நாடக வரலாற்றினைப் பார்க்கும்போது எப்போதெல்லாம் அரங்கும் அவையினரும் நெருக்கமான தொடர்பு கொண்டு நிற்கின்றதோ அப்போதெல்லாம் உயர்ந்த நாடகப்படைப்பும் நாடக இலக்கியமும் தோன்றியுள்ளது.

பார்ப்போரது பங்களிப்பு என்பது அரங்கக் கட்டிட அமைப்பிலும் தங்கியிருக்கின்றது. மேற்கத்தைய அரங்கவரலாற்றில் கட்டிட அமைப்பு முறைகள் செவ்வனே வளர்ந்து வந்துள்ளதையும் பார்வையாளருக்கான இடமாற்றத்தையும் கால மாற்றத்தினூடு அவதானிக்கலாம்.

கிரேக்க அரங்கக் கட்டமைப்பு திறந்த வெளியமைப்பைக் கொண்டது. கிரேக்க அரங்கம் அதீனிஸ் நகரப் பார்ப்போரை ஒரே நேரத்தில் உள்ளடக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. மலைகளுக்கு நடுவே



வட்டவடிவமான ஆடுகளத்தைச் சுற்றி, கல்லால் வடிவமைக்கப்பட்ட ஆசனங்களை உடையதாகப் பார்ப்போரது இடம் அமையப்பெற்றிருந்தது. குன்றுகளின் சரிவுகளை படிக்கட்டுக்களாகக் கொண்டது. இம்மரபில் தலைசிறந்த பார்வை யாளனின் தன்மையை விளக்க கதாதிஸ் கோட் பாடு என்பதை அரிஸ்ரோட்டில் முன்வைத்தார்.

உரோம அரங்கில் 20000 வரையிலான பார்ப்போர் இருந்துபார்க்கும் வசதி இருந்ததை அவ்வரங்கக் கட்டமைப்பில் இருந்து அறியலாம். இவ்வரங்கில் பார்ப்பவருக்கான இருக்கையிடம் அரைவட்டவடிவில் அமையப்பெற்றிருந்து. நடிப்பிடத்தை சுற்றி மூன்று பக்கமும் பார்ப்போர் பார்க்கும் தன்மை இருந்ததை அவதானிக்கலாம்.

மத்திய கால அரங்கு இரு வேறுபட்ட இடங்களில் நடைபெற்றதால் பார்ப்போரும், இருவேறுபட்ட தளங்களில் அமர்த்தப்பட்டனர். ஒன்று உள்ளக அரங்கு இரண்டு திறந்த வெளி அரங்கு. உள்ளக அரங்கு கிறிஸ்தவ தேவால யத்தில் இடம்பெற்றதால் அங்கு பார்க்க வந்திருப்போர் பொதுவாக பக்தர் கூட்டத்தி னராகவே கருதப்பட்டனர்.

தேவாலயத்தில் இருந்து வெளிவந்த நாடக ஆற்றுகை மக்கள் கூடும் இடத்தில்



நிகழ்த்தப்பட்டது. அது சந்தையாக இருந்திருக் கலாம், தேவாலய முன்றலாக அமையலாம், வீதியாக அமைந்திருக்கலாம். ஆகவே மக்கள் பார்ப்பதற்காகவே நாடகத்தை நிகழ்த்தவேண்டிய தேவையை இக்காலத்து நாடக முறையில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது.

எலிசபத் கால அரங்கப் பார்ப்போர் இரு வேறு அரங்கை நோக்கிச் சென்றனர். ஒன்று திறந்த வெளி அரங்கு, இரண்டாவது மண்டபங்களாக கட்டப்பட்ட உள்ளரங்குகள். அறுகோண வடிவமான குளோப் வடிவமான அரங்கில் பார்வையாளர்கள் சுற்றி அமர்ந்திருக்க நடுவில் விரிந்த மேடையில் ஷேக்ஸ்பியரின்



அமர காவியங்கள் அரங்கேறின. இக்கால அரங்குகளில் 2000, 3000 பார்ப்போரைக் கொள்ளக் கூடியதாக இருந்ததை அவதானிக்கலாம்.

VI

மேற்கத்தைய நாடக வரலாற்றில் அரங்கியல் சார் கோட்பாடுகளை முன்மொழிந்தவர்கள் பார்போருக்கான முக்கியத்துவத்தை முன் வைத்தே தமது கோட்பாடுகளை முன் மொழிந்துள்ளனர்.

இதன்பின் தோற்றம் பெற்ற மூன்று பக்க மும் அடைக்கப்பட்ட நடிப்புத் தளம் ஒரு பக்கத்தை பார்ப் பதற்காக மட்டும் விட்டு வைத்தது. தியேட்டர் ஒலிம்பிக்கோ என்பதே அதன் தன்மையிலான முதல் அரங்காக தோற்றம் பெற்றது.



'ஹென்றி இப்சனு'டைய நாடகங்களை பார்ப் பவர்கள் சமூக உறவு களைப் பற்றி உன்னத முறுகியலைப் பார்த் தார்கள். கற்பனைக் கதைகளையும் ஐதீகங்களையும் பார்த்து வந்த மக்களிடையே இப்சனின் இத்தகைய நாடகமுறைமை புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது. பார்ப்ப வரிடையே மனித செயற் பாட்டின் தன்மைகளை அவர் முன் வைத்தார். பொம்மைவீடு, பேய்கள், சமூகத்தின் தூண்கள் என்பன இவருடைய பிரசித் தமான நாடகங்கள்.



உண்மையான நடிப்பு முறையினூடாக பார்ப்பவரை நாடகத்தினுள் ஈர்க்கவேண்டும். உண்மையான நடிப்புமுறையை பார்க்க வேண்டும் என்ற சிந்தனை முன்வைத்தவர்தான் **'ஸ்ரனிஸ்லா வோஸ்கி.'** நடிகர்கள் எவ்வாறு பாத்திரத்தை உணர்கிறார்களோ அவ்வாறே பார்ப்பவர்களும் உணரவேண்டும் என்ற சிந்தனையில் நடிகனை பயிற்றுவித்தவர்.

பார்வையாளர்களும், நடிகர்களும் செய்யும் விவாதக்களமாக நாடகத்தை கருதினார் மேயர் ஹோல்ட். பார்ப்பவர்கள் தாங்கள் விரும்பிய இடத்தில் இருக்கலாம், ஏனெனில் இவருடைய அரங்கில் பார்ப்பவர்களாக மட்டுமல்ல அவர்கள் இன்றியமையாதவர்களாகவும் கருதப்பட்டார்கள். அத்துடன் அரங்கினை ஆளுகை செய்கின்ற பார்ப்பவர்களாக அரங்கினை உருவாக்கினார். அரங்க மாயை என்பது பார்ப்போரை அறிவு பூர்வமாக சிந்திக்க வைக்காது. அதனால் அறிவுபூர்வமாகவும் விவாதிக்கவும் தூண் டுவதான அரங்கை அவர் உருவாக்க முயற்சி செய்து, நடிகர் களை தயார்ப் படுத்தியதால் இவருடைய அரங்க முறைமையை உடற்பொறிமுறை அரங்காக கருதப்பட்டது.



குறியீட்டு வாதத்தின் முன்னோடியான 'அடொல் அப்பியா' ஒளியமைப்பு மூலம் நாடக உணர் நிலையை பார்ப்பவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்ற சிந்தனையால் பார்வையாளர்களை புதிய சிந்தனைக்கு இட்டுச் சென்றவர். இவருடைய புதிய சிந்தனையூடாக பார்ப்பவர்கள் குறீயீட்டு ரீதியான நாடக உண்மைகளை கண்டறிய முயற்சித்தார்கள்.




காவியப்பாணி அரங்கு பார்ப்பவர்களை உணர்வுக்கு உட்படுத்தும் அதேவேளை அவர்களை அறிவுபூர்வமாக சிந்திக்க வைப்பது. இத்தன்மையினை 'பிரைக்ட் கீழைத் தேசத்தில் இருந்து பெற்றுக் கொண்ட அதேசமயம், அதனை தொலைப்படுத்தல் என்றும் குறிப்பிட்டார்.

நடிகரோடு இணைந்து பார்வையாளர் அதே உணர்வுடன் அழுவதை பிரைக்ட் காட்டு மிராண்டித்தனம் என விமர்சித்தார். இதற்கு இவர் பல உத்திகளை பயன்படுத்தினார்.

1. கதைசொல்லுதலில் எடுத்துரைக்கும் தன்மையினை கையாளுதல்.
2. நாடகக் காட்சிகளை துண்டு துண்டுகளாக அமைத்தல்.
3. ஒரு தொனிப்பொருளை நோக்கியதாக இருக்கும்.
4. அரங்கின் வளர்ச்சி துண்டம் துண்டமாக இருக்கும்.
5. தீர்வுக்குரிய வழியை நோக்கிச் செல்லும்.
6. ஆராயும் தன்மையுடையது.

இதனால் பார்ப்பவர்களை புறவயமாகச் சிந்திக்கத் தூண்டுவதாக அமையும்.



நடிகன் தன்னுடைய ஆற்றுகை முறையில் வித்தியாசப்படுத்தும்போது பார்ப்பவர்கள் அவற்றினூடே சிந்திக்கத்துண்டியது. இவற்றால் பார்ப்பவருடைய சிந்தனைப் போக்கினை மாற்றியமைத்தார் பிரைக்ட்.

அசைவு, குரல், லயம். ஒளி, வெளி என்பன ஆற்றுகைக்கான பிரதான மூலகமாகக் கருதும் குரட்டோவெஸ்கி நடிகர், பார்ப்போர் என்போரது இரு மன ஒருமைப்பாடே ஆற்றுகைக் களம் என்றார். அரங்கு சம்பந்தப்பட்டவர்கள் ஒரு குழுவாக வாழவேண்டும் என்றும் அந்த அனுபவங்களை ஒன்றாகப் பெறவேண்டும் என்னும் முறையினை இவர் பின்பற்றினார். பரிசோதனை முயற்சிகளில் பார்ப்போரும் நடிகரும் மிக நெருங்கியவராக்கினார். இந்த நெருக்கத்தினால் மிக நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தினார். சடங்கு தனிமனித தூய்மையை வலியுறுத்துவன. அரங்கும் அதேநிலையில் செயற்படவேண்டும் என்ற சிந்தனையில் செயற்பட்டார்.



நாடகத்தைப் பார்ப்போர் தங்களைத்தாங்களே பார்த்துக்கொள்வதற்கான வழிகாட்டுதலாக அமையவேண்டும் என்பதாகும். இது பார்ப்போருக்கும் நடிகருக்கும் இடையே புதிய விதமான உறவை ஏற்படுத்தியது. நடிகருடைய திறமை மூலமாக கதையினுடைய ஆன்ம உயிர்ப்புக்குள் பார்வையாளர்கள் செல்வார்கள்.

பார்ப்பவர்கள் அரங்கென்று சொல்லி ஒரு அறியாத அரங்கைப் பார்ப்பதாகவே ஒகஸ்ராபோலோ கண்ணுக்கு புலனாக அரங்கில் பார்ப்பவர்களை நாடகத்துள் ஒன்றவைத்தார்.

வாத விவாத அரங்கில் நாடகம் நிகழ்வதை பார்ப்பவர்கள் அறிவார்கள். அரங்க நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காகவே அரங்கிற்கு பார்ப்பவர்கள் வருவார்கள். நாடகத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரைக்கும் நடிகனே தீர்மானிப்பான். இறுதிக்கட்டத்தினை நெறிப்படுத்துபவனாக பார்ப்பவர் அமர்ந்திருப்பார். நடிகனுக்கும் பார்ப்பவருக்கும் இடையில் நடைபெறும் கருத்துப் பரிமாற்றத்தினால் இறுதிக்கட்ட நிகழ்வு அமைந்திருக்கும். பார்ப்பவர்களை பொறுத்தளவில் நடிகனை கதாபாத்திரமாகப் பார்ப்பர். ஆனால் நடிகன் தன்னையும் பாத்திரத்தையும் பிரிக்கின்ற சந்தர்ப்பத்தில் பார்ப்பவர்கள் நாடகத்தினுள் நுழைவதற்கான சந்தர்ப்பம் அமைவதாக இருக்கும்.

பங்கு கொள்ளல் அரங்கின் வருகையினால் படச்சட்ட மேடையை ஆடுகளமாகக் கொண்டு அரங்குக் கட்டடத்திற்கான மூன்று சுவர்களையும் விடப் பார்த்துக் கொண்டிருப்பவர்களை நான்காவது சுவராகக் கொண்டிருக்கும் முறைமை சிதைவுற்றது. இதன் வளர்ச்சியே றிச்சாட் செக்னருடைய சூழலியல் அரங்கு (Environmental Theatre)மக்கள் கூடும் வெளியே அரங்க வெளியாதல் என்று உருப்பெறுகின்றது.

ஆர்த்தோவினுடைய அரங்கில் பார்ப்பவருடைய மனநிலை வேறுநிலையில் அமைந்திருக்கும். பார்வையாளர்களை கட்டுப் படுத்திய ஸ்ரெனிஸ் லாவெஸ்கியின் அரங்கும், பார்ப்பவரை பிரச்சினைகளை சிந்திக்க வைத்த பிரைக்டின் அரங்கும்,

## பகிர்வோம்....

### ஈழமும் தமிழும்



பாலபாட நூல்களிலே நான்கு படிமுறைகள் இருப்பதை அறிவோம். இவைபற்றி பேராசிரியர் **பொ. பூலோகசிங்கம்** அவர்கள் தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர்களின் பெருமுயற்சிகள் என்னும் நூலிலே பின்வரும் பதிவைத் தந்துள்ளார்.

***நாவலர் இயற்றிய மூன்றாம் பாலபாடம் நான்காம் பாலபாடமாக வழங்குகின்றது: சிதம்பரம் சைவப்ரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகரான ச. பொன்னம்பலபிள்ளை எழுதிய பாலபாடம் மூன்றாம் பாலபாடமாக வழங்குகின்றது.***

(பக்கம் 48, மீள்பதிப்பு 2002)

பார்ப்பவர் நடிப்பவர் என்றபாகுபாடின்றி பார்ப்பவரும் பங்குகொள்ளும் தன்மை குரூர அரங்கும், நடிகரும் பார்வையாளரும் சேர்ந்து சமூகத்தை தேடுவதாக அமைவதாக எளிமையரங்கும் (வறுமை அரங்கு) பார்ப்போரின் பரிமாண வளர்ச்சியை தெளிவுபடுத்துகின்றது.

## VII

ஒரு சிருஷ்டி கர்த்தாவைப் போல அவனது உள்ளம் அனுபவிக்கும் பாங்கு வேறுபடுகின்ற தன்மையில் தளம், காலம் என்பவற்றில் இருந்து அவனை விடுபடச் செய்கின்றது.

மற்றைய கலையை விட நாடகக்கலை சிருஷ்டிக்கும்போதே சிருஷ்டிக்கும் கலையும் இணைந்து மேடையில் பார்வையாளர்கள் முன் நிகழ்வதாகும். நாடகத்தில் பங்கு கொள்கின்றவர்களுக்கு கிடைக்கும் அனுபவம் மனிதர்களின் மன இறுக்கங்களைக் குறைத்து அவர்களை சுயநிலைக்குக் கொண்டுசெல்லும். நடிகரின் அனுபவம் பார்ப்போரையும் பார்ப்பவரின் அனுபவம் நடிகரையும் சென்றடையும் பரிமாற்றம் நாடக சிருட்டியின் ஆரம்பம் முதல் இறுதிவரை காணப்படும்.

இத்தன்மையில் வைத்து பார்வையாளர்கள் தங்களை அனுபவிக்கவேண்டும். அவற்றில் இருந்து பார்வையாளர்கள் வெறும் ஏற்பவர்கள் என்ற நிலையில் வைத்துப்பார்க்கும்போது நாடகம் ஒரு கேளிக்கை நிகழ்வாக மாறி விடுகின்றது.

அவையினரை மேடைத்தளத்தில் இருந்து அகற்றி வைக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. ஸஹ்ருதய தன்மையில் இருந்து பார்வையாளர்கள் மேடை நிகழ்ச்சியை பார்க்கின்ற தன்மையைப் பெற்றவர்கள் ஆகின்றனர்.

நாடக வடிவத்தை இந்தியாவில் தங்கியிருந்த ஆங்கிலேயர் தங்களது மகிழ்ச்சிக்காக இறக்குமதி செய்தனர். அதன் பாதிப்பு பார்ஸி தியேட்டர் ஊடாக தமிழ் நாட்டை சிக்கெனப் பிடித்துக் கொண்டது. இந்த முறையில் தமிழ் நாடகம் அமையப்பெறத் தொடங்கியது.

## VIII

தமிழ் நிலையில் நாடக வடிவமான கூத்துக் கலையை சமதரையில் இரவிரவாக நித்திரை முழித்திருந்து பார்க்கும் முறைமை உண்டு. தமிழில் பாரம்பரிய நாடக முறைமையை நவீன நாடக முறைமை உள்வாங்கியதில் இருந்து நாடகம் பார்க்க மக்கள் ஈர்க்கப்பட்டனர். மேற்கத்தைய நாடக கோட்பாடுகளை உள்வாங்கிய தமிழ் நிலைப்பட்ட அரங்கியலாளர்கள், அவர்களை பின்பற்றிய நாடக வடிவத்தை தமிழ் நிலைப்பட்ட அரங்கில் மேடை ஏற்றியிருந்தனர். அவ்வாறான புதிய முயற்சிகளை ஏற்று மக்கள் பார்த்தார்கள்.

இன்று தமிழ் நிலைப்பட்ட அரங்கியல் வளர்ச்சியில் நாடகத்தை நேரடியாகச் சென்று பார்ப்பவர்கள் குறைந்துள்ளனர். இன்றைய தொழில் நுட்ப யுகம் காரணமாக அனைவரும் அத்தொழில் நுட்பத்திற்குப் பின்னால் தமது சிந்தனையைச் செலுத்துகின்றார்கள். ஆகையால் இத்தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நாடகத்தை ஒளிப்பதிவு செய்து இணையத்தளத்தினூடாக அனைவருக்கும் அனுப்பி வைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதனூடாக நவீன நாடகத்தில் இணையத்தள பார்வையாளர்களை உருவாக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

## IX

இப்பரிவர்த்தனையில் அதிகாரமையம் காலமாற்றத்தினால் மாற்றம் பெற்றுள்ளது. ஸ்ரெனிஸ்லாவெஸ்கி, பீட்டர்பூறுக்கின் அரங்கம் இயக்குனரையும், பாதல்சக்காரின் மூன்றாவது அரங்கிலும், அகஸ்ரோபோலோவின் கட்புலனாகா அரங்கிலும் பார்வையாளர்களும் அதிகார மையமாக மாற்றமடைந்துள்ளனர். நாடக எழுத்துருவில் இருந்து அதிகாரமையம் பார்வையாளர் வரையும் வளர்ச்சியடைந்துள்ளது.

பார்வையாளர்கள் அரங்கில் தம்மைத் தாமே கண்டுபிடிக்கின்றார்கள். அதன்மூலம் தம்முடைய வாழ்க்கையை ஒத்த உணர்வை எதிர்கொள்கின்றார்கள். அரங்கில் இந்தப் பரிமாற்றமே ரசம், கதாதீஸ், யூகின் என்றெல்லாம் பார்க்கப்படுகின்றது.

❍❍❍




# நான்காம் வகுப்பு....



பிரமிளா பிரதீபன்

வகுப்பறையில் ஒரே சலசலப்பு ஒருவருக்கொருவர் மூக்கை ஒரு கையால் பொத்திக் கொண்டும் மறுகையால் விசிறிக் கொண்டும் முகம் சுளித்தனர்.

"சி" குழு பக்கம் இருந்துதான் நாத்தம் வருவதாய் முருகேசன் சத்தமாகச் சொல்லிச் சிரித்தான் மற்றைய குழுக்களும் அதை ஆமோதிப்பதாய் "சி" குழுவை அருவருப்பாய் பார்த்தனர்.

"சி" குழுவில் மொத்தமாய் ஆறு பேர்தான். ஒருவருக்கொருவர் நானில்லை நானில்லை என்றனர். ரங்கேஸ்வரி பாய்ந்து கொண்டு எண்ணத்தொடங்கினாள். "வேலி.... பசளி.... கடைஞ்சான்.... தின்னான்.... விட்டான்........" என்று சர்மிளாவை நோக்கி கையை காட்டினாள்.

எல்லோருமே கொல்லென்று சிரித்து விட்டு சர்மிளாவை வெளியே போய்விட்டு வரச் சொன்னார்கள்.

அவளுக்கு அழுகையை அடக்க முடியவில்லை. சத்தியமாய் நான் இல்லை...... ரங்கேஸ்வரிதான் என்றபடி அழுதுகொண்டே வகுப்பறையில் இருந்து வெளியேறினாள்.

இப்போதெல்லாம் அன்றாட வகுப்பறை நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகிப்போனது.

தயாளன் சேருக்கு நான்காம் வகுப்பிற்கு வருவதற்கு துளியும் விருப்பமில்லாமல் போனதற்கு இதுவோர் காரணமாக இருந்தது.

நாற்றம் குடலை பிடுங்கி எடுக்கும்: குறைந்தது ஐந்தாறு நிமிடங்களுக்காவது வகுப்பறைக்குள்ளேயே நாற்றம் சுற்றி சுற்றி அடிக்கும்.

"கருமம் புடிச்சவன்களா என்னத்தடா அப்புடி தின்னு தொலைக்கிறீங்க.........."

தான் ஓர் ஆசிரியர் என்பதை மறந்த நிலையில் தயாளன் சேர் வாய்க்கு வந்ததையெல்லாம் ஏசிவிட்டு வகுப்பறையில் இருந்து வெளியேறுவார்.

இன்றென்றால் இதனை எப்படியாவது கண்டுப்பிடித்தேயாக வேண்டுமென்ற தீர்க்கமான முடிவெடுத்தவராய், தான் சந்தேகப்படும் சிலரை அருகிலேயே நிறுத்தி வைத்துக் கொண்டார்.

" காலையில வெறும் வயித்துல தண்ணி குடிச்சவனுங்க மட்டும் கையைத் தூக்கு........"

" நாங்குடிச்சேன் சேர்......"

" நாங்குடிச்சேன் சேர்......"

" நானும் குடிச்சேன் சேர்......"

ஆளாளுக்கு கூறிக்கொண்டு முழு வகுப்பறையுமே கையைத் தூக்கியது.

"இது சரிப்பட்டு வராது.......இன்னக்கி அந்த மந்திரத்த சொல்லி கண்டு பிடிச்சிற வேண்டியதுதான்......"

மாணவர்கள் ஒருவருக்கொருவர் இரகசியமாய் ஏதோ பேசிக் கொண்டனர்.

தயாளன் சேர் வகுப்புத்தலைவனை அழைத்து இருபது ஈர்க்கு குச்சிகள் ஒடித்து வரும்படி வெளியே அனுப்பினார்.

வகுப்பில் அன்று பதினேழு மாணவர்கள் மட்டுமே வந்திருந்தனர். பதினேழு குச்சிகளை எடுத்து ஒரே மட்டத்திற்கு ஒடித்து அளந்து பார்த்துவிட்டு மேசையில் அடுக்கிக் கொண்டிருந்தார்.

வகுப்பறை அப்படியே நிசப்தமாகி போயிருந்தது.

இன்று என்ன நடக்கப்போகிறதோ என்று ஒருவருக்கு ஒருவர் திகிலுடன் பார்த்துக் கொண்டனர்.

சர்மிளாவை உள்ளே வரும்படி சேர் அழைப்பித்தார்.

"இங்க பாருங்கடா இத வெளயாட்டா மட்டும் நெனைக்க வேணாம்........

நான் சொல்லப் போற மந்திரம் இப்போ ஆள காட்டி குடுத்துறும்.

இந்தாங்க எல்லோரும் ஒவ்வொரு குச்சிய கையில வச்சுக்கங்க"

வரிசையாக ஒவ்வொருவரும் தம் கையில் ஒரு ஈர்க்கு குச்சியை பிடித்துக்கொண்டனர்.

கண்ணை மூடிக் கொண்டு தயாளன் சேர் ஏதோ முணுமுணுத்தார் மாணவர்கள் சிலரது மனது படக் படக் கென்று அடித்துக் கொண்டது.

எல்லா மாணவர்களும் ஒருவித பயத்துடன் ஈர்க்குக்குச்சியை கையில் பிடித்தனர்.

"எல்லோரும் இப்ப சமய புத்தகத்த வெளியே எடுங்க......"

ஒரு கையில் புத்தகத்தை எடுத்து மேசையில் வைத்தனர்.

"இருவத்தி நாலாம் பக்கம் திருப்புங்க....."

அந்த பக்கத்தில் சிவபெருமான் படம் இருந்தது.

"சரி இப்ப குச்சிய அந்த பக்கத்துல வச்சி புத்தகத்த மூடி பேக்குல போடுங்க......"

இனி யாரும் குச்சிய தொடக்கூடாது...... ஆனா......"

நிறுத்தி விட்டு தயாளன் சேர் மாணவர்களை அவதானித்தார்.

அடுத்து என்ன சொல்ல போகிறாரோவென்று பயத்துடன் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"பொய் சொன்னவங்க குச்சி மட்டும் சரியா ஒரு சென்றிமீட்டர் அளவு உயரமா வளர்ந்துடும்".

அடிமட்டத்தை எடுத்து கையை வைத்து சென்றிமீட்டர் அளவை அளந்து காட்டினார்.

மாணவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து கொண்டனர்.

"இதபத்தி யாரும் யார்கிட்டயும் பேசவும் கூடாது."

அனைவரும் தலையாட்டினர்.

தொடர்ந்தும் பாடங்கள்........ இடை வேளை..... என்று நேரம் கடந்து கொண்டிருந்தது.......

மாணவர்கள் அதனை மறந்து விளையாடத்தொடங்கினர்.

கடைசிப் பாடம் சமயம். எல்லோரும் சமய புத்தகத்தை வெளியே எடுத்தனர்.

"வரிசையா இப்ப குச்சிகளை கொண்டு வாங்க......"

வரிசையா வந்து ஒவ்வொருவரும் சேரிடம் தத்தமது ஈர்க்கு குச்சியை ஒப்படைத்துவிட்டு இரகசியமாய் யாருடைதாவது வளர்ந்துள்ளதா என ஒப்பிட்டு பார்த்துக் கொண்டனர்.

அனைவரும் ஈர்க்கு குச்சிகளை கொடுத்தா யிற்று.

வாங்கி அடுக்கும் போதே ரங்கேஸ்வரி யின் ஈர்க்கு குச்சியில் ஒரு சென்றிமீட்டர் அளவு உயரம் குறைந்திருப்பதை தயாளன் சேர் அவதானித்திருந்தார்.

"வளர்ந்திருக்கா சேர்......"

"வளர்ந்திருக்கா சேர்......"

பிள்ளைகள் ஆர்வத்துடன் கேட்டனர்

"அளந்து பார்த்துட்டு நாளைக்கு சொல்றேன் இப்போ பாடத்தை கவனிங்க......"

பிள்ளைகள் சிரித்து பேசிய வண்ணமே பாடத்தை கவனித்தனர்.

ரங்கேஸ்வரி மட்டும் பயந்து போனவளாய் பதட்டத்துடன் இருந்தாள்.

"திரும்பவும் வளர்ந்திருக்குமோ.........!"

பாடத்தில் இடையிடையே தயாளன் சேர் ரங்கேஸ்வரியை பார்த்துக்கொண்டார்.

அவள் மெய்யாகவே அரண்டு போயி ருந்தாள். நிச்சயமாய் திரும்பவும் அந்த குச்சி வளர்ந்திருக்க வேண்டும்......

பெல் அடிக்கிற சத்தத்துடன் மாணவர்கள் விரைந்து ஓடத் தொடங்கினர்.

எல்லா மாணவர்களும் செல்லும் வரை காத்திருந்தவளாய் தயங்கி தயங்கி தயாளன் சேரிடம் வந்தாள் ரங்கேஸ்வரி.

"என்னா...........?"

சேர் அதட்டும் தொனியில் கேட்டார்.

"சேர்......."

"சேர்......."

"நான்தான் சேர் அது......."

....................................

"எங்க வீட்டுல நாங்க ஆறு புள்ளைங்க..... அம்மா, அப்பா, அம்மாயி, தாத்தான்னு மொத்தமா பத்து பன்னிரண்டு பேரு...... சேர்.

எங்க தாத்தா காலையில கக்கூஸ்ல குந்திக்கினு வெளியவே வராது சேர்.....

நான் சின்ன புள்ளன்னு எங்கம்மா தேயில மலயில ஒதுங்க சொல்லும்.

இப்ப தேயிலயெல்லாம் பொட்டல் பொட்டலா இருக்குறதால லயத்து பயலுக ஒளிஞ்சிருந்து பாக்குறாய்ங்க சேர்.......நா வேணுமினே செய்யல சேர்......"

ரங்கேஸ்வரி தேம்பி தேம்பி அழத் தொடங்கினாள்.

○○○




**சை.பீர்முகம்மது**

எப்பொழுதாவது விடலைப் பருவத்தில் எதிர்பாராது தனிமை இருட்டில் ஒருபெண் தரும் முத்தம் வாழ்க்கை முழுதும் மறக்கமுடியாது. மற்றவர்களுக்கு எப்படியோ எனக்கு இன்றுவரை அரை நூற்றாண்டு கடந்தும் அந்த முதல் முத்தம் மறக்கவே முடியாத முத்திரையாகிவிட்டது.

அவள் ஒருமுதிர்கன்னி. நண்பனின் வீட்டு மேல் மாடியில் 16 mm மங்கையர் திலகம் படத்தை கும்பலாக ஓட்டிக் கொண்டிருந்தார்கள் நண்பர்கள். பத்மினி “நீலவண்ணக் கண்ணாவாடா, நீ ஒரு முத்தம் தாடா” என்று பாடிய தருணத்தில் என்னை என் பெரியப்பா அழைப்பதாகவும் உடனே வீட்டுக்குத் திரும்பும்படியும் அழைப்பை அந்த முதிர்கன்னி வந்து என் காதில் கிசுகிசுத்தாள்.

பெரியப்பா என்றாலே என் கால்கள் ‘வெடவெடக்’ கும் - மிகவும் கண்டிப்பானவர் - விழுந்தடித்துக் கொண்டு படிகளில் இறங்கினேன். விளக்குகள் அனைத்தும் ‘சினிமா’ காட்டுவதற்காக அணைக்கப்பட்டிருந்தன. தட்டுத்தடுமாறி நடந்தபொழுது ஒருவளைக்கரம் என்னைக்கட்டி அணைத்து வாயில் கை வைத்து சத்தம் போடாதே. நான்தான் என்று பெயரைச் சொன்னபொழுது எனக்கு என்னசெய்வது என்றே தெரியவில்லை. விடலைப் பருவம். அவள் என் உதட்டைக் கௌவி முத்தமிட்டாள். தனது நாக்கை என் நாக்கோடு உரசிஉரசி எதையோ தோண்டி எடுப்பதுபோல் துளாவினாள். அதுவரை அப்படியொரு முத்தத்தை நான் அறிந்தவனல்ல. ஆனால் இப்பொழுது நினைக்கும் பொழுது அவள் ஏற்கனவே அப்படி முத்தமிடுவதில் கைதேர்ந்தவள் என்பதை அறிந்துகொள்ளமுடிகிறது. அந்தமுதல் முத்தம் இன்றளவும் என்னால் மறக்கவேமுடியவில்லை.

முதல் முத்தம் போலவே நான் கேட்ட பாடல் வரிகளும் என் நினைவை அலைக்கலைப்பதுண்டு. டி.எம்.சௌந்தரராஜன் பாடிய பாடல்களில் பாரதியின் “தீர்த்தகரையினிலே அந்த செண்பகத் தோட்டத்திலே, காத்திருந்தால் வருவேன்” என்ற பாடலில் உள்ள ஏக்கம், தனிமை, துக்கம், எதிர்பார்ப்பு அனைத்தையும் தன் கலைநயத்தால் மெருகூட்டிப் பாடியிருப்பார். டி.எம்.எஸ்.ஸைத் தவிரவேறு யாராலும் அந்த தனிமையைக் கொண்டுவர முடியுமா என்பது கேள்விக்குரியதுதான். அந்தப் பாடலில் ‘நானொருவன் மட்டிலும்’ என்ற வரிகள் என்னை முதல் முத்தம் போலவே எப்பொழுதும் அலைக்கலைக்கும். மேலோட்டமாக அந்தப் பாடலைக் கேட்பதற்கும் ஊன்றி அதில் கலந்துவிடுவதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அந்தப் பாடலில் மட்டுமல்ல எந்தப் பாடலிலும் சில ‘அபூர்வ கணங்கள்’ உண்டு.

“உயிர் தீயிலே வளர்சோதியே” என்ற பாரதியின் சொல்லாவகம் என் சிந்தையிலும் சித்தத்திலும் அடாது அடம் பிடிக்கும்.

இடைவெளிகள் ஏற்படும் பொழுதெல்லாம் நெருக்கத்தின் அவசியம் அதிகமாகத் தெரியும். சிலநேரங்களில் சிலரின் நெருக்கமே அதிக இடைவெளிபோல் அமைந்துவிடுவதும் உண்டு.

அந்த முதல் முத்தத்திற்குப்பிறகு நான் காதலால் ‘கசிந்துகண்ணீர் மல்க’ நின்றேன். அவளுக்கும் எனக்கும் பதினெட்டுவயது வேறுபாடு அந்தமுதல் முத்தம் பெற்றபொழுது. பாடங்கள் பள்ளிக்கூடத்தில் சொல்லும் பொழுதெல்லாம் நான் அவளையும் அந்த முதல் முத்தத்திலும்

மிதந்துகொண்டிருப்பேன். அவளுக்கு வயது என்னைவிட அதிகம்தான். முதல் முத்தத்திற்கு வயதாவது, மதமாவது மண்ணாவது, நிறமாவது, சாதியாவது?

என்னைப் போல் ஓர் இருட்டில் இப்படி திருட்டுமுத்தம் பெற்றவனுக்குத்தான் அதன் விலைதெரியும்!

என் பெரியப்பா ஏதோ ஒரு வாசனையை உணர்ந்ததால் என்னை அவள் வீட்டுப் பக்கம் போவதை மிகக்கடுமையாகத் தடுத்தார்.

அவள் மேல் எனக்குக் காதலா, காமமா? இன்றுவரை பதில் கிடைக்கவில்லை. இளமை மாறாது அவள் தந்தமுத்தம் மட்டுமே உள்ளது. வெயில் கொளுத்தும் மதியவேளைகளில் அவள் வீட்டுகிராமபோன் உச்சமாக ஒலிக்கும்.

**'எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்**
**என்ன பொருத்தமோ – இந்தப்**
**பொருத்தம் உலகில் பிறருக்கு எய்தும் பொருத்தமோ?**
**நினைக்க நினைக்கத்**
**தித்திப் பெனது நினைவிற் கொடுக்குதே**
**நின்பாலன்றிப் பிறர்பாற்**
**செல்ல நெஞ்சம் நடுக்குதே'**

இது திருவருட்பா, மெய்யருள் விரிப்பு பகுதியில் வரும் பாடல் - பக்திப்பாடல். எனக்கோ அப்பொழுது இது பக்தியைச் சொல்லும் தேவரகசியப் பாடலாக இருந்திருக்குமா? எனக் கேட்டாலும் - பார்த்தாலும் அந்த முதல் முத்தமே உடல் முழுதும் பரவி என்னைக் கொல்லாமல் கொன்றது.

காதல் கவிதைகளே என் பாடநூலாக மாறிப்போனது. என் பொல்லாதவேளை அப்பொழுது 'மிஸ்ஸியம்மா' திரைப்படத்தை வேண்டுமென்றே விஜயா வாகினி நிறுவனத்தினர் பல இலட்சம் செலவுசெய்து தயாரித்திருந்தார்கள். எனக்கு 'கடுப்பு' ஏற்ற அவர்கள் செய்த சதியாகவே நினைக்கத் தோன்றியது எனக்கு.

**'வாராயோ வெண்ணிலாவே**
**கேளாயோ எந்தன் கதையை"**

உருகிஉருகி மதுரக்குரலில் ஏ.எம்.ராஜா பாடி என்னை வேதனைக்குள்ளாக்கினார்.

அவள் வேறு இடம் குடி பெயர்ந்து போய்விட்டாள். அவளுக்கு தொடர்ந்து மாப்பிள்ளை பார்த்தார்கள். எல்லா மாப்பிள்ளைகளையும் அவள் நிராகரித்தாள். வயது ஆகிறது. ஏன் திருமணத்தைத் தள்ளிப் போடுகிறாள்?

**'ஆண்டொன்றுபோனால் வயதொன்றுபோகும்**
**அதற்கு முன்னாலே வா, வா; வாவா!"**

பொலீஸ்காரன் மகள் படத்தில் வந்த இந்தப் பாடலை ஒருமுறை அவளிடம் பாடிக்காட்ட ஆசைதான் எனக்கு. ஆனால் அவளைப் பார்க்கவே முடியவில்லை.

அவள் ஒருவனைத் தீவிரமாகக் காதலிப்பதாகச் செய்தி எட்டியது. அவளுக்கு நல்லபடியாகத் திருமணம் நடைபெற இறைவனிடம் வேண்டினேன். ஆனால் அந்த காதல் முறிந்துவிட்டதாம். காரணம் அவன் ஏழையாம்! இதுவரையில் அவள் நல்லவரனைவிட பணத்தையே காதலித்திருக்கிறாள். அதனால் தான் வந்த எல்லா மாப்பிள்ளைகளையும் தட்டிக் கழித்திருக்கிறாள்! கவிஞர் விக்கிரமாதித்யனின் கவிதையொன்று இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது.

**'சோறு சோறு என்பான் திராவிடன்**
**சாதம் சாதம் என்பான் ஆரியன்**
**பசி பசி என்கிறது மானுடம்"**

இது மேலோட்டமாகப் பார்த்தால் சாதாரண மொழிப் பிரச்சனை கவிதைபோல் தென்பட்டாலும் ஆழமாகப் பார்த்தால் பல்வேறு தளங்களில் இதன் பொருள் விரிவடைவதைக் காணமுடிகிறது. அவரவர்களுக்கு அவரவர் பிரச்சினை. அவளுக்கு திருமணத்தைவிட பணமே பிரச்சினை! பசி பலவகைப்பட்டது போலும்!

அவளுக்கும் எனக்குமான உறவு ஒரு இருட்டில் தந்தமுத்தம்தான். எனக்கோ அதுமுதல் முத்த அனுபவம். அவளுக்கு அது ஒரு அந்தநேரத்துத் தேவை. அவ்வளவுதான். அவளின் நிலத்தில் நானோ எனது நிலத்தில் அவளோ உணவுதேட முடியாது. வெவ்வேறு தூரங்களில் எங்களின் முளைக் குச்சிகள் கட்டப்பட்டு எல்லைதாண்டமுடியாத வேலிகளுக்குள் இருந்தன.

காதல் கவிதைகளும், திரைப்படப் பாடல்களும் என்னை அதிகம் ஆட்கொண்டன.

இந்த பூவுலகம் அழகாயிருப்பதற்கு காதல் எவ்வளவு உதவி புரிந்துள்ளதோ அதேபோல துன்பமாக இருப்பதற்கும் காதலேகாரணம்.

**'காதலே இல்லையேல் உலகிலே**
**சாதல் ஒன்றே தெய்வீகமே"**

இந்தப் பாடலைக் கேட்டு நான் தற்கொலை செய்துகொள்ள விரும்பவில்லை. அந்தக் காதலை மறந்து முதல் முத்தத்தையும் மறந்து

நிறைய கவிதைகளில் மூழ்கிப் போனேன். மறந்தேன் என்பதைவிட மறக்கமுயற்சித்தேன்.

தேவதாஸ் படத்தில் கண்டசாலா பாடிய

**'உறவுமில்லை பகையுமில்லை**

**ஒன்றுமே இல்லை"** என்ற முதல் பல்லவி என்னை முழுவதுமாக ஆட்கொண்டது. அகநானூறு புறநானூறு என்றுகாதல் கவிதை களைத் தேடித் தேடிப் படித்தேன்.

**'வருவான் கொழுநன் எனத்திறந்தும்**
**வரான் கொழுநன் எனஅடைத்தும்**
**திருகும் குடுமிவிடியளவும்**
**தேயும் கபாடம் திறன்மீனோ"**

இந்தப் பரணிபாடல் என்னைமிகவும் ஆட்கொண்டது.

கார் காலத்தில் போர் நடைபெறாது. மழைக்காலம் வந்ததும் போருக்குச் சென்றவன் வீடு திரும்பவில்லை. கதவைத் திறந்தும் அடைத்தும் அவன் வராததால் மீண்டும் மீண்டும் கதவுதிறந்தும் அடைத்தும் அவன் வருகையை ஆவலோடு தலைவி எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். தலைவன் தூரத்தில் வருவதைக் கண்டதும் கதவை மூடி கதவின் பின்புறமாக நிற்கிறாள்.

தலைவன் கதவைத் தட்டுகிறான். அவள் திறக்காமல் அங்கேயே நிற்கிறாள். தலைவன் பாடியபாடல்தான் இந்தக் கவிதை. கவிஞனின் அற்புதக் கற்பனை அவன் பாடலில் வெளிப் படுகிறது.

நான் வருவேனென்று திறந்தும் வராமல் போனதால் கதவை அடைத்தும் (திருகும் குடுமி) இரும்புத் தாழ்பாளே தேய்ந்துவிட்டது. இப்பொழுது வந்துவிட்டேன். கதவைத் திறப்பாயே என்றுபடுகிறான். காதலின் உச்சத்தை அந்த இரும்புத் தாழ்பாளில் வைத்து அற்புதம் செய்துள்ளான் கவிஞன்.

திருவருட்பா மகாதேவ மாலையில்,

**'என்னுயிர் நீஎன்னுயிர் கோர் உயிரும் நீஎன்**
**இன்னுயிர்க்குத் துணைவன்நீஎன்னைஈன்ற**
**அன்னைநீஎன்னுடையஅப்பன் நீஎன்**
**அரும் பொருள்நீஎன் இதயத்துஅன்பும் நீ"**

வரும் பாடல் இறைவனைக் கூட காதலால் ஏங்கி ஏங்கிக் காதலிக்க வைக்கமுடிகிறது.

இறைவனை வணங்குவதைவிட காதலனாக காதலியாக நினைத்து சித்தர்களும், சூப்பிகளும், ஆழ்வார்களும், ஆண்டாளும் பாடியதுதான் அதிகமென்றுதெரிகிறது.

**'பம்பரக் கண்ணாலே**
**காதல்**
**சங்கதி சொன்னாளே**
**தங்கச் சிலைபோல்**
**வந்துமனதைத்**
**தவிக்கவிட்டாளே"**

இந்தப் பாடலைக் கவிஞர் கே.டி.சந்தானம் எழுதி சந்திரபாபு பாடினார் - இந்தப் பாடலை அக்காலத்து வானொலியில் கேட்டபொழுது ஏதோ பம்பரம், கண் என்பதுமட்டுமே புரிந்தது. இப்பொழுது சட்டென்றுகேட்கும் பொழுது அதன் கவிதை நயம் வியக்க வைக்கிறது. சூழலும் பரம்பரத்துக்குக் கண்ணை உவமானம் காட்டியது அற்புதம், எனக்கு இப்பொழுது ஆச்சரியம்!

சந்திரபாபு எழுதப்படிக்கத் தெரியாதவர் என்பது இன்னொரு விஷயம், என்னை மேலும் ஆச்சரியப்படவைத்தது.

**'கட்டாணி முத்தழகி**
**காணாத கட்டழகி**
**தொட்டாலும் கை மணக்கும்**
**சிங்காரி"**

என்ற வரிகளை எப்படி அந்த கோமாளியால் உணர்வுபூர்வமாகபாடமுடிந்தது. எப்பொழு தாவது இந்தப் பாடலைக் கேட்கும் பொழுது தொட்டாலும் கை மணக்கும் சிங்காரி என்ற வரிகளில் உள்ளஉயிர்ப்புதெரியவரும்-பாடல் எழுதுவது வேறு அதை அற்புத படைப்பாக பாடுவதுவேறு. ஜி.ராமநாதனின் இசை சந்திரபாபுக்கு எவ்வளவு கை கொடுத்துள்ளது.

காதல் வசியமானது. அதேவேளை நரகமானது. இந்தப் பிரபஞ்சத்தின் முதல் காதலர்கள் ஆதாமும் ஏவாளும் இப்பொழுது சொர்க்கத்திலோ நரகத்திலோ இருக்கலாம். இரண்டில் ஒன்றில் தான் இருவரும் தனித் தனியாக இருக்கவேண்டும். ஏவாளின் முதல் முத்தத்தை நினைத்து ஆதமும் ஆதத்தின் முதல் முத்தத்தை நினைத்து ஏவாளும் நிச்சயம் ஏங்குவார்கள். இந்தபூமிப்பந்தில் பலருக்கும் அப்படியொரு ஏக்கம் இருக்கக் கூடும். அவர்களில் நானும் ஒருவன்.

**'நானொருவன் மட்டிலும் – பிரிவென்பதோர்**
**நரகத் துழலுவதோ?"** பாரதி.

❍❍❍

ஞானம் சஞ்சிகையில் தொடர்ந்து பல படைப்புகளை
எழுதிவருபவரும், ஞானம் சஞ்சிகையின் பேரபிமானியுமாகிய
கொற்றை பி.கிருஷ்ணானந்தன், திருமதி கி. சந்திரா தம்பதியினரின்
புதல்வி திருநிறைச்செல்வி சீதா அவர்கட்கும், டாக்டர்
க. வேலும்மயிலும் திருமதி வே. மதுரைமீனாட்சியம்மா அவர்களின்
புதல்வன் திருநிறைச்செல்வன் விஜயதீபன் அவர்கட்கும்
06.02.2017 அன்று திருமணம் இனிதே நடைந்தேறியது.
புதுமணத் தம்பதிகளை ஞானம் வாழ்த்தி மகிழ்கிறது.




# வாப்பா....

வாப்பா....
வாப்பாவின் ஞாபகங்கள்
நிறம்மாறாத பூக்களைப்போல
இன்னும்
அப்படியே தானிருக்கிறது...
வேலை நின்று போன
பிட்டகந்த
தேயிலை பெக்டரியைக்
கடக்கும்போதெல்லாம்
தேயிலையின் சுகந்தம் போல
எம் சுவாசமெல்லாம் மணக்கிறது
வாப்பாவின் வியர்வை...
வாப்பாவின் குரலில்தான்
ஒவ்வொரு பொழுதும் விடிந்திருக்கிறது...
அவர் உழைப்பின் இருமலில்தான்
ஒவ்வொரு இரவும் முடிந்திருக்கிறது....
வருத்தங்களையே காட்டாமல் எம் வயிறுகளையெல்லாம்
சுமந்து திரிந்தவர்....
இறுதி மூச்சும் கூட
எங்களுக்கான உணவு மூட்டையில்தான்
முடிந்தும் போனது...
உங்களை நினைக்கும்போதெல்லாம்
உலகின் அத்தனை தந்தைகளுக்காகவும்
கண்ணீர் வருகிறது வாப்பா...

ஒவ்வொரு சோதனையையும் எண்ணற்ற வேதனைகளையும்
எட்டி கடக்கும்போதெல்லாம்
நீங்கள் வாய் திறக்காமல்
வாழ்ந்த வாழ்க்கை
எனக்கும்
பாடம் கற்பிக்கிறது வாப்பா...
உங்களைச் சொல்லித்தான்
என் பிள்ளை வளர்கிறார்கள்...
வீரம் விவேகம்
வாஞ்சை வாழ்க்கையெல்லாம்
என் வாப்பா என் வாப்பா எனும்போது
தொட்டுணராத பார்த்தறியாத
உங்களுக்காய்
எப்போதும் பிரார்த்திக்கிறார்கள்...
உம்மா அன்பின் இருப்பிடம்
என் ஆளுமையின் பிறப்பிடமே நீங்கள் தான் வாப்பா...
பேசுகிறேன்
எழுதுகிறேன்
பாராட்டு புகழென
எது வந்த போதும்
அதன் ஆத்மார்த்த பந்தமெல்லாம்
உங்களுக்குள் தான்
பின்னிக்கிடக்கிறது வாப்பா...
நீர் பிரிந்து
இருபத்தைந்து வருடமென
இருபுருவம் உயர்த்துகிறேன்...
இரு நொடியும் விலகாத
உம் நெஞ்சார்ந்த நினைப்பையெண்ணி...

வாப்பாவுக்காக
ஜெஸீமா ஹமீட்



# கொற்றை பி. கிருஷ்ணானந்தனின் குட்டிக் கதைகள்



## வீதியின் இருமருங்கும் மரங்கள்

வடமாகாண சபை 2016ஆம் ஆண்டு "நவம்பர்" மாதத்தை மர நடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது. வீதிகள் கோவில்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பொது அலுவலகங்கள் எங்கும் விழாக்களுடன் கூடிய மர நடுகைகள் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. இது பற்றிய விழிப்புணர்வுக் கூட்டங்கள் கருத்தரங்குகள் என்பனவும் நடந்தன. வகுப்பறைகளிலும் இது பற்றிப் போதிக்கப்பட்டன.

அந்தப் பாடசாலையின் க.பொ.த சாதாரண தர வகுப்பில் ஆசிரியர் மரநடுகையின் பலாபலன்கள் பற்றி விரிவான விளக்கங்களை கொடுத்து கொண்டிருந்தார்.

"கடந்த நூற்றாண்டுகளில் இலங்கையை ஆண்ட ஆங்கிலேயர்கள் அந்நியர்களாக இருந்தாலும் கூட நாட்டின் நன்மை கருதி வீதியின் இரு மருங்குகளிலும் மரங்களை நாட்டினார்கள். ஆங்கிலத்தில்(Avenue) என்றால் சாதாரண வீதியைக் குறிக்காமல் இரண்டு பக்கமும் மரங்கள் உள்ள வீதியையே குறிக்கிறது."

"இந்திய நாட்டின் அசோகசக்கரவர்த்தியைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். கிறிஸ்துவுக்கு முன்னரே அதாவது யேசுநாதர் தோன்ற முன்னமே தோன்றிய பௌத்த மதத்தை பரப்புவதற்காக தனது மகன் மகிந்தனையும் மகள் சங்கமித்தாவையும் அரசமரத்தைக் கொடுத்து இலங்கைக்கு அனுப்பியவர். அங்கே நல்லாட்சி செய்தவர். மரங்களின் பயன்களை மக்களுக்கு உணர்த்தியவர்"

"நாட்டிலே வீதியின் இரு மருங்குகளிலும் அதாவது பாதைகளின் இரண்டு பக்கங்களிலும் மரங்களை நாட்டியவர்"

என்றெல்லாம் கூறி மரங்களின் பயன்பற்றியும் விளங்கப்படுத்தினர்.

அன்றைய தினம் நித்திலன் பாடசாலைக்கு வரவில்லை. தொலைக்காட்சி நாடகங்களைப் போல் முதல்நாட் சாராம்சத்தை அடுத்த நாள் மீட்டும் முயற்சியில் ஆசிரியர் கேள்வி கேட்கத் தொடங்கினார். முதல்நாள் நித்திலன் வகுப்பில் இருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளாத ஆசிரியர் நித்திலனிடம் முதலாவது கேள்வியைக் கேட்டார்.

"நித்திலன் சொல்லு....... அசோகச்சக்கரவர்த்தி ஏன் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் மரங்களை நாட்டினார்."

"அது சேர்.......ம்ம்....... வீதியின்ரை நடுவிலை மரங்களை நட்டால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் எண்டுதான் அவர்........"

❖❖❖❖❖❖

## அஞ்சலிப் பிரசுரம் அல்லது அவசரப் பிரசவம்

முத்துச்சாமி ஆசிரியர் திடீரென்று செத்துப்போனார். பிந்திக் கிடைத்த தவல்களின்படி அவருக்கு வயது எழுபத்திரண்டு.

ஊரில் எல்லாப் பொதுக்காரியங்களிலும் முன் நிற்பார். எங்களின் வாசிகசாலையின் தலைவராகவும் இரண்டு மூன்று தடவைகள் இருந்திருக்கிறார்.

மனிசன் கடைசி மட்டும் ஒண்டிக் கட்டையாகவே இருந்துவிட்டார். அது பிரம்மச்சரியத்தின் பாற் கொண்ட பிடிப்புக்காரணமாக அல்ல. உடன் பிறந்த மூன்று தங்கைகளுக்கும் சீர் வரிசைகளுடன் திருமணம் செய்து கொடுத்துவிட்டு மூச்சுவிட இவருக்கு முப்பத்தொன்பது வயதாகி விட்டது.

அயோத்தியின் தசரதச் சக்கரவர்த்தி தனது கன்னங்களின் ஓரமாக தலைமயிர் நரைத்திருப்பதைப் பார்த்ததும் இராமனுக்கு முடி சூட்டத் திருவுள்ளம் கொண்டது போல் இவரும் தனது தலைமயிரைப் பார்த்ததும் தனது திருமணம் பற்றி யோசிக்க

ஆரம்பித்திருக்கிறார்.

அதன்பின் தனது விதவைத் தாய்க்கும் கல்யாணப் புறோக்கர்களுக்கும் தனது கல்யாணத்திற்கான சமிக்ஞையைக் காட்டினாலும் ஒன்றும் சரிவருவதாக இல்லை. படிப்பு.... படிப்பு... படிப்பு... பதவிஉயர்வு என்றிருந்து விட்ட உத்தியோகப்பெண்களின் பட்டியலின்படி தேடியும் சரிவரவில்லை.

பெண்பார்க்கப் புறோக்கர்களுடன் சில இடங்களுக்குச் சென்றிருந்தாலும் அந்தப் பெண்களாலேயே இவர் நிராகரிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு என்று ஒரு கேள்வி. அதற்கு இவருடைய ஒன்றே முக்கால் கண்களும் ஒரு காரணமாக இருந்திருக்கக் கூடும்.

இப்படியே முத்துச்சாமி ஆசிரியருக்கு நாற்பத்தி மூன்று வயதாகிவிட்டது. அதற்குப்பின்

“இனி இப்படியே நான் என்னைச் சமாளிச்சுப் போடுவன். எனக்குக் கல்யாணம் வேண்டாம்” என்று கூறிக்கொண்டு அப்படியே இருந்து விட்டார். சும்மா சொல்லக்கூடாது. இவ்வளவு காலமும் இருந்தும் ஒரு “பெம்பிளைச்சோலி” ஒன்றுக்குள்ளும் மாட்டுப்படாமல் இருந்தவர் என்பது சர்வ உண்மை.

சரி இனி அவருக்கு அஞ்சலிக்கூட்டம் ஒழுங்கு செய்ய வேண்டும். வாசிகசாலை சார்பாக அஞ்சலிப்பிரசுரம் அடிக்கவேண்டும். இப்போது வாசிகசாலைத் தலைவர் நான்தான் என்ற படியால் நான்தான் சகல ஒழுங்குகளையும் பார்க்க வேண்டும்.

கறுப்புக்கொடிகளும் தோரணங்களும் கட்டிக்கொண்டிருந்த இளைஞர்களின் ஒருவனைக் கூப்பிட்டு செயலாளரை வரச்சொல்லி அனுப்பினேன். செயலாளர்ப் பெடியன் வந்தான். அஞ்சலி நோட்டீஸ் அலுவலைப் பார்க்கச்சொன்னேன்.

“அண்ணை... முத்துச்சாமி சேர் எங்கடை தலைவராக இருந்தவர்.... கொஞ்சம் பெரிசாக எல்லாம் செய்யவேணும்.”

“சரி சரி செலவுகளைப் பற்றி ஒண்டும் யோசிக்க வேண்டாம். வாசிகசாலைக் கணக்கிலை வெளிநாட்டிலையிருந்து வந்த காசு நிறையக் கிடக்குத்தானே. வடிவாகச் செலவழிக்கலாம். நீ போய் நெல்லியடியிலை அடிச்சுக்கொணடு கெதியா வா.

“அண்ணை... நீங்கள்தான் அதை எழுதித் தரவேணும்”

எனக்குக் கோபம் வந்தவிட்டது. “டேய்... நீங்கள் எல்லாரும் A/L வரைக்குமாவது படிச்சனிங்கள் தானே. பட்டதாரிகளும் இருக்கிறியள்தானே எழுதலாம்தானே. இப்ப எனக்கு நேரமில்லை. அவன் திலீபன் நிற்பான் அவனைக் கொண்டு எழுதுவியுங்கோ. இப்ப அவன்தான் புதுக்கவிதை எண்டு ஏதோ எல்லாம் எழுதுறானாம். அலுவலை முடிச்சுக்கொண்டு மினக்கெடாமல் கெதியா வா...”

அஞ்சலிப் பிரசுரம் எழுதும் ஆற்றல் எனக்கும் இல்லை என்பதை அவனுக்குத் தெரியவிடாமல் ஒருமாதிரிச் சமாளித்துக் கொண்டு அவனை விரட்டினேன். தலைவரின் ஆணையைச் சிரமேற் கொண்டு அவனும் விரைந்தான்.

இறுதிக்கிரியைகளும் முடிந்து இரங்கல் கூட்டமும் எனது தலைமையில் ஆயத்தமாகிறது. இன்னும் எங்களுடைய அஞ்சலி நோட்டீஸ் வரவில்லை விசாரித்ததில் திலீபன் வெளிவாரிப்பட்டபடிப்பு வகுப்புக்குப் போய் விட்டானாம். பிறகு செயலாளர்ப் பெடியன் அஞ்சலிப் பிரசுரம் எழுதுவிக்க வேறு எங்கோ போனதாகக் தகவல் கிடைத்தது.

அப்பாடா.... ஒருவகையாக அஞ்சலி நோட்டீஸ் வந்து விட்டது. அவசர அவசரமாகப் பொதியை உடைத்து அதில் ஒன்றை ஒலிவாங்கி முன் நின்ற என்னிடம் தந்துவிட்டு மற்றவற்றை இரண்டு மூன்று இளைஞர்கள் சனங்களுக்குக் கொடுக்கத் தொடங்கினார்கள்.

நான் வாசிக்கத் தொடங்கினேன்.

**“மாண்புடை மனையாளுடன்**
**மகிழ்வுற வாழ்ந்தீர் !**
**பெருமையுறு பிள்ளைகளைப் பெற்று**
**பெருவாழ்வு கண்டீர் !!”**

எனக்குத் தலைசுற்றியது. அஞ்சலி நோட்டீஸ் எழுதக் கைவசம் ஆள் இல்லையென்றதும் நகரில் உள்ள ஒரு அச்சகத்திற்குச் சென்று முத்துச்சாமி ஆசிரியருடைய பெயர் புகைப்படம், மண்ணில் - விண்ணில் விபரங்கள் யாவையும் கொடுத்து “ஏற்கனவே அங்கே யாருக்காவது அடிப்பித்த ஒன்றைப்பார்த்து அடிச்சு வையுங்கோ” என்று கூறிவிட்டு ஓடிவந்ததன் விளைவுதான் இது.

ooo

# 'கொழும்பூர் மானா' கிள்ளிய கொழுந்து



(இப்பத்தியில் மலையகத்தோர் மறந்த, அறிந்திரா அரிய தகவல் இதழ் தோறும் இடம்பெறும்.)

## "பீரங்கிப் பேச்சாள"ரை மறந்தார்கள் !

கொழும்பு 12 ல், வாழைத்தோட்டங்களே இல்லாத வாழைத்தோட்டப் பகுதியில் "டயஸ் பிளேஸ்" என்றொரு வசிப்பிட வீதி.

இங்கே, 22ஆம் இலக்க இல்லத்தில் அக்காலப் பிரபல வானொலி இஸ்லாமிய கீதப்பாடகர் அசன் அலியார் வாழ, ஒரு சிறிய அறையில், தமிழகத் திருநெல்வேலிச் சீமை, கல்லிடைக்குறிச்சி, ஊரில் இருந்து 1949 களில் வந்த ஈ.வெ.ரா. பெரியாரின் சுயமரியாதை இயக்கக்காரர், தி.மு.க. தீவிரர், எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர், ஒருவரும் வாசம் செய்தார்.

சின்ன மேசை, ஒரேயொரு நாற்காலி, பலகைக் கட்டில் சரிதம் அவர் வாழும் வாழ்க்கையை ஒரு தொழிற்சங்கப் பிரமுகர் ஜி.எஸ். நாயர் தற்செயலாகக் கண்டார்.

டி.எம்.பீர் முகம்மது என்ற அந்தத் திருநெல்வேலி மண்ணின் மைந்தனை எட்டியாதோட்டையில் முதன்முதல் மேடையேற்றி ஒரு குறுகிய காலத்தில் மலையகத்தின் பட்டிதொட்டி முழுதும் முழங்கச் செய்து, ஒரு "பீரங்கிப் பேச்சாளர்" ஆக்கினார் !

அதற்குப் பெரிதும் அனுசரணையாக அமைந்தார், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் "பிதாமகனார்" அப்துல் அஸீஸ் அவர்கள்.

இந்நாட்டின் இதழியல்துறை ஜாம்பவான்களுள் ஒருவரான திருமிகு 'எஸ்.டி.எஸ்.' (சிவநாயகம்) குயுக்தியாராக மாறி சுதந்திரனில் கேள்வி-பதில் பகுதி நடத்தியபொழுது "நம்நாட்டில் சிறந்த பேச்சாளர்கள் யார்?" என்ற வாசகர் விடுத்த வினாவுக்குப் பதில் வழங்கியது இப்படி: "கொழும்பில் ஒரு டி.எம்.பீர்முகம்மது, மட்டக்களப்பில் செ. இராசதுரை".

இந்த 'டியெம்பி' நாளும் பொழுதும் உயிர் மூச்சு விட்டதும், நினைத்து நினைத்து நெஞ்சம் நொந்ததும் பரிதாபத்திற்குரியவர்களாக இருந்த மலையகப் பாமரர்களுக்கே!

"பீர் அய்யா, பீரங்கிப் பேச்சாளர், என அனைவராலும் வர்ணிக்கப்பட்ட அவர், ஒன்றுக்கு இரண்டாக, "நவஜீவன்" - "நண்பன்" வார ஏடுகளுக்கு ஆசிரியராகவும் இருந்து மலையகத்தார் துயர் துடைக்க உழைத்த முன்னணி இதழாளராகவும் திகழ்ந்ததோடு, மலையகப் படைப்பிலக்கியத்திற்கும் கணிசமான பங்களிப்புச் செய்தார். '55ல் பிரசவித்த "கங்காணி மகள்" தோட்டத் தொழிலாளர் அவலத்தை படம்பிடித்த முதல் நாவல் என்பது என் கணிப்பு.

ஈழத்து இலக்கிய முன்னோடிகள் அ.செ.முருகானந்தன், சில்லையூர் செல்வராசன், காவலூர் இராசதுரை போன்றோரைத் தேடிப்பிடித்து மலையகப் பாட்டாளிகளைப் படம் பிடிக்கச் செய்தார்.

'வளரும் இலக்கியம்' பற்றிப் பேச 24.10.1955ல் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தினர் மேடை அமைத்தனர்.

இந்தப் 'பீரங்கி'யை நாலு பேருக்குத் தெரிய வைப்பதில், நினைப்பூட்டுவதில், நல்ல பங்களிப்பு நடைபெறவே இல்லை.

பேரெழுத்தாளர் தெளிவத்தை அவர்கள் ஒரு மாநாட்டு மலர்க் கட்டுரையில் சில பந்திகள் ஒதுக்கியும், நண்பன் அந்தனி ஜீவா மற்றொரு மலரில் நாலைந்து வரிகளிலும் தத்தம் கடமைகளை முடித்துள்ளனர்.

எந்தவொரு பெரிய நினைவு விழாவோ, குறைந்த பட்சம் வைபவமொன்றின் அரங்கிலோ பெயர்ப் பதாகை தொங்கவிடப்படவில்லை.

பீரங்கிப் பேச்சாளருக்கு, அறிஞர் அண்ணா வழி எழுத்தாளருக்கு, எஸ்.டி. சிவநாயகம் வழி இதழாளருக்கு நல்லதொரு நிகழ்வு நடப்பதன் மூலம் மலையகத்தோருக்கு ஒரு முஸ்லிம் புரிந்த பணியைத் தெரியச் செய்து புரிந்துணர்வுக்கு மேலும் பக்கத்துணை நிற்க யாருக்குப் பாக்கியம் ஏற்படுமோ?

அடுத்த இதழில் தேயிலைத் தோட்டத்தில் நுழைந்த 'பதிபக்தியும்' 'சதி லீலாவதியும்'.....

# எழுவாய் தமிழா

சட்டத்தரணி
ரஷீத் எம். இம்தியாஸ்

எழுவாய்த் தமிழாஎழுவாய்
தமிழின் திறனாய் எழுவாய்
தமிழர் உணர்வாய் எழுவாய்
தமிழைக் காத்திடஎழுவாய்

இயலிசைநாடகம் வளர்ப்பாய்
இதயத்தில் தமிழனாய் சிறப்பாய்
அயல்மொழிமோகம் களைவாய்
தமிழ்மொழிசிறந்திடதுணிவாய்

தமிழேசிறப்பெனவளர்ப்பாய்
தமிழர் துயரினைத் துடைப்பாய்
தமிழேஉயிரெனக் கொள்வாய்
தமிழர்நிமிர்ந்திடஉழைப்பாய்

மரத்தமிழர்நாமெனநிமிர்வாய்
அறந்தனைவாழ்வினில் ஏற்பாய்
உறவுகள் உயர்ந்திடஇணைப்பாய்
உணர்வினில் தமிழைநிறைப்பாய்

நெருப்பாய் தீமைஅழிப்பாய்
வெறுப்பாய் கயமைகசப்பாய்
கருப்பாம்துயரம்களைவாய்
இருப்பாய் தமிழாசிறப்பாய்

குறுங்கதை

# பச்சோந்தி

அனல் பறக்கும் அடுக்குத் தமிழ் பேச்சாளன் அண்ணாமலை, எந்த மேடையோ என்ன தலையங்கமோ அவர் பின்னிற்பதே இல்லை.

அன்று தமிழ் விழா ஒன்றில் "தமிழ் அன்றும் இன்றும்" என்னும் தலையங்கத்தில் முழங்கினார். நீண்ட நேரம் பேசினார். பெருந்தொகை மக்கள் கூட்டம் மெய்மறந்து பலத்த கரகோஷம் செய்தது.

ஆனால்,

சபையுள் முன்வரிசையில் எனக்குப் பக்கத்தில் இருந்தவர் அவரின் பேச்சை இரசித்ததாகவோ அவதானித்ததாகவோ கரகோஷம் செய்ததாகவோ இல்லை.

விழா முடிந்து பார்வையாளர் வெளிக்கிழம்பிய வேளை எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவரிடம் "பேச்சு எப்பிடி ஐயா?" எனக் கேட்டேன்.


அவர் சொன்னார்: "பேச்சு டொப். பேச்சாளர் படு போலி."


"ஏன் ஐயா அப்பிடிச் சொல்லுகிறீயள்?"

"அந்த பேச்சாளரின் வண்டவாளம் எனக்கு வடிவாகத் தெரியும்."

"அப்பிடி என்னையா பெரிய பிரச்சினை?"

"அவருக்கு நாலு பிள்ளைகள். மூண்டு பெட்டைகள். ஒண்டு பெடியன். நாலும் வெளிநாட்டில். ஒண்டுக்கும் தமிழ் சுட்டுப் போட்டாலும் வராது. நாலும் விரும்பிக் கலியாணம் கட்டினதும் வெளிநாட்டு வெள்ளைகளை".





வேல் அமுதன்

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

## எதிர்பார்த்ததும் எதிர்பாராததும்

கடந்த ஆண்டு இறுதியில் நான் எதிர்பார்த்ததும் எதிர்பாராததுமான நிகழ்ச்சிகள் சில நடைபெற்றன. 5.12.2016இல் கோயம்புத்தூர் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை, உ.வே.சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும் என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் ஒன்றினை நடத்தியது. கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறையும், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும், முனைவர் மா.ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனமும், ஸ்ரீ கிருஷ்ண ஸ்வீட்ஸும் இணைந்து இக்கருத்தரங்கை நடத்தின.

கருத்தரங்குக்கு முதல்நாள் 4ஆம் திகதி நானும், பேராசிரியர் மகேஸ்வரனும், பேராதனைப் பல்கலைக்கழகப் பதில் நூலகர் இரா.மகேஸ்வரனும் பிற்பகல் விமானத்தில் மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றோம். மதுரை விமானநிலையத்தில் மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சத்தியமூர்த்தியும், அவரது நண்பர் தினமணிப் பத்திரிகையாளரும், குறும்பட இயக்குநருமான ரவியும் எமக்காக வாகனத்தோடு காத்திருந்தனர். இருவரும் இலங்கைக்கு முன்னர் வருகை தந்திருந்தனர். எமது பசிக்களையை உணர்ந்த அவர்கள், மதுரையில் ஒரு சிறந்த ஹோட்டலுக்கு அழைத்துச்சென்று உபசரித்தனர்.

கோயம்புத்தூரை நோக்கி எமது பயணம் ஆரம்பமானது. போகும் வழியில் பொள்ளாச்சியில், எமக்காக ஒரு திரைப்பட நடிகர் ஒரு பெரிய ஹோட்டலில் காத்திருந்து வரவேற்று உபசரித்தார். எங்களுடன் வந்த இயக்குநர் ரவியின் நண்பர். அவர் பெயர் விஷ்ணுப்பிரியன். வளர்ந்துவரும் ஓர் இளம் நடிகர். ஒரு நடிகருக்குரிய அழகான தோற்றத்தில் அவர் இருந்தார். நீண்டநேரம் அவர் எங்களோடு மனம்திறந்து பேசிக்கொண்டிருந்தார். அவர் பொள்ளாச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலக்கணம், நினைத்தாலே இனிக்கும், அய்யனார், தோட்டா, மை, ஆர்யா சூர்யா, அங்காளி பங்காளி ஆகிய தமிழ்த் திரைப்படங்களிலும், மதுமதி, தில் உன்ன ராஜு பிரேமலோ பட்டாடு ஆகிய தெலுங்குப் படங்களிலும், நிழல் குத்து என்னும் மலையாளப் படத்திலும் இதுவரை நடித்துள்ளார். தற்போது மெர்லின் என்ற தமிழ்த் திரைப்படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். அவர் எங்களோடு பேசிக்கொண்டிருந்தவேளையில், அவர் நடித்த திரைப்படம் ஒன்று இந்தியத் தொலைக்காட்சி சனல் ஒன்றில் ஒளிபரப்பாகிக்கொண்டிருக்கும் செய்தியையும் எங்களுடன் பகிர்ந்துகொண்டார். விஷ்ணுப்பிரியன் பற்றிய இன்னொரு குறிப்பிடத்தக்க விடயம், எங்களோடு பயணம் மேற்கொண்ட இயக்குநர் ரவியின் குறும்படங்களில் கம்பராக, பாரதியாக, அரவிந்தராக, இராஜராஜசோழனாக எனப் பல்வேறு பாத்திரங்களையும் ஏற்று நடித்துள்ளார். இப்போது ரவியின் இயக்கத்தில் தொல்காப்பியராக நடித்துக்கொண்டிருக்கிறார். அவர் பற்றிய இந்தச் செய்திகள் எமக்கு மனமகிழ்ச்சியை ஏற்படுத்தின. தாம் இவ்வாறு வெவ்வேறு பாத்திரங்களில் நடிப்பதையிட்டுத் திருப்தியடைவதாக அவர் எம்மிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். எதிர்காலத்தில் நடிகர் விஷ்ணுப்பிரியன் இன்னும் அதிகமாகச் சாதிப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதேவேளை, அவரைச் சரியாக இனங்கண்டு, தமது குறும்படங்களில் பயன்படுத்தும் இயக்குநர் ரவியையும் பாராட்டவேண்டும். இயக்குநர் ரவி இத்தகைய முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகிறார்.

பொள்ளாச்சியில் இருந்து கோயம்புத்தூரை நோக்கி மீண்டும் எமது பயணம் தொடங்கியது. இடைவழியில் ஒரு ஹோட்டலில் இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு எழுந்திருந்தவேளையில், இரகசியமாக ஒரு சோகச்செய்தி காதோடு காதாகப் பரவத்தொடங்கியது. அதுவரை மகிழ்ச்சிகரமாக இயங்கிக்கொண்டிருந்த எமக்கு, அச்செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தத் தொடங்கியது. உடனடியாக வாகனத்தில் அனைவரும் ஏறிக்கொண்டோம். வாகனச் சாரதி வாகனத்தை விமானம் என்று நினைத்துக்கொண்டுவிட்டார் போலும்! அவர் தரையில் பறக்கத்தொடங்கிவிட்டார். எம்.ஜி.ஆர் காலமானபோது கருணாநிதியின் சிலை உடைக்கப்பட்டது தொடர்பாக இயக்குநர் ரவி எமக்கு ஞாபகமூட்டினார். தமிழ்நாட்டு மக்களில் சிலர் சிலவேளைகளில் சம்பந்தம் இல்லாமலேயே

உணர்ச்சிவசப்படும் போக்கைக் கொண்டவர்கள். ஆகவே, போகும் வழியில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டுவிடக்கூடாதே என்ற எச்சரிக்கை உணர்வு எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டது. அடுத்தநாள் கோயம்புத்தூரில் பன்னாட்டுக் கருத்தரங்கம். அதற்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டுவிடுமோ என்று யோசித்தோம். ஆனால், நல்லவேளையாக அப்படி எதுவும் நடக்கவில்லை. கோயம்புத்தூர் சென்று, எமக்கு ஒதுக்கப்பட்ட ஹோட்டலை அடைந்ததும், முதல்வேலையாகத் தொலைக் காட்சிச் செய்திகளைப் பார்த்தோம். நாங்கள் கேள்விப்பட்டதுபோல் எதுவும் நடக்கவில்லை என்று செய்திகள் தெரிவித்தன. ஆனால், குறிப்பிட்ட செய்திக்குரியவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளார் என்பதை மட்டும் செய்திகள் தெரிவித்துக்கொண்டிருந்தன.

அடுத்தநாள் 5ஆம் திகதி காலை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் மிகவும் மகிழ்ச்சிகரமான முறையில் பன்னாட்டுக் கருத்தரங்கத்தின் தொடக்கவிழா தொடங்கியது. அக்கல்லூரியின் முனைவர் மா.ஆறுச்சாமி கலையரங்கத்தில் நிகழ்ச்சிகள் தொடங்கின. கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரிச் செயலாளர் மற்றும் இயக்குநர் முனைவர் சி.ஏ.வாசுகி தலைமை தாங்கினார். அக்கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க.முருகேசன் வரவேற்புரை நிகழ்த்தினார். வாழ்த்துரையைச் சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதுநிலை ஆய்வறிஞர் முனைவர் ப.மருதநாயகம் வழங்கினார். கருத்தரங்க நோக்கவுரையையை மலாயாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் க.குமரனும், சிறப்புரையைப் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வ.மகேஸ்வரனும் நிகழ்த்தினர். கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த முனைவர் இரா. மணிமேகலை நன்றியுரை வழங்கினார். அக்கல்லூரியைச் சேர்ந்த முனைவர்கள் சி.ஏ வாசுகி, த.முரளீஸ்வரி (கல்லூரி முதல்வர்), க.முருகேசன், முனைவர் ப.மருதநாயகம், இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர்கள் துரை. மனோகரன், வ. மகேஸ்வரன், மலேசியாவைச் சேர்ந்த பேராசிரியர் சு.குமரன் ஆகியோர் மேடையில் கௌரவிக்கப்பட்டனர். கருத்தரங்க ஆய்வுக்கோவையின் மூன்று பாகங்களும் தொடக்கவிழாவில் வெளியிடப்பட்டன. ஆண்டு தோறும் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை, இவ்வாறான பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்துவதாக, அதன் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க.முருகேசன் தெரிவித்தார். நிச்சயம் அதன் தமிழ்த்துறையினர் பாராட்டுக்குரியவர்கள்.

தொடக்கவிழாவின் பின்னர் முற்பகல் தேநீர் இடைவேளையின்போது, முன்னர் வந்த சோகச்செய்தி மீண்டும் வேகத்தோடு பரவியது. ஏற்கனவே நடந்துமுடிந்த விடயம் பற்றி, அன்றிரவு 11 மணிக்குப் பின்னர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்பதாகச் செய்திகள் காதோடு காதாக இரகசியமாகப் பரவத் தொடங்கின. ஆகவே, அடுத்த அமர்வுகள் வேகமாக இடம்பெறத் தொடங்கின. இலங்கை ஆய்வாளர்களின் கருத்தரங்கம் தனியாக இடம்பெற்றது. குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி முனைவர் பா.வேலம்மாள் அரங்குக்குத் தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் துரை.மனோகரன், விசாகரூபன், கலாநிதி ம.பாலகைலாசநாதசர்மா, இரா.மகேஸ்வரன், றூபி வலன்ரினா பிரான்ஸிஸ், விஜிதா, குகன், சந்திரசேகரம் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். யுவராஜன் பார்வையாளர்களுள் ஒருவராகக் கலந்து கொண்டார். பன்னாட்டுக் கருத்தரங்கம் இனிது நிறைவெய்தியது.

கருத்தரங்கம் நிறைவுற்ற பின்னர், மாலையில் கோயம்புத்தூரில் இருந்து திருச்சி நோக்கிப் புறப்பட்டோம். போகும் வழியில் ஒரு தேநீர்க்கடையில் சிற்றுண்டியுடன் தேநீர் அருந்திக்கொண்டிருந்தபோது, கடைக்காரர்கள் பரபரப்பாயினர். கடையை மூடுவதற்கான முயற்சிகளில் அவர்கள் ஈடுபடத்தொடங்கினர்.என்னவென்று விசாரித்த போது, அந்தக் கடைக்குச் சற்று எதிர்ப்புறம் இருந்த உணவுவிடுதி ஒன்று தாக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஒரு சோகச் செய்தி சில தொலைக்காட்சிகளில் அறிவிக்கப்பட்ட நிலையில், பின்னர் அது அரசால் மறுக்கப்பட்டதாகவும், குறிப்பிட்ட சோகச் செய்தியை வெளியிட்டமை தொடர்பாக மக்களில் ஒருசாரார் ஆத்திரமுற்று உணர்ச்சி வசப்பட்டமையால் அவ்வாறு நடந்தது என்றும் தெரிவித்தனர். மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய விக்கிரமாதித்தனின்பிசாசு போல, நாங்களும்வாகனத்தில் ஏறிக்கொண்டோம்.

திருச்சியை வந்தடைந்த பின்னர்தான் நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்தது. எங்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் செய்து, எங்களைப் பாதுகாப்பாகக் கொண்டுவந்து சேர்த்தவர், மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சத்திய மூர்த்தி. அவருக்கு எமது நன்றி என்றும் உரியது. அவரோடு எப்போதும் உடனிருந்தவர், இயக்கு

நரும், தினமணிப் பத்திரிகையாளருமான ரவி.

திருச்சிக்கு வந்துசேர்ந்ததில் இருந்து, நாம் இலங்கைக்குத் திரும்பும்வரை வேண்டிய வற்றை எல்லாம் செய்து உதவியவர், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேராசிரியர் பாலசுப்பிரமணியம். அவர் பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் தொடர்பாக அடிக்கடி, இலங்கைக்கு வந்துசெல்பவர். திருச்சியில் எங்களுக்கு ஒதுக்கப் பட்ட ஹோட்டலில் நுழைந்ததும், தொலைக் காட்சிச் செய்திகளை நோட்டமிட்டோம். முதல் நாள் 4ஆம் திகதியில் இருந்து நாம் செவிவழிச் செய்தியாக அறிந்துகொண்டிருந்த விடயம் உறுதியாகியது. தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா காலமானார்.

பழம்பெரும் நடிகை சந்தியாவின் மகள் ஜெய லலிதாவைத் தமிழ்ப்பட ரசிகர்கள் ஸ்ரீதரின் வெண்ணிற ஆடை மூலம் முதன் முதலாகத் தரிசித்தனர். அப் படத்தில் நடித்துக் கொண்டி ருந்தபோது, அவரது நடிப்பின் போதாமை கருதி, ஸ்ரீதர் அவரை அப்படத்திலிருந்து நீக்கிவிட முடிவு செய்தார். பின்னர், சந்தியா வின் வேண்டு கோளையடுத்து, அவரை மீண்டும் படத்தில் இணைத்துக் கொண்டார். அதன் பின்னர், அப்படத்தில் ஜெயலலிதா தமது முழு நடிப்புத் திறமையையும் வெளிப்படுத்தி, தமிழ்த் திரைப் பட உலகில் தமக்கென ஒரு தனியான இடத்தினைப் பெற்றுக்கொண்டார். எம்.ஜி.ஆரின் திரைப்படக் கதாநாயகிகள் வரிசையில் பானுமதி, சரோஜாதேவி ஆகியோருக்கு அடுத்ததாக ஜெயலலிதா முன்னுரிமை பெற்றார். எம். ஜி.ஆரோடு நடித்த திரைப்படங்களில் ஜெயலலிதா பெரும்பாலும் ஒரு கவர்ச்சி நாயகி யாகவே வலம் வந்தார். தமது முழு நடிப்புத் திறனையும் முழுமையாக வெளிப்படுத்த அவ ருக்குப் போதிய சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்றே சொல்லலாம். ஆனால், சிவாஜி கணேசனுடன் நடிக்கும்போது ஜெயலலிதா தமது முழுத்திறமையையும் வெளிப்படுத்த முடிந்தி ருக்கிறது. சிவாஜி கணேசனுடன் ஜெயலலிதா முதன்முதல் நாயகியாக நடித்த படம், கலாட்டா கல்யாணம். அப்படத்தின் முதல் காட்சியில் நல்வரவு என்ற பெயர்ப்பலகை தொங்கும். கதாநாயகன் சிவாஜி, 'நல்ல இடம் நீ வந்த இடம் வரவேண்டும் காதல் மகராணி' என்ற வாலியின் பாடலைச் சௌந்தரராஜனின் குரலில் வரவேற்றுப் பாடுவார். பதிலாக ஜெயலலிதாவும் 'நல்ல இடம் நான் வந்த இடம் வரவேண்டும் காதல் மகாராஜா' என்று சுசீலாவின் குரலில் பாடுவார். அந்தப் படத்தின் இயக்குநர் சி.வி.ராஜேந்திரனால் திட்டமிட்டே அக்காட்சி அமைக்கப்பட்டது. ஜெயலலிதாவின் நடிப்புத்திறனுக்கு நல்லதோர் உதாரணமாகக் குறிப்பிடத்தக்கது, எங்கிருந்தோ வந்தாள் என்ற திரைப்படம். சிவாஜிக்குப் போட்டியாக ஜெயலலிதா தமது நடிப்பாற்றலை எல்லாம் அப்படத்தின் மூலம் வெளிக்கொணர்ந்தார் (சிவாஜியோடு நடித்த பிற நடிகைகளுக்கும் இது பொருந்தும்). அதேபோன்று, ஜெயலலிதாவின் நடிப்புத்திறனின் இன்னொரு வெளிப்பாடாக அமைந்த ஒரு திரைப்படம், வந்தாளே மகராசி. இத்திரைப்படத்தில் இரட்டைவேடத்தில் ஜெய் சங்கருக்கும், சோவுக்கும் ஜோடியாக நடித்தி ருந்தார். இவ்வாறு பல குறிப்பிடத்தக்க திரைப் படங்கள் அவரின் நடிப்பாற்றலை வெளிப் படுத்தவல்லவை. அரசியல்வாதி ஜெயலலிதா வைவிட, நடிகை ஜெயலலிதாவை எனக்குப் பிடிக்கும்.

ஜெயலலிதாவின் அரசியல் வாழ்வு 2011ஆம் ஆண்டின் பின்னரே பலரையும் கவரத் தொடங்கியது. குறிப்பாக, இலங்கைத் தமிழரையும், உலகத்தமிழரையும் அவ் வாண்டில் மீண்டும் முதலமைச்சராக வந்த பின்னரே அவர் கவரத் தொடங்கினார். அதற்கு முன்னர், எனது எழுத்துக்களிலும் அவரை நான் கடுமையாகச் சாடியிருக்கிறேன். ஆரம்ப காலங்களில் அவரது அரசியல் இலங்கைத் தமிழர்களை வேதனைப்படவைத்திருக்கிறது. ஆனால், 2011ஆம் ஆண்டின் பின், தமிழ்நாட்டு மக்களின் மனங்களில் மட்டுமல்லாது, இலங்கை உட்பட உலகத் தமிழர்களின் மனங்களைக் கொள்ளை கொண்ட உன்னதத் தலைவியாக அவர் உயர்ந்தார். கருணாநிதிக்குக் கிடைக்காத அந்த உயர்நிலை ஜெயலலிதாவுக்குக் கிடைத்தது. ஜெயலலிதாவிடம் குறைகள் காணப்பட்ட போதிலும், அவரது துணிச்சலும், செயல்திறனும் பாராட்டத்தக்கவை.

ஜெயலலிதா காலமானதாக அறிவிக்கப் பட்ட நாளுக்கு அடுத்தநாள் பகல் திருச்சியில் கடைகள் எல்லாம் மூடப்பட்டு, மாலை ஆறு மணிக்குப் பின்பே மெதுமெதுவாகத் திறக்கப் படத் தொடங்கின. மறுநாள் 7ஆம் திகதி இலங்கை திரும்பியதும், அன்று மாலை தொலைக்காட்சிகளில் இடம்பெற்ற செய்தி ஒன்று என்னை மேலும் ஆச்சரியப்படவைத்தது. நடிகரும், பத்திரிகையாளரும், அரசியல் வாதியும், சட்டநிபுணருமான சோ காலமாகி விட்டார் என்பதே அச்செய்தி. அரசியல்வாதி சோவை எனக்குப் பிடிக்காது. ஆனால், நடிகர் சோவையும், பத்திரிகையாளர் சோவையும் எனக்கு மிகவும் பிடிக்கும்.

# மலர்கள்

(உருவகக் கதை)



எஸ். முத்துமீரான்

அது ஒரு மிகப் பிரபல்யமான ஆலயம், பக்தர்கள் ஆயிரக் கணக்கில் காணிக்கையோடு வந்து ஆலயத்தைத் தரிசித்து, கடவுளைத் துதித்து போவார்கள். தினமும் ஆலயம் பக்தர்களினால் நிறைந்து செல்வதைக் கண்டு, ஆலயத்தினுள்ளே இருக்கும் கடவுளின் அழகான சிலை அமைதியாக இருக்கும். எண்ணற்ற வண்ண மலர்களால் கடவுளின் பாதங்களை மூடி மறைத்து, வரம் பெற்ற ஆலயக் குருக்கள், சிதைந்து போன மலர்களை எல்லாம் கூட்டி எடுத்து கூடையில் அள்ளிப்போய், வெளியில் கொட்டிவிட்டு வருகிறார். ஈசனுக்கு இடைவிடாது சேவை செய்யும் இவரொரு பக்தர். இதில் அவருக்கு பரம திருப்தி. பாவம்..! கடவுளின் பாதம் தொட்ட மலர்கள் பகலவனின் சூட்டில் கருகி அழிவதைப் பார்த்து ஆலய வளவுக்குள் நிற்கும் பூமரங்கள் சலித்துக் கொண்டிருந்தன. அங்கே வேதனை தாங்க முடியாமல் காய்ந்து கொண்டிருந்த மலரொன்று “இறைவா...! இது என்ன கொடுமை. நாங்கலெல்லாம் உன் பாதம் தொட்டு உன்னைக் கும்பிட்ட ஜீவன்கள்தானே..எங்களுக்கு மட்டுமென்ன இந்த நிலை..? நாங்கள் என்ன பாவம் செய்தோம்.? தினம் தினம் காலையில் வந்து உன் காலைத் தொட்டு துதிக்கும் நாங்களும் உன் படைப்புதானே..! எல்லாச் சாதியினரும் வேற்றுமை பார்க்காமல் எங்களை பறித்து வந்து உன்பாதங்களில் இட்டு உன்னைத் துதிப்பது உனக்குத் தெரியும்தானே..! உலகில் மற்றவர்களுக்காக அவர்களின் இன்பத்துக்காக, அவர்களின் உயர்வுக்காக.. எங்களை நாங்களே அழித்துக் கொள்ளும் அப்பாவிகள். எந்தச் சாதிச் துவேஷமும், இழிவான குணங்களும் இல்லாத எங்களுக்கேன் இந்தக் கொடுமை..!” என்று கூறி அழுவதைக் கண்டு மரமொன்று வேதனையோடு “அழாதீர்கள். ஒவ்வொரு நாளும் என்னிடம் வந்து எதுவும் கேட்காமல், இனத்துவேசிகள், மதத்துவேசிகள், கொடூர கொலை வெறியர்கள், கள்வர்கள், காவாலிகள், காமுகர்கள், கடத்தல்காரர்கள், மனித நேயம் இல்லா அரசியல் வாதிகள், முட்டாள்கள் எல்லோரும் வந்து உங்களை பறித்துச் செல்லும் போது என் இதயம் எப்படியெல்லாம் துடிக்கும் என்பது உங்களுக்கு தெரியுமா? இவர்கள் சில நேரம் என் உடம்பை முறித்து உங்களை பறித்துச் செல்வது உங்களுக்கு புரியுமா? இந்த உண்மைகள் அன்பே உருவான இறைவனுக்கு மட்டும் புரிந்தால் போதும்.” என்று கூறி விட்டு பூமரம் விம்மி விம்மி அழுதது. அப்பொழுது தென்றல் அமைதியாக வீசிக் கொண்டிருந்தது. பூக்களின் வேதனையில் இறைவன் மூழ்கி விட அண்டம் அதிர்ந்தது. மறுகணம் அமைதியாக வீசிக் கொண்டிருந்த தென்றல் கடும் புயலாக மாறி வீச, ஆலயக் கூரை கழன்று காற்றில் பறந்து கொண்டிருக்கிறது. மரங்களும் செடிகளும் உடைந்து முறிந்து கொண்டிருக்க மிருகங்கள் உயிருக்கு பயந்து ஓடிக் கொண்டிருக்கின்றன. உடைந்த ஆலயத்தின் உள்ளே இறைவனின் சிலை எதுவித சலனமும் இன்றி சாந்தமே உருவாகி இருக்கிறது.

ஆலயக் குருக்கள் சிலைக்கு பாதுகாப்புத் தேடி தர்மகர்த்தாக் களிடம் தலை தெறிக்க ஓடுகிறார். பாவம் கடவுளுக்கு பாதுகாப்பு அளிக்க தர்மகர்த்தாக்கள் எந்திரங்களோடு எப்போது வரப்போகின்றார்களோ..!





கலாபூஷணம் கே. பொன்னுத்துரை

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்

# ஞானம் 200ஆவது இதழ் வெளியீடும் தி. ஞானசேகரன் பவள விழாவும் ஞானரதம் மலர்வெளியீடும்


**ஞானம் 200 ஆவது இதழ் வெளியீடும் தி. ஞானசேகரன் பவள விழாவும் ஞானரதம் மலர்வெளியீடும்**

ஞானம் சஞ்சிகை 200 ஆவது இதழ் வெளியீடும் தி. ஞானசேகரன் பவள விழாவும் 22-02-2017 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் மாலை 5.00 மணியளவில் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் தலைமையில். வெகு சிறப்பாக இடம்பெற்றது. செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி 2015ல் பரிசுபெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இந்நிகழ்வின் ஓர் அங்கமாக இடம்பெற்றது. நாட்டின் நாலாபுறம் இருந்தும் இவ்விழாவில் பலர்கலந்து சிறப்பித்தனர். விழாவில் இடம்பெற்ற உரைகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது

**பேராசிரியர் தில்லைநாதன் வாழ்த்துரை**

75 வயதினை நிறைவுசெய்து பவளவிழாக் காண்பவரும் இலக்கிய உலகில் 52 வருடங்களை நிறைவு செய்தவரும் பொன்விழாக் காண்பவருமாகிய ஞானசேகரன், அவர்களை வாழ்த்துவது எங்கள் எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. அவருடைய இலக்கிய பணிபற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவர் புன்னாலைக்கட்டுவனில் பிறந்து கண்டியில் வளர்ந்து கொழும்பில் வாழ்ந்து வரும் இந்தத் தறுவாயில் எங்களுடைய புன்னாலைக்கட்டுவன் வித்துவ சிரோமணி கணேசையரின் பீட்டன் அவர் என்பதையும் அவர் புன்னாலைக்கட்டுவனில் இருந்து தனது முதலாவது சிறுகதையை எழுதி தனது இலக்கிய பயணத்தை ஆரம்பித்தவர் என்பதையும் நான் அறிவேன். கண்டியில் அவர் நீண்டகாலம் வாழ்ந்தவர் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டவர், அவர் அங்கு இருந்தபோது ஞானம் சஞ்சிகை தொடங்கியது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவரை 45 வருடங்களுக்கு மேலாகத் தெரியும் அவருடைய வாழ்க்கை நிறைவானது. குடும்பம் நிறைவானது ஞானலட்சுமி அவரது கரம்பிடித்து காரியம் யாவற்றிலும் கை கொடுத்து வருபவர். சிறந்த ஆசிரியர், சிறந்த எழுத்தாளர் அவருடைய மகன் ஞானம் பாலச்சந்திரன் ஞானத்திற்கு ஒரு புதிய பரிணாமத்தை தருபவர் என்பதையும் நான் பார்க்கிறேன். பாரதிதாசன் சொன்னமாதிரி நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். திருவள்ளுவர் சொல்கிறார் “தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.” எச்சம் என்பது அவருடைய பிள்ளைகள், மருமக்கள், அவரது பேரப்பிள்ளைகள் எல்லாருமே கலை இலக்கிய ஈடுபாடு உடையவர்களாக இருக்கின்றார்கள் என்பது மகிழ்ச்சியான விடயம். அந்த எச்சம் மட்டும் அன்றி அவருடைய இலக்கிய ஆக்கங்கள்





படைப்புகள் எல்லாவற்றிலுமே அவரது சிறப்பை நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது. நாவல்கள் எழுதியிருக்கிறார். மூன்று சிறுகதைத்தொகுதிகள் வெளியிட்டிருக்கிறார். பயணக் கட்டுரைகள் எழுதியிருக்கின்றார். இவற்றை எல்லாம் பார்த்து சுருக்கமாகச் சொல்வதனால் இந்த மானுட உறவுகளை சரியான முறையில் முகாமைத்துவப்படுத்துவதையும் சிறப்பாக மானுடம் மேன்மையுறவேண்டும் என்ற கருத்துடன் இவை படைக்கப்பட்டுள்ளதையும் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இவர் இலக்கியத்தை நேசிப்பதிலும் உற்சாகப்படுத்துவதிலும் பரப்புவதிலும் இயங்கி வந்துள்ளார். இலக்கியங்களை ஆவணப்படுத்தும் முயற்சிகளிலும் சிறப்பாக இயங்கி வந்துள்ளார். காத்திரமான மலர்களை அவர் வெளியிட்டுள்ளார். அவர் பல பட்டங்களை பதவிகள், விருதுகள், பரிசுகள், சிறப்புகள் எல்லாம் பெற்றுள்ளார். இவற்றையெல்லாம் நான் பெரிதாக பேசவேண்டியதில்லை. இவை எல்லாவற்றிலும் மேலாக நான் போற்றுவது அவர் ஒரு சிறந்த மனிதர். சிறந்த மனிதாபிமானம் உள்ளவர். சீலம் உடையவர். சீலம் என்பது மற்றவர்களுடன் பழகும் போது மிக இதமாக இனிமையாக இருப்பவர். பாரதியாருடைய சூரியஸ்தோமம் பாடலில் கூறியிருப்பது போன்று திருவளர் வாழ்க்கை, கீர்த்தி, தீரம், நல்லறிவு மருவு பல்கலையின் சோதி வல்லமை என்பவெல்லாம் வருவது ஞானத்தாலே என்ற பாடலுடன் எனது வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

**பேராசிரியர் சபா ஜெயராசா ஆற்றிய உரை**

இது மிகவும் கனதியான சபை. சிவாச்சாரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், இதழாசிரியர்கள், நீதிபதிகள், திறனாய்வாளர்கள், எழுத்தாளர்கள், சட்டத்தரணிகள் என்ற பலரும் குழுமியிருக்கின்ற மிகவும் கனதியான இந்த சபையில் இருக்கின்ற உங்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவிக்கின்றேன். நயவுரையும், விதப்புரையும், வாழ்த்துரையுமாக எனது உரையை











நிகழத்துகின்றேன்.



இலங்கையினுடைய வரலாற்றிலே 1956 ஆம் ஆண்டு ஒரு பெரிய திருப்புமுனையை ஏற்படுத்திய ஆண்டு. அந்த ஆண்டைத் தொடர்ந்து இலங்கையின் எழுத்துலகிலே நடந்த ஒரு மிகமுக்கியமான நிகழ்ச்சி Creative Elite என்று சமூகவியலிலே சொல்லப்படுகின்ற படைப்பு இலக்கிய எழுகுழாத்தினுடைய தோற்றம் இடம்பெறத் தொடங்கியது. தமிழ் அடையாளங்கள், தமிழ் தேசிய அடையாளங்கள், வினாவுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு அடையாள நெருக்கடி தோற்றம் பெற்றது. ஒரு பெரிய இருப்புத் தொடர்பான ஒரு இடைவெளி Existential Vacuum தோன்றியவேளை எழுத்தாளர்களுடைய தோற்றம் இந்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் வகையிலே இடம்பெற்றது. பல எழுத்தாளர்கள் பரவலாகத் தோற்றம் பெற்றார்கள். அதற்கு இன்னுமொரு காரணம் இலங்கையில் ஏற்பட்ட கன்னங்கராவினுடைய தாய்மொழிக் கல்வியினுடைய வளர்ச்சி. சமாந்திரமாக இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக, பத்திரிகைகள், இதழ்களுடைய தோற்றம் சிற்றிதழ்களுடைய வளர்ச்சி ஏற்படத்தொடங்கியது. இந்தப் பெரும் பண்பாட்டு அதிர்ச்சியைக் கொடுத்த பின்புலத்திலே தோற்றம் பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர்தான் ஞானம் ஞானசேகரன் ஐயா அவர்கள்.

அவருடைய ஞானம் இதழ் ஒரு மிக முக்கியமான வரலாற்றுக் கடமையைச் செய்திருக்கிறது. மூன்று முக்கியமான சிற்றிதழ்கள் பற்றிச் சொல்ல வேண்டும். ஒன்று சிற்பி ஐயாவினுடைய கலைச்செல்வி. பெரும் பிரபல எழுத்தாளர்கள் தோற்றம் பெற்ற பண்ணையாக கலைச்செல்வி விளங்கியது. அதிலே உருவாகியவர்தான் ஞானசேகரன் அவர்கள். பிற்காலத்திலே அதனைத் தொடர்ந்து ஜீவாவினுடைய மல்லிகை தென்பகுதியிலே இருக்கின்ற தமிழ் எழுத்தாளர்களுக்கெல்லாம் களம் கொடுத்து இலங்கையிலே பல எழுத்தாளர்களை உருவாக்குவதிலே மல்லிகை மிக முக்கியமான வரலாற்றுப் பணியைச் செய்தது. அதனைத் தொடர்ந்து ஞானத்தினுடைய பணி மிகவும் முக்கியமானது. இன்றைய இளந்தலைமுறை எழுத்தாளர்கள் பலர் ஞானத்தினுடைய பண்ணையிலேதான் வளர்ந்தவர்கள், வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவருடைய பணிபற்றிக் கூறும் போது மிக முக்கியமாக அமைந்தது என்னவெனில் கொழும்புத் தமிழ்ச்சங்கம் கூட அத்தகைய ஒரு முயற்சியை எடுத்தது. அது அனைத்துலகத் தமிழ் ஆய்வு மையம். இன்று Diaspora என்ற நிலையில், உலகம் முழுவதும் தமிழ் மக்கள் சிதறிவாழும் நிலையில் எழுத்தாளர்கள் ஆய்வாளர்கள் சிதறிவாழும் நிலையிலே அவர்கள் அனைவரதும் ஆக்கங்களை ஒன்றிணைக்கும் வகையில் ஒரு நடுநிலையம் தேவைப்படுகிறது. எழுத்துலகுக்கும் ஒரு நடுநிலையம் தேவைப்படுகிறது. இன்று உலகம் முழுவதும் பரந்து வாழும் எழுத்தாளர்களின் எழுத்துக்களை வாசிக்க வேண்டுமானால் ஞானத்திலேதான் வாசிக்க வேண்டியிருக்கிறது. அந்த ஒரு பெரும்பணியை உலகம்முழுவதும் பரந்து வாழும் எழுத்தாளர்களுடைய எழுத்துக்களை ஞானம் இதழுக்குக் கொண்டுவந்து பெரும் ஒரு இணைப்பை ஏற்படுத்துகின்றவராக தமிழ் உலகம் போற்றும் ஒரு பணியை செய்பவராக ஞானம் ஐயா விளங்குகின்றார்.

அவருடைய இலக்கியப் பணிபற்றிச் சொல்வதானால் அவர் எழுதிய குருதிமலை அவருக்குப் பெரும் புகழைக் கொடுக்கின்ற ஒரு நாவலாக அமைந்தது. குருதிமலை என்பது மலையக மக்களின் வாழ்க்கையின் அவலத்தைக் காட்டும் அந்தப் பெயரே ஒரு பெரும் குறியீடாக இருக்கின்றது.

இந்த எழுத்துப் பணியைச் செய்கின்ற வேளை முக்கியமாக அவர் தமிழ் இலக்கியத்துக்குச் செய்யும் பங்களிப்புகளில் மற்றுமொன்று பிரயாண இலக்கியம். இன்று இலக்கிய உலகிலே மிகவும் வளர்ச்சி பெற்ற ஒரு வகையாக பயண இலக்கியம் இருக்கின்றது. பிரயாண இலக்கியம் என்பது உண்மையான நடப்பு நிலைவரங்களும் புனைவுகளும் கலந்த ஒரு செழுங்கலவையாக ஒரு Blend பண்ணி ஆக்கப்பட வேண்டியது. அந்த வகையிலே அவர் ஆக்கித்தந்த பிரயாண இலக்கியங்கள், எமது நாட்டின் பிரயாண இலக்கிய வரலாற்றிலே என்றும் நிலைத்து நிற்கும் தகைமை பெற்றது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஐயா அவர்களினுடைய மொழிநடை பற்றியும் உரைநடைபற்றியும் நான் கூறவேண்டும். அவர் பயன்படுத்துகின்ற அந்த மொழி, திறனாய்வுக் கண்ணோட்டத்திலே கூறுவதனால், Soft Language அதாவது மொழியை மென்மையாகக் கையாளக்கூடிய திறமை. எந்த நிகழ்ச்சியையும் எந்தச் சித்தரிப்பையும் அவர் மேற்கொள்ளும்போது அவரது மொழிப்பிரயோகத்தில் ஒரு இங்கிதமான

மென்மை இருக்கும். இத்தகைய மொழிநடையைக் கையாளக்கூடிய எழுத்தாளர்கள் ஒரு சிலர்தான் எம்மத்தியிலே வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அதுவும் அவருடைய ஆற்றல்களிலே மிகவும் முக்கியமானது.

ஐயா அவர்களுடைய இன்னுமொரு முக்கியமான பணியாக தமிழ்ச்சங்கத்துக்கு ஆற்றிய பணியையும் இந்த இடத்திலே குறிப்பிட வேண்டும். இலங்கையிலே இருக்கின்ற மிகப்பெரிய நூலகங்களிலே ஒன்று தமிழ்ச்சங்க நூலகம். அந்த நூலகம் மரபுவழியான கொடுக்கல் வாங்கல்களைத்தான் செய்து கொண்டிருந்தது. ஐயா அவர்கள் நூலகச் செயலாளராகப் பொறுப்பேற்றபோது இந்த யுகத்துக்கு வேண்டிய மிக முக்கியமான பணியைச் செய்தார். அதனை எண்ணிமைப்படுத்துவதிலே கணினி மயப் படுத்துவதிலே ஒரு தொண்டைத் தொடக்கி வைத்தார். அந்தச் செயற்பாடு இன்று நடந்து கொண்டிருக்கிறது. அவருடைய மகனுடைய பங்கும் அதிலே மிக முக்கியமாக அமைந்தது. அது அவர் செய்த மிக முக்கியமான பணிகளிலே ஒன்று.

இந்த ஞானம் சஞ்சிகை ஒரு புறம் எழுத்தாளர்களை வளர்த்தது மட்டுமல்ல இன்னொரு புறம் உலக எழுத்தாளர்களை ஒன்றிணைத்தது மட்டுமல்ல இன்று இலக்கிய வளர்ச்சியில் அண்மைக்காலமாக மிக முக்கியமாகப் பேசப்படுகின்ற ஒரு விடயம் கட்டுரை இலக்கியத்தினுடைய வளர்ச்சி. ஞானம் சஞ்சிகை கட்டுரை இலக்கியத்துக்கு முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. தலைவர் நா. சுப்பிரமணிய ஐயா கூட ஞானத்தில் தொடர்ச்சியாக முக்கியமான கட்டுரைகளை எழுதியுள்ளார். இந்தக் கட்டுரை இலக்கியம் இன்று உலகம் முழுவதும் பரவலாக வாசிக்கப்படுகின்ற ஒரு இலக்கிய வடிவமாக இருக்கின்றது. Non Fiction தான் தற்போது பத்திரிகைகளிலே கூடுதலாக வந்து கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் எல்லா மொழிகளிலும் வாசிக்கப்படுவது இந்த புனைகதை சாராத இலக்கியங்கள். அதனை வளர்ப்பதிலும் ஞானம் சஞ்சிகை ஒரு முக்கியமான பணியைச் செய்து வருகின்றது. இலங்கையில் உள்ள எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், கட்டுரையாசிரியர்கள் பலர் கட்டுரைகளை பரவலாக ஞானத்தில் எழுதி வருகிறார்கள்.

இன்னுமொரு முக்கியமான பணியை அவர் செய்துள்ளார் எழுத்தாளர்கள் கலைஞர்களை அவர் செவ்விகாணுதலை மேற்கொண்டு வருகிறார். விரிவான செவ்விகாணலை ஆவணப்படுத்தி அதனை வெளியிட்டிருக்கிறார். அது ஒரு முக்கியமான பணி. இன்று நாங்கள் பேராசிரியர் சிவத்தம்பியைப் பற்றிப் பேசும்போது அவருடைய செவ்வி காணலைத்தான் அடிப்படையாக வைத்துப் பேச வேண்டிய அளவுக்கு மிக முக்கிமான நேரடியான நம்பத்தகுந்த தகவல்களை உள்ளடக்கிய இந்த நேர்காணல்களைத் தந்திருப்பது மிக முக்கியமானது. அவர் அண்மையில் வெளிக்கொணர்ந்த உலகளவிலே அங்கீகாரம் பெற்ற எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களுடைய நேர்காணல் பரவலாக தமிழ் உலகம் முழுவதும் பேசப்பட்டது. அது சமீபத்திலே ஞானத்தில் பிரசுரமாகி இருந்தது. நேர்காணல் என்பதும் ஒரு இலக்கிய வகைமையாக வளர்ந்து வந்துகொண்டிருக்கிற வேளையிலே அதற்கும் அவர் முக்கியமளித்து வருகிறார்.

இவ்வாறாக ஞானசேகரன் ஐயாவின் இலக்கியப் பரிமாணங்களை பேசுவதானால் பல கருத்தாடல்களுக்குரிய விடயங்கள் இருக்கின்றன. அவற்றை அவர் முன்னெடுத்து இருக்கின்றார். ஐயா அவர்களுடைய பணிகள் தொடரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் நா.சுப்பிரமணியன் தலைமை உரை**



இதை ஒரு உணர்ச்சிகரமான நிகழ்வாக என்னாலே பார்க்க முடிகிறது. ஞானம் வெளியிட்டிருக்கும் இந்த நூல்களைப் பார்க்கும் பொழுது எனக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிகரமான அம்சம் என்னவென்றால் 60 ஆண்டுகளாக இலக்கிய உலகிலே இடம்பெற்ற ஊடாட்டத்தை அவதானித்துக் கொண்டு வந்தவன் என்ற வகையிலே அந்த வரலாற்று ஆதாரங்களை எல்லாம் தொகுத்து இதுதான் ஆராய்ச்சி செய்ய வேண்டிய தளம் என்ற திட்டவட்டமாக வரையறுக்கக்கூடிய ஒரு பணியை இவர் செய்திருக்கிறார். நாங்கள் பலவற்றை இழந்துவிட்டோம் என்று கவலைப்படுகிறோம் யாழ்ப்பாணத்திலே எங்கள் நூல கத்தை இழந்தோம். அந்த நூலகத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம் இவையெல்லாம் உணர்ச்சிகரமான அம்சங்கள். அந்த உணர்ச்சிக்குள்ளே போகாமல் எனது தலைமையுரையில் முக்கியமானவற்றைக்கூறுகின்றேன்.

இன்று ஒரு இனிய நாள் இது எனக்கு மட்டுமல்ல. ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கும் உங்களுக்குமான இனிய நாள். இலக்கியம் தொடர்பான ஆவணங்கள் இரண்டு உங்கள்

பார்வைக்கு வருகின்றன ஒன்று அவரைப்பற்றி மற்றவர்களின் மனப்பதிவாக அமைந்த ஞானரதம். இன்னொன்று, அவரது வினாக்களினூடாக மற்றவர்கள் தம்மைப் பிரதிபலித்துக் கொண்ட படைப்புகளாக வந்த நேர்காணல். இந்த இரண்டு நூல்களும் எமது கவனத்துக்கு வருகின்றன. இந்த இரண்டு நூல்களுக்கும் இடையிலே என்னுடைய பார்வை என்னவென்றால், ஈழத்து இலக்கியத்தினுடைய வரலாறு இந்த இரண்டு நூல்களுக்கும் இடையிலே அசைந்து நகர்ந்து வருகின்ற காட்சியை நான் பார்க்கின்றேன். இந்த ஞானரதத்திலே நானும் துணைவியாரும் எழுதிய ஒரு வாழ்த்துக்கட்டுரை இருக்கிறது. நேர்காணல் நூலிலும் எனது நேர்காணல் இருக்கிறது. இங்கே சொல்லவேண்டிய விடயம் இந்த இரண்டு நூல்களும் **காலதரிசனங்கள்** என்பதுதான். அதாவது காலத்தின் கண்ணாடிகளாகத் திகழ்பவை. ஈழத்துத் தமிழ் இலக்கிய வெளியின் நூற் றாண்டு வரலாறுச் செய்திகளை இனங்காட்டும் கண்ணாடிகளாக இவை இருக்கின்றன. ஒன்று தி.ஞானசேகரன் என்கிற தனிமனித ஆளுமையின் சமூகப் பண்பாட்டு நிலைப் பங்களிப்பாக வந்த ஞானரதம். இன்னுமொன்று 60 தனி ஆளுமைகளின் பார்வையினூடாக இலக்கியம் இயங்கிவந்த நிலையைக் காட்டுவது. ஒன்றிலே நூறுபேர் பங்கு பற்றியிருக்கிறார்கள் இன்னொன்றிலே 60 பேர் பங்குபற்றியிருக்கிறார்கள். இந்த நூல்களினூடாக கடந்த ஒரு நூற்றாண்டின் வரலாற்று இயக்கத்தை நாங்கள் பார்க்கின்றோம்.

1973 ல் இவரது காலதரிசனம் என்ற நூல் வெளிவந்தது. இன்று 40 ஆண்டுகள் கழிந்த நிலையிலே இரண்டு காலதரிசனங்களை உங்கள் முன் ஞானசேகரன் வைத்துள்ளார். நான் அப்படித்தான் இதனைப் பார்க்கிறேன். ஞானசேகரன் என்ற எழுத்தாளர் 73ல் அடிபதித்த எழுத்தாளர். 40 வருடங்கள் கழிந்த நிலையில் இரண்டு காலதரிசனங்களை உங்கள் முன் வைத்துள்ளார். இதனை நான் ஒரு விஸ்வரூபமாகவும் பார்க்கிறேன். விஸ்வரூபம் என்று சொல்லும்போது அது ஒரு காவியச்சொல் வாய்ந்த வார்த்தை. ஒருவர் எவ்வளவு தூரம் தன்னை உயர்நிலைக்குக் கொண்டு செல்லமுடியும் என்ற விஸ்வரூபத்தை நான் காண்கிறேன். ஞானசேகரனுடைய இலக்கியச் செயற்பாடுகளை நான் ஆரம்பம் முதலே அவதானித்து வந்தவன். கனடாவில் இருந்தும் கவனித்துக் கொண்டு இருக்கிறேன். அந்த நிலையில் நான் ஞானசேகரனுடைய விஸ்வரூபத்தை தற்போது காண்கிறேன். பாராட்டுரையாக நான் இதனைச் சொல்லவில்லை. உணர்வுபூர்வமாக நான் உணர்ந்து சொல்கிறேன். வரலாறு என்பது ஒன்றைப் பரிமாணம் கொண்டது அல்ல. அது பல நிலைகளில் பல அனுபவங்களில் வெளிப்படும் ஒரு இயங்குதளம். இந்த இயங்கு தளத்தை வழிநடத்திக் கொண்டு இருக்கின்ற முனைப்பான அம்சங்களை இனங்காட்டுகின்ற அந்த அனுபவங்களையும் சிந்தனைகளையும் தேடித் திரட்டித் தருபவையாகவே இந்த இரண்டு ஆக்கங்களும் திகழ்கின்றன. டாக்டர் ஞானசேகரன் அவர்கள் அவருடைய துணைவியார், மகன் பாலச்சந்திரன் இந்தத் தொகுப்புக்குப் பின்புறமாக இருந்த செல்லத்துரை சுதர்சன் இவர்கள் அனைவரும் இந்தச் செயற்பாட்டினூடாக உங்கள் மத்தியிலே வருகிறார்கள். இதனை ஒரு அரங்கேற்றம் என்று சொல்லலாம். தக்கவர்கள் மத்தியிலே இதனுடைய தகுதியை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகின்ற அரங்கேற்ற நிகழ்வாக இது திகழ்கின்றது. இந்த நிகழ்விலே என்னுடைய பங்கு என்ன? டாக்டர் ஞானசேகரன் அவர்களுடைய பெரும்பணியை எனது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும் எனக்கும் எனது துணைவியாருக்கும் இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. என்னை இந்த விழாவுக்குத் தலைமை வகிக்க அழைத்த டாக்டர் ஞானசேகரன் அவர்களுக்கும் அவரது துணைவியாருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் எனது அன்பையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஈழத்து இலக்கிய வரலாற்றைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில் கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து இயங்கி வருபவன் என்ற வகையிலேயும் ஞானசேகரனுடைய தனிப்பட்ட இலக்கியச் செயற்பாட்டை தொடர்ந்து நான் கவனித்து வருபவன் என்ற வகையிலும் எனக்கு உரிமையும் இருக்கிறது. பொறுப்பும் இருக்கிறது. இவருடைய குருதிமலை நாவலைப் பற்றி பேராசிரியர் சபா ஜெயராசா இங்கு கூறினார்கள். இது 80 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டபோது அதனை ஆய்வு செய்ய நானும் டொமினிக் ஜீவாவும் அழைக்கப்பட்டிருந்தோம். அன்றுதான் ஞானசேகரனை எனக்குத் தெரியும் அன்றிலிருந்து அவருடனான தொடர்பு எனக்கிருக்கிறது. பின்னர் அதன் இரண்டாவது பதிப்பு 95 ஆம் ஆண்டு வெளிவந்தபோது அதற்கு அணிந்துரை வழங்குகின்ற வாய்ப்புக் கிடைத்தது. 2009 ஆம் ஆண்டு வெளிவந்த எனது ஈழத்து நாவல் இலக்கியம் இரண்டாவது பதிப்பிலே அந்த முன்னுரையை நான் சேர்த்திருக்கிறேன். முக்கியமாக ஞானசேகரனுடைய பன்முக ஆளுமைப்பற்றிக் குறிப்பிட

வேண்டும். அதனைப் பேராசிரியர் தில்லைநாதன் அவர்களும் இங்கு கூறினார். பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களும் கூறியிருக்கிறார். ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றிலே கடந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகச் சமூகப் பொறுப்புடன் தீவிர பங்காற்றியிருக்கும் முக்கியமானவர் என்ற வகையிலே டாக்டர் ஞானசேகரன் பாராட்டுக்கு உரியவராகின்றார். ஒரு இலக்கியவாதி என்ற வகையிலும் சமூகப் பொறுப்புள்ள ஒரு கல்வியாளன் என்ற வகையிலும் ஞானசேகரன் அவர்கள் ஒரு பன்முக ஆளுமை கொண்டவராக விளங்குகிறார். எழுத்தாளன், இதழ் ஆசிரியர், பதிப்பாளர், இலக்கிய புரவலர், இலக்கிய நிறுவனங்களின் உறுப்பினர், ஆய்வாளர், ஆய்வரங்கச் செயற்பாட்டாளர் இப்படி பல நிலைகளில் இயங்கி வந்திருக்கிறார். இதழாசிரியர் என்ற நிலையிலே முக்கியம் என்னவென்றால் அவரது பன்முகத் தன்மைகளிலெல்லாம் அவர் இயங்குவதற்கு அடித்தளமாக இருப்பது அவர் ஒரு இதழாசிரியராக இருப்பதுதான். இதழாசிரியராக இருந்து கொண்டு அதனுடைய தளத்திலே அவர் பன்முகச் செயற்பாட்டாளராக விளங்குகின்றார். இந்த விடயத்திலே ஒரு எழுத்தாளர் ஓர் இதழாசிரியராக இருப்பது பற்றிய ஒரு குறிப்பை நான் இங்கு முன் வைக்கிறேன். ஒருவர் எழுத்தாளராகத் தன்னுடைய படைப்பொன்றை தரும்போது சமூக வெளியிலே தன்னுடைய சிந்தனைத் திறனை எழுத்தாற்றலை அறிமுகம் செய்கிறார். அதேவேளை அவர் இலக்கிய இதழாசிரியராக மாறும்போது சமூகத்தின் பல்வேறுபட்ட சிந்தனைத்திறன் படைப்பாளுமை ஆகியவற்றைச் சமூக வெளியில் பதிவு செய்வதற்கான ஒரு தளமாக அவர் தன்னை மாற்றி அமைத்துக் கொள்கிறார். தானாக வெளிவரும் போது அவர் ஓர் இலக்கியவாதி ஆனால் சமூகம் முழுவதையும் வெளிக்கொணர்ந்து தளமாகத் தன்னை மாற்றிக் கொள்ளும் நிலையிலே அவர் இன்னுமொரு பரிமாணத்துக்கு வருகிறார். சமூகத்தின் படைப்பாற்றலைத் தேடித்திரட்டிக் கொடுத்து அடுத்த தலைமுறைக்கு வழங்குகின்றவராக ஒரு இதழாசிரியராக மாறிவிடுகிறார். இது டாக்டர் ஞானசேகரனுக்கு மட்டுமல்ல சகல இதழ் ஆசிரியர்களுக்கும் பொருந்தும். அவர்கள் தங்களை முன்னிலைப்படுத்தவில்லை, தங்களுக்கு ஊடாக ஒரு சமூகத்தை முன்னிலைப்படுத்துகிறார்கள்.

அந்தச் செயற்பாட்டினூடாக அவரை நாங்கள் பார்க்கின்றோம். ஞானசேகரன் அவர்கள் இதழாசிரியர் என்ற நிலையில் இலக்கிய வரலாற்றை வழிநடத்தும் ஒரு செயற்பாட்டாளராக அவரை நாங்கள் பார்க்கிறோம். இந்த இடத்திலே இதழ் வெளியீட்டினது சமூகப் பங்களிப்பு என்ன என்பது பற்றி ஒரு குறிப்பையும் நான் கூற விரும்புகிறேன். இதழ் வெளியீடு என்பது ஒரு சமூகத்தின் பண்பாட்டை இயக்கும் நோக்கிலான ஒரு செயற்பாடாகும். குறித்த ஒரு சமூகத்தின் சிந்தனைத் திறனையும் எழுத்தாள நிலையையும் கூர்மைப்படுத்தி அடுத்த கட்டத்திற்கு வளர்த்தெடுத்தல் என்பதே இலக்கிய இதழின் வெளியீட்டின் அடிநாதமான அம்சமாகும். சமூகத்தின் பன்முகப்பட்ட சிந்தனைகளும் அவை தொடர்பான எழுத்துக்களும் பரஸ்பரம் பகிர்ந்து கெள்ளப்படும் நிலையிலேயே மேற்படி வளர்ச்சி என்பது சாத்தியமாகின்றது. இவ்வாறான பகிர்தலுக்கான நோக்கிலே உருவாகுபவைதான் இலக்கிய இதழ்கள். அந்தப் பண்பாட்டை சிந்தனையை இவை வளர்த்துக் கொண்டு செல்கின்றன. இவ்வாறான நோக்கு நிலையில் பண்பாட்டை இயக்கும் சாதனங்கள்தான் இதழ்கள். ஞானசேகரன் அவர்கள் ஞானம் இதழில் ஈழத்தமிழ் சமூகத்தின் பண்பாட்டை அதன் உலகரீதியான ஊடாட்டத்தின் பண்பாட்டை பதிவு செய்யும் செயற்பாட்டை ஆற்றி வந்திருக்கிறார். அதற்கான கணிப்பையும் பெற்றிருக்கிறார். அதிலே ஞானசேகரனுடைய ஒரு குறிக்கோள் வாசகம் இருக்கிறது. 'பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்.' அந்தக் குறிக்கோள் வாசகம் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. இந்த குறிக்கோளை ஞானம் எவ்வாறு செயற்படுத்தி வந்திருக்கிறது என்பது பற்றி ஈழத்திலும் தமிழகத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலான ஆய்வுகள் பல நிகழ்ந்திருக்கின்றன. இன்னும் நிகழ்ந்து வருகின்றன. இது கல்வி உலகில் தமிழகத்திலும் ஈழத்திலும் அதனூடாக ஞானசேகரனுக்கு கிடைத்த ஒரு பெரிய அங்கீகாரம் என நான் கருதுகிறேன்.

இந்த நேர்காணல்கள் பற்றிப் பேசுவதனால் தனியாகப் பேசலாம். அது ஒரு நாளில் பேசுகின்ற விடயமல்ல. நாள் கணக்காகப் பேசப்படவேண்டிய விடயம் அந்த நேர்காணல்களின் சிறப்பு அம்சத்தை ஒரு வரலாற்று ஆசிரியன் என்ற வகையில் நான் எவ்வாறு பார்க்கிறேன் என்பதைச் சுருக்கமாக இங்கு குறிப்பிடுகிறேன். இந்த நேர்காணல்கள் ஒரு முக்கிய வரலாற்றுப் பணியாகும். இவ்வகை நேர்காணல்கள் ஓரிரு இதழ்களில் மட்டும் நிறைவுபெறாமல் பல இதழ்களில் தொடர்ந்து இடம்பெற்று வருவது ஒரு சிறப்பு அம்சமாகப் பலரால் கணிக்கப்பட்டிருக்கிறது. இலக்கியவாதிகள் தமது முழுநிலையினான அனுபவசாரங்களை எடுத்துரைப்பதற்கு சிவத்தம்பி, எஸ்.பொ.





போன்றவர்களுக்கு களம் வழங்கப்பட்டிருக்கிறது. செங்கை ஆழியான், தெளிவத்தை ஜோசப் போன்றோருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. எனக்குக்கூட அந்த வாய்ப்புக் கிடைத்தது. எங்களை முழுமையாக வெளிக்காட்டிகொள்வதற்கு ஞானம் இதழ் ஒரு பரந்த தளத்தை நேர்காணல் ஊடாகத் தந்திருக்கிறது. கடந்த ஐம்பது ஆறுபது கால கட்டத்தில் எத்தகைய சிந்தனைகளுக்கு ஊடாக இலக்கியம் நகர்ந்து வந்திருக்கிறது என்பதை இந்த நேர்காணல்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன. பல ஆய்வுகள் நடத்துவதற்கான அடிப்படைத் தளமாக இவை அமைந்திருக்கின்றன. இப்படி நேர்காணல் காணுகின்ற முறை ஞானத்துக்கு மட்டுமே அமைந்திருக்கிறது என்று நான் மட்டும் சொல்லவில்லை. அதனை வல்லிக்கண்ணன் சொல்லியிருக்கிறார் என்பதை இத்தொகுப்பிலே காணலாம். தமிழகத்திலே ஞானத்தினுடைய செயற்பாடுகள் எத்தகைய கவனத்தைப் பெற்றிருக்கின்றன என்பதற்கு ஒரு பதச்சோறு போல அந்த வல்லிக்கண்ணனுடைய கூற்றை நான் இங்கே கருதுகிறேன். இன்று வெளியிடப்படவுள்ள இருநூல்கள் தொடர்பான சில அறிமுகக் குறிப்புகள் உங்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நூல்கள் பல ஆண்டுகள் பேசப்படும் தகுதி உடையன.

கலை இலக்கியத் துறையில் நீண்டகால அனுபவம் உடையவர்களும் இத்துறையில் புதிதாக அடிபதிப்பவர்களும் சங்கமிப்பதற்கு ஒரு தளமாக கலை இலக்கியப் பாலமாக ஞானம் செயற்பாட்டு வருகிறது. ஞானத்தை மட்டும் நான் சொல்லவில்லை ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி, மல்லிகை, அலை, தாயகம், மூன்றாவது மனிதன் என வந்து கொண்டிருக்கிற வரலாற்றிலே இன்று ஞானம் அதனைச் செய்து கொண்டிருக்கிறது. சிறப்பு மலர்கள் என்ற வகையில் ஞானம் வெளியிட்ட புலம்பெயர் இலக்கியம், போர் இலக்கியச் சிறப்பிதழ் போன்றவை முக்கியமானவை. இவற்றிற்குத் தமிழகத்திலேயும் அனைத்துலக மட்டத்திலேயும் கனடாவிலேயும் மிகப்பெரிய வரவேற்புக்கிடைத்தது. புலம்பெயர் சிறப்பிதழை கனடாவிலே ரொறன்றோ தமிழ்ச் சங்கத்திலே நாங்கள் அறிமுகம் செய்தோம். டாக்டர் லம்போதரன் தலைமையில் இடம்பெற்ற விழாவிலே நானும் உரையாற்றினேன். இன்னும் பலர் கலந்து கொண்டார்கள். மிகச் சிறப்பாக அந்த விழா நடைபெற்றது. ஈழத்தின் சமகாலச் செல்நெறியையும் உலக நிலையிலான செல்நெறியையும் தொடர்புபடுத்தி வழி நடத்தும் ஓர் இலக்கிய இயக்கமாக ஞானம் திகழ்ந்துள்ளது என்பதை புலம்பெயர்ந்து வாழும் நாங்கள் தரிசித்து வருகிறோம். இப்படிப்பட்ட கௌரவத்துக்குரிய இந்த இதழை நடத்துகின்ற ஞானம் அவர்களுக்கு இது பவளவிழா ஆண்டு. அவருடைய இரண்டு புத்தகங்களும் ஒன்றாக வந்திருப்பதுவும் ஒன்றைக் காட்டுகிறது. ஒன்று அவருடைய பவளவிழா மற்றது அவருக்கூடாக ஈழத்து இலக்கியத்தினுடைய ஏறத்தாழ 60 ஆண்டுகளின் வரலாற்றுப்





போக்கைக் காட்டுகின்ற 200 ஆவது இதழ். இந்த செயற்பாட்டை செய்த ஞானசேகரனுக்கு எத்தகைய கௌரவத்தினை நீங்கள் வழங்கப் போகிறீர்கள்? அரசு கௌரவிக்கலாம், பல்கலைக்கழகங்கள் கௌரவிக்கலாம், சமூக நிறுவனங்கள் கௌரவிக்கலாம். ஆனால் ஒருவர் கௌரவிப்பதற்கான வயது எல்லையை அடைந்த நிலையில் சமூகம் உங்களை உரியமுறையிலே கௌரவிக்கும். அதுவே இங்கு வாழ்த்துரையாக கூறப்படவேண்டிய விடயம். அவரை மட்டும் நாங்கள் வாழ்த்தவில்லை அவரது குடும்பத்தினரையும் வாழ்த்துகிறோம்.

தமிழிலக்கியப் பரப்பிலே புலம்பெயர் இலக்கியம் என ஒரு தலைமுறை காலமாக அடையாளப்படுத்தப்பட்ட செல்நெறியானது அந்தப் புலம்பெயர் இலக்கியம் என்ற அடையாளத்தைக் கடந்து இன்னுமொரு தளத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அவுஸ்திரேலிய தமிழ் இலக்கியம், வடஅமெரிக்கத் தமிழ் இலக்கியம், கனடியத் தமிழ் இலக்கியம், ஐரோப்பியத் தமிழ் இலக்கியம் என்றெல்லாம் வரையறை செய்யக் கூடிய நிலைக்கு புலம்பெயர் இலக்கியம் போய்க்கொண்டிருந்தது. அந்த அந்த நாடுகள் அதனை அடையாளப்படுத்தத் தொடங்கிவிட்டன. அதனையும் தாண்டி இன்னொரு தளத்துக்கு புலம்பெயர் இலக்கியம் என்ற படிமம் உருவாகி வருகிறது. உலக மட்டத்திலான இந்த வளர்ச்சிப் போக்குகளை உடனுக்குடன் ஈழத்து இலக்கியச் சூழலுக்கு அறிமுகம் செய்வதற்கும் ஈழத்து இலக்கியவாதிகளின் சிந்தனைகளை தமிழகத்துக்கும் அனைத்துலகத்துக்கும் இலக்கியவாதிகள் தொடர்பு கொள்வதற்கும் முக்கியமான இணைப்புப் பாலமாக ஞானம் சஞ்சிகை திகழ்ந்துகொண்டிருக்கிறது. அந்தக் கட்டத்துக்கு அவர் ஞானம் இதழை வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறார். இன்னும் பல கட்டங்களை நோக்கி ஞானம் சஞ்சிகை வளரவேண்டும். அதற்கு நீங்களும் ஆதரவு கொடுக்க வேண்டும். நாங்களும் ஆதரவு கொடுப்போம், எனக்கூறி எனது தலைமை உரையை நிறைசெய்கின்றேன்.

**ஹேமச்சந்திர பதிரனவின் உரை**



உங்கள் முன்னிலையில் தமிழில் பேசுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். ஞானசேகரனுடைய இலக்கியப் பணிகள் பற்றி உங்களுக்கு நன்கு தெரியும். ஆனாலும் ஒரு சிங்கள வாசகன் என்ற வகையிலும் அவருடைய சிறுகதைகளை சிங்களத்தில் மொழிபெயர்த்தவன் என்ற வகையிலும் நான் மொழி பெயர்த்த சிறுகதைகளுக்கு சிங்கள வாசகர்கள் மத்தியில் வரவேற்பும், ஞானசேகரனுடைய வரலாற்றுப் பதிவு போன்ற நாவலை சிங்கள மொழிபெயர்ப்பினை வாசித்தவன் என்ற வகையிலும் சிங்கள வாசகர்கள் அவற்றை வாசித்து அவர்கள் என்னோடு பரிமாறிக்கொண்ட கருத்துக்களைபற்றி சில வார்த்தைகள் இங்கு கூறவிரும்புகிறேன். அதற்கு முன்னதாக ஞானம் இதழ் சிறப்பிதழ் வெளியீடு பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

குருதிமலை நாவலை நான் வாசித்திருக்கிறேன். இவருடைய நாவலை வாசித்த சிங்கள வாசகர்கள் இலக்கியத்துறையில் உள்ளவர்கள் சிங்கள இலக்கியங்கள் இலங்கையில் அடைந்துள்ள முன்னேற்றங்களை இன்னும் தமிழ் எழுத்தாளர்கள் அடையவில்லை என்ற கருத்துக்கு மாறாக அது அவ்வாறில்லை. தமிழ் எழுத்தாளர் மத்தியிலே சர்வதேச தரம் வாய்ந்த எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக குருதிமலை இருந்திருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்து.

நான் அவ்வாறு கூறுவதற்கு அதனை நிரூபிப்பதற்கு சில விடயங்களைக் கூற விரும்புகிறேன். குருதிமலை நாவலை வாசிக்கும்போது அந்த படைப்பை முன்வைப்பதில் உள்ள ஆற்றலைக் கண்டு நான் வியப்பு அடைந்தேன். நிறுத்தாமல் ஒரே மூச்சில் வாசிக்கக் கூடிய விதத்தில் அவர் அந்த நாவலைப் படைத்துள்ளார். அவருடைய நோக்கம் மலையக மக்களின் குடியுரிமை இல்லாத மக்களின் அந்த அவல நிலை வெளிப்படுத்துவதாக இருந்தாலும் அதற்கிடையில் மிக அழகாக ஒரு காதல் கதையும் அவர் கொண்டு வந்திருந்தார். சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் இந்திய வம்சாவழி பெண் ஒருத்திக்கும் இடையில் ஏற்பட்ட காதல்கதை. ஒரு இனவாதம் இல்லாமல் இந்த நாவலைப் படைத்திருக்கிறார். ஒரு சர்வதேச தரத்தை எட்டிய ஒரு எழுத்தாளன் சிந்திக்க வேண்டிய ஒரு பண்பு ஒரு பக்கச்சார்பு இல்லாது தனது படைப்புக்களை எழுத வேண்டும். அவருடைய படைப்புக்கள் இந்த நாட்டுக்கும் உலகிற்கும் பொருத்தமானவை. அந்த நாவலில் ஒரு இடத்திலே சிங்கள இளைஞனுக்கும் தமிழ்ப் பெண்ணுக்கும் இடையில் காதல் விவகாரம் இருப்பதை அறிந்த சிலர் கூறினார்கள் அந்தச் சிங்கள இளைஞன் தமிழ்ப் பெண்ணொருத்தியைத்

திருமணம் செய்ய மாட்டான் கற்பழித்து அவளைக் கைவிட்டு வேறொருத்தியை மணந்து கொள்வான் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் ஞானசேகரன் நினைத்திருந்தால் அவ்வாறு கதையை எழுதி அந்த தமிழ் மக்கள் இடையில் அந்த மலையகப் பகுதியில் வாழ்ந்த சிங்கள மக்களின் மேல் வெறுப்பு உணர்வு ஏற்படுத்தியிருக்கலாம். அவர் அவ்வாறு செய்யவில்லை. இறுதியாக அவர்கள் இருவரும் காதல் கனவை நனவாக்கிக் கொள்கின்றனர். சிங்கள வாசகர்களிடத்தில் இவருக்கு ஒரு பெருமதிப்பு உண்டு. இவர் ஒரு இனநல்லுறவைக் கட்டி எழுப்புவதற்கு தனது படைப்பு இலக்கியம் மூலம் பாடுபடுகின்ற ஒருவர். இலங்கைக்கு அதுதான் தேவை என்ற எண்ணம் பரவலாகச் சிங்கள வாசகர் மத்தியிலே பேசப்பட்டது.

இவர் அந்த நாவலில் அரசியல்வாதிகளையும் அரசாங்கச் செயற்பாடுகளையும் விமர்சிக்கின்றார். அதே நேரத்தில் சிங்களப் பொதுமக்கள், தமிழ் மக்களின் நிலைமையை உணர்ந்து தமிழ் மக்களுக்கு உதவி செய்ய மனப்பான்மையுடையவர்களாக இருக்கின்றார்கள் என்பது அவரது படைப்பின் மூலம் கூறப்படுகின்றது. இது மாத்திரமில்லை இவருடைய பன்முக ஆளுமையை நாங்கள் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இவர் பல விஷயங்களை எழுதியுள்ளார். யுத்தம் பற்றிய சிறுகதைகள், யாழ்ப்பாண சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய கதைகள், இடப்பெயர்வு காரணமாக தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட கலாசார மாற்றங்கள், குடியுரிமையில்லாத மக்களின் அவலநிலை இப்படி பல விஷயங்களை இவர் எழுதியிருக்கிறார். இவருடைய கதைகளில் நான் அவதானித்த இன்னுமொரு முக்கியமான விடயம் சொற்சிக்கனம் என்று சொல்லலாம். தேவையற்ற சொற்கள் இவருடைய படைப்புகளில் காணப்படுவதில்லை. அத்தோடு இவருடைய சிறுகதைகளில் நாவல்களில் ஒரு கதாபாத்திரம் இருந்தால் அந்தக் கதாபாத்திரத்துக்கு நிச்சயமாக ஒரு Roll, ஒரு வகிபாகம் இருக்கும். இவைதான் ஒரு சிறந்த படைப்பாளியின் பண்பு என நான் நினைக்கின்றேன். சிங்கள வாசகர்கள் மத்தியில், சிங்கள இலக்கியவாதிகள் மத்தியில் இவருக்கு மதிப்பு ஏற்படுவதற்கு இன்னுமொரு முக்கியமான காரணம் ஞானம் இதழ் - மல்லிகை ஜீவா செய்தது போன்று இவரும் சிங்கள படைப்பாளர்களுக்கும் படைப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். உதாரணமாக இவரது போர் இலக்கியச் சிறப்பிதழில் கூட சிங்கள மற்றும் முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகள் இடம்பெற்றிருக்கின்றன.

நான் அவதானித்தேன் லறீனாஹக் என்ற படைப்பாளி மஞ்சுள வெடிவர்த்தனாவின் கவிதையை மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தார். இவ்வாறு மூவின எழுத்தாளர்களுக்கும் இடம் கொடுக்கின்ற தன்மை மிகவும் சிறந்த இதயம் உள்ளவருக்குத்தான் இருக்க முடியும். அதேபோன்று நான் அவதானித்தேன் இவரது ஞானம் சஞ்சிகையில் போர்க் காலத்தில் சிங்கள எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதைகளை மொழிபெயர்த்து பிரசுரித்துள்ளார். அது ஒரு தொகுப்பு நூலாகவும் பின்னர் வெளிவந்தது. அதில் பல கருத்துக்கள் உண்டு. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் மாத்திரமல்ல முஸ்லிம்கள் சிங்களவர்கள் ஆகியோரும் பாதிக்கப்பட்டனர் என்ற கருத்தையும் நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம் என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதேபோல இந்த நாட்டில் சமாதானம் இருந்தால்தான் நாம் எதையும் சாதிக்கலாம்.

ஞானசேகரன் அவர்களிடம் எங்களது வேண்டுதல் என்னவென்றால், இனங்களுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்துவதில் நீங்கள் ஒரு முக்கியமான ஆளுமை. உங்களுடைய பணியை நீங்கள் தொடரவேண்டும். டொமினிக் ஜீவா அவர்கள் முதுமையடைந்து இந்தப் பணியைத் தொடரக் கூடிய நிலையில் அவர் இல்லை. ஆனால் நீங்கள் அதனைத் தொடரவேண்டும். அதற்குத் தேவையான உதவிகளை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்களைப் போன்ற தமிழ் எழுத்தாளர்களுடைய படைப்புகள் சிங்களத்திலே மொழி மாற்றம் செய்ய நாங்கள் மிகவும் விருப்பம் கொண்டுள்ளோம். உங்களுடைய இந்த 200 ஆவது சிறப்பிதழ் போன்று பல சிறப்பிதழ்கள் தொடர வேண்டும். சிங்கள தமிழ் முஸ்லிம் படைப்பாளிகள் உயர்வடைவதற்கு அவர்களது எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ள உதவி செய்யுங்கள். இந்த உன்னதமான பணியைத் தொடர்வதற்கு உங்களுக்கு இறைவன் ஆசியுடன் நீண்ட ஆயுள் ஆரோக்கியம் பெற்று இன்னும் நீண்டகாலம் இப்பணியைத் தொடர்வதற்கு உங்களுக்கு வாழ்த்து தெரிவித்து பிரார்த்திக்கின்றோம். சிங்களம், தமிழ், முஸ்லிம் படைப்பாளிகளாகிய ஆகிய நாம் ஒன்று சேர்ந்து முதலில் இந்த நாட்டில் சமாதானம் ஏற்பட உழைப்போம். அந்தப் பணியை நாங்கள் சேர்ந்து செய்வோம். நாங்கள் ஒரே இனம், மனிதஇனம் என்பதை மனதில் வைத்துச் செயற்படுவோம்.

**ஞானம் நிர்வாக ஆசிரியர் பாலச்சந்திரனின் வெளியீட்டுரை**



ஞானம் 200 ஆவது இதழ் வெளியீடும் அதன் ஸ்தாபகர் தி.ஞானசேகரன் எனது தந்தையாருடைய பவளவிழாவும் ஒன்றாக அமையப்பெறுவது என்பது இலக்கிய வரலாற்றிலே எத்தகைய சாத்தியம் எத்தனைபேருக்கு அத்தகைய சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதை நாங்கள் இந்த இடத்திலே ஞாபகப்படுத்த வேண்டி உள்ளது. எனது தந்தையாரது பவளவிழாவும் அவர் உயிராக தவமாக நினைக்கின்ற ஞானத்தின் 200 ஆவது இதழும் ஒன்றாக அமைந்தது இறைவனின் சித்தமே. அதற்கு இன்னொரு மகுடமாக இந்த விழாவுக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் பேராசிரியர் நா.சுப்பிரமணியன் அவர்களும் இந்த ஆண்டிலே பவளவிழாக் கொண்டாடுகின்றார். இதற்கு இன்னொரு மணிமகுடமாக இந்த விழாவானது பவளவிழாக் கொண்டாடும் இந்தத் தமிழ்ச் சங்கத்திலே நடைபெறுகிறது. இவையெல்லாம் திட்டமிட்டுச் செய்யக் கூடிய காரியங்கள் அல்ல. ஆகவே இப்படி ஒன்றுசேர்ந்து அமைகின்ற விழாவிலே நான் இப்போது நிர்வாக ஆசிரியர் என்ற நிலையில் இந்த உரையாற்றக் கிடைப்பது எத்தனை இலக்கியக் குடும்பங்களுக்கு, எத்தனை வம்சங்களுக்கு அது கிடைக்கப் பெற்றதோ நான் அறியேன். இதனை நான் இங்கு பணிவுடன் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்த இரண்டு நூல்கள் அதாவது ஞானம் 200 ஆவது இதழ், மற்றது ஞானசேகரன் பவளமலர் ஞானரதம் ஆகிய இரண்டு நூல்களுக்கும் வெளியீட்டுரை செய்யும்போது வெளியீட்டுரையின் இலக்கணத்துக்கு அமைய, இந்த நூல்களை ஏன் ஞானம் கொண்டுவர முனைந்தது என்ற விபரத்தை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

முதலாவதாக ஞானம் நேர்காணல் தொகுதியை எடுத்துக் கொண்டால், ஈழத்து இலக்கிய வரலாற்றிலே 13 ஆம் நூற்றாண்டிலிருந்தே இலக்கியங்கள் கிடைக்கின்றன. அதற்கு முன்னர் உதிரியாகவே சில பகுதிகள் கிடைக்கின்றன. இந்த 13 ஆம் நூற்றாண்டிலிருந்து 19 ஆம் நூற்றாண்டுவரை உள்ள இலக்கியங்களை எடுத்துப் பார்த்தால் எங்களுக்குத் தொடர்ச்சியாக பதிவுகள் இல்லை. இலக்கியங்கள் விடுபாடுகளுடனும் குறைபாடுகளுடனும் கிடைக்கின்றன. ஆங்காங்கே புதருக்கு இடையில் மறைந்துள்ளவை போன்று எமக்குக் கிடைக்கின்றன என பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை பதிவு செய்துள்ளார்.

இந்தப் பின்புலத்திலே, ஈழத்து நவீன இலக்கியம் 1930 களில் ஆரம்பமாகியது என்று எடுத்துக் கொண்டால், அன்று தொடங்கி இற்றை வரையான காலத்தில் ஈழத்து நவீன இலக்கியத்திலே அந்த விடுபாடுகள் நடந்துவிடக் கூடாது என்ற நோக்குடன் தார்மீகப் பொறுப்புடன கவனமாகத் தொகுக்கப்பட்டதுதான் இந்த 200ஆவது நேர்காணல் சிறப்பிதழ். 1930 தொடங்கி இற்றைவரை ஈழத்து இலக்கியத்துடன் தொடர்புகொண்டவர்களின் நேரடிச் சாட்சியங்களை பதிவு செய்வதற்கான ஓர் ஊடகமாக அமைந்ததுதான் இந்த நேர்காணல்கள்.

நாங்கள் 18 ஆம் நூற்றாண்டு இலக்கியங்களை அல்லது 19 ஆம் நூற்றாண்டு இலக்கியங்களை எடுத்துக்கொண்டால் அந்த வரலாறுகளை அக்காலத்தவர்கள் எழுதிவைத்த பதிப்புரைகள் வாயிலாகவும், தொகுத்துவைத்த தொகுப்பு நூல்கள் வாயிலாகவும்தான் கட்டி எழுப்புகிறோம். ஆனால் இந்த நேர்காணல்கள் நவீன இலக்கிய ஆளுமைகளின் வாக்குமூலங்கள், நேரடிச் சாட்சியங்கள். இந்த நேர்காணல்கள் அதிகாரபூர்வமானவை. அடுத்த கேள்வி என்னவென்றால் இவற்றை ஏன் தொகுக்க வேண்டும்? தமிழ் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் ஆரம்ப காலத்தில் இருந்து இன்றுவரைக்கும் எமக்கு மிஞ்சி இருப்பவை தொகுப்பு நூல்கள்தான். அகநானூறாக இருந்தால் என்ன புறநானூறாக இருந்தால் என்ன இவையெல்லாம் தொகுக்கப்பட்ட இலக்கியங்கள் தான். அவைதான் காலத்தால் கடத்தப்பட்டு எமக்குக் கிடைக்கின்றன.

இந்த நேர்காணல்கள் ஞானத்தில் வந்திருந்தால் கூட அது தொகுப்பாக வரவேண்டும். அப்போதுதான் அது காலத்தையும் தாண்டி நிலைக்கும் என்ற காரணத்திற்காக 60 ஆளுமைகளின் நேர்காணல்களை எடுத்து தொகுத்து தந்திருக்கிறோம்.

இந்த நேர்காணலுக்கு வழங்கப்பட்ட தலையங்கம் ஈழத்து தமிழ் நவீன இலக்கிய வெளி. இந்தத் தலையங்கம் சார்ந்த ஒரு குறிப்பு இங்கு கொடுக்க வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. தொல்காப்பிய பாயிரத்தை எடுத்துக் கொண்டால் வடவேங்கடம் முதல் தென்குமரி ஆயிடை நல்கூறும் நல்லுலகு என்ற வரைவிலக்கணம் கூறப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் அதன் பரப்பு அகன்று செல்கிறது. திணைகள் கடந்த ஆறாம் திணையாக, இணையத் திணையாக புதிய புதிய திணைகள் தோன்றிவிட்டன. ஐந்திலக்கிய வடிவங்கள் மாறி இணையத்தில் புதிய புதிய

வடிவங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த தமிழ் இலக்கியமானது ஐந்திணையைக் கடந்து புதிய ஒரு வெளிக்கு இலக்கியம் சென்று கொண்டிருக்கிறது. அந்த வெளிக்கு ஈழத்து இலக்கியத்தைக் கொண்டு சென்று சேர்க்க வேண்டியது எமது கடமை. ஆகவேதான் அந்த இலக்கிய வெளியின் ஒரு கூறாக ஈழத்து இலக்கியத்தை இணைக்க வேண்டும் என்ற நோக்குடன்தான் இந்தப் பெயர் சூட்டப்பட்டது. இதில் 60 ஆளுமைகளின் நேர்காணல்கள் 1000 பக்கங்களில் அமைந்துள்ளன.

அடுத்ததாக இந்த ஞானரதம். தி.ஞானசேகரன் அவர்கள் கடந்த ஐந்து தசாப்தங்களாக ஈழத்து இலக்கியத்திலே நகர்ந்து வருகின்றார். ஒரு சிறுகதை ஆசிரியராக, நாவலாசிரியராக, இதழாசிரியராக, பதிப்பாசிரியராக, கட்டுரை ஆசிரியராக, எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பவராக, விழாக்கள் நடத்தும் இலக்கியச் செயற்பாட்டாளராக பகுதி பகுதிகளாகத் தெரிந்த ஞானசேகரனை தொகுத்துக் காண்பதற்கு அவரது 75 வயதில் இந்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதில் ஒரு நேர்மையும் நடுநிலையும் காணப்பட வேண்டும் என நாம் விரும்பினோம். அதனால் ஞானசேகரன் கூறிய எந்தவொரு கூற்றோ அல்லது ஞானம் பதிப்பகத்தின் பதிப்புரையோ வராமல் இந்த ஞானரதம் வெளிவந்திருக்கிறது. அவரைப் பற்றி 100 பேர் கூறிய 100 கட்டுரைகளை உள்ளடக்கி இந்த ஞானரதம் செல்லத்துரை சுதர்சனால் தொகுக்கப்பட்டது.

இந்த இடத்திலேநான் ஒருகுறிப்பைக் கூற வேண்டும். பேராசிரியர் நா.சுப்பிரமணியன் கூறியதுபோன்று இது விஸ்வரூபம்தான். நாங்கள் இந்த இரண்டு தொகுதிகளையும் கொண்டுவரும் போது இது விஸ்வரூபம் என்பதை மனதில் இருத்திக் கொண்டோம். ஆனால் அதனை நாங்கள் ஞானசேகரனின் விஸ்வரூபமாகவோ ஞானத்தின் விஸ்வரூபமாகவோ எண்ணவில்லை. இந்த நூல்களை தொகுக்கவிழையும் போது எங்களது மனதில் இருந்தது என்னவெனில் இந்த ஈழத்து நவீன இலக்கியத்திலே பல்வேறு செல்நெறிகள், வகைமைகள் காணப்படுகின்றன. போர் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம், முற்போக்கு இலக்கியம், நற்போக்கு இலக்கியம், எதிர்ப்பு இலக்கியம் என்று பல்வேறு போக்குகள், கருத்தியல்கள் கடந்த எழுபது ஆண்டிலே வந்துசேர்ந்துள்ளன. ஞானம் அக்காலங்களுக்கு உரியதொகுதிகளை அவ்வப்போது தொகுத்து வந்திருக்கிறது. 100 ஆவது இதழ் நவீன இலக்கியத் தொகுப்பு, 150 ஆவது இதழ் அக்காலத்துக்கு தேவையான போரிலக்கியத் தொகுப்பு, 175 ஆவது இதழ் புலம்பெயர் இலக்கியம். தற்போது பேராசிரியர் கூறியதுபோல் அடுத்த கட்டத்துக்குப் போகும்போது நவீன இலக்கியத்தை ஆவணப்படுத்துகின்ற இந்த நேர்காணல் தொகுப்பு. இந்த அனைத்தையும் கம்பனின் வார்த்தையில் கூறுவதனால் 'தோள் கண்டார் தோளேகண்டார், தாள் கண்டார் தாளே கண்டார்' என்பதுபோல போர் இலக்கியத்தை மட்டும் பார்ப்பவர்கள் போர் இலக்கியத்தைப் பார்ப்பார்கள், புலம்பெயர் இலக்கியத்தைப் பார்ப்பவர்கள் புலம்பெயர் இலக்கியத்தைப் பார்ப்பார்கள். நேர்காணலைமட்டும் பார்ப்பவர்கள் நேர்காணலைப் பார்ப்பார்கள். இவ்வாறு பகுதிபகுதியாகப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஞானசேகரனை சிலர் சிறுகதையாளனாகப் பார்ப்பார்கள், சிலர் நாவலாசிரியராகப் பார்ப்பார்கள், சிலர் இதழாசிரியராகப் பார்ப்பார்கள். சிலர் தொகுப்பாசிரியராகப் பார்ப்பார்கள் சிலர் பயண இலக்கிய எழுத்தாளராகப் பார்ப்பார்கள். இந்த நவீன ஈழத்து இலக்கியத்தைத் தொகுத்தும் வகுத்தும் தந்த நாம் இந்தவிழாவை எப்படிநோக்குகின்றோம் என்றால், இது ஞானத்தின் விஸ்வரூபம் அல்ல. ஞானசேகரனின் விஸ்வரூபம் அல்ல ஈழத்து நவீன இலக்கியஉலகின் விஸ்வரூபமாகப் பார்க்கிறோம். ஏனென்றால் இந்தநவீன இலக்கிய உலகம் தற்போது விஸ்வரூபம் எடுத்து அது பலவற்றையும் உள்ளடக்கி இருக்கிறது. ஞானத்தின் போர் இலக்கியத்தைப் பாருங்கள், நேர்காணலைப் பாருங்கள் ஞானசேகரனின் ஐம்பதுவருட இலக்கியத்தைப் பாருங்கள் அனைத்தையும் பார்க்கவேண்டுமா இந்த இரண்டுதொகுதியையும் பாருங்கள் ஞானம் தொகுத்த பழைய தொகுதிகளையும் பாருங்கள் அதுதான் ஈழத்துநவீன இலக்கியத்தின் விஸ்வரூபம். இது ஒரு தவம். ஞானசேகரனின் தவம். நவீன இலக்கியத்துக்கு ஒரு விஸ்வரூபத்தைக் கொடுக்கவேண்டும் என்று எண்ணினோம். அது எமது தொகுப்பு நூல் களாக அமைந்தன. ஞானத்தின் 175 ஆவது இதழ் வெளியீட்டு விழாவிலே தங்களை 200 ஆவது இதழ் வெளியீட்டின் போது சந்திப்பதாகக் உறுதிமொழி கூறினோம். அதேபோன்று இந்த இரண்டு நூல்களையும் வெளியிட்டபின் ஞானத்தின் அடுத்தகட்டம் என்ன? எம்முடைய 5 ஆண்டுப் பயணமாக, ஒருவிடுபட்டு இருக்கின்ற - குறைபாடுகள் காணப்படுகின்ற ஈழத்து பழந்தமிழ் இலக்கியத்துக்கு 250 ஆவது இதழை ஈழத்து பழந்தமிழ் இலக்கியச் சிறப்பிதழாக நாங்கள் வெளிக்கொணர்வதற்கு 5 ஆண்டுத் திட்டம் வகுத்து செயற்பட்டுவருகிறோம். இவை

அனைத்துக்கும் இறைவனின் அருளும் இலக்கியநெஞ்சங்களின் உதவியும் எமக்குவேண்டும் என்று கூறி இவ்விழாவிலே நீங்கள் வந்து சிறப்பித்தது போன்று 250 இதழ் வெளியீட்டின்போதும் நீங்கள் வந்துகலந்து சிறப்பிக்கவேண்டும் என்ற அழைப்பை முன்கூட்டியே முன்வைத்து எனது வெளியீட்டுரையை நிறைவுசெய்கிறேன்.

**பதிப்பாசிரியர் செல்லத்துரை சுதர்சன் உரை**



ஞானரதம் என்ற மலரில் எழுதியவர்கள் சார்பிலும் பவளவிழாக் குழுசார்பிலும் சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். மகிழ்ச்சியும் அற்புதமான உணர்வும் பூரிக்கின்ற மனநிலையும் உடைய இந்தத் தருணத்திலே முதலிலே பவளவிழாக்குழு சார்பிலும் மலர்க்குழு சார்பிலும் இலக்கிய நண்பர்கள் சார்பிலும் பவளவிழாக்காணும் திரு. ஞானசேகரன் ஐயா அவர்களையும் அவர்தம் பாரியார் அவர்களையும் குடும்பத்தவர்களையும் பவளவிழாக் குழு சார்பிலே வாழ்த்தி வணங்குகின்றேன். இம்மலர் தொடர்பான சில கருத்துக்களை மிகச்சுருக்கமாகக் கூறி எனது உரையை நிறைவுசெய்ய விரும்புகிறேன். இந்த அரங்கிலே பேசிய 3 பேராசிரியர்கள் நாசூக்காகச் சில விடயங்களைத் தொட்டுச் சென்றார்கள். இம்மலர் வெளிவரும் காலத்திலே இருக்கின்ற ஈழத்து இலக்கியச் சூழலினுடைய யதார்த்தம் தொடர்பாக இங்கே கூற வேண்டிய தேவை உள்ளது. ஒரு சாதனையாளர் தன்னுடைய சாதனைகளை நிலைநாட்டியபின் இலக்கிய உலகினுடைய அங்கீகாரத்தைப் பெற்ற பின்பு பாராட்டுதல்களுக்கும் கௌரவிப்புகளுக்கும் பொருத்தமானவராக இருக்கின்றார்.

நாங்களும் நீங்களும் எல்லோரும் சேர்ந்து ஞானம் ஆசிரியரை பாராட்டுவதற்கு அப்பால் இப்போது ஈழத்து இலக்கியப் போக்கின் யதார்த்தம் பற்றிச் சற்றுச் சிந்திக்கலாம். அப்படி சிந்திக்கின்ற போதுதான் ஞானரதத்தினுடைய வருகை பற்றிய தேவையை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். சுருக்கமாக அதைப்பற்றிக் கூறுகிறேன். இன்று ஈழத்திலே பிரசுரவெளி என்பது நன்கு வாய்த்திருக்கிறது. அவ்வாறு வாய்த்திருப்பதால் நூல்களைப் பலர் நாளாந்தம் தாம் விரும்பியவாறு வெளியிட்டு வருகின்றனர். எங்கு பார்த்தாலும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்று வருகிறது. பல நூற்றுக்கணக்கிலே நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. எழுத்தாளனுக்குரிய கௌரவிப்பு விழாக்கள் அவர்கள் எழுதிய நூல்களை விடவும் அதிகமாக ஈழத்து இலக்கியச் சூழலில் நடந்தேறுவதை காண்கிறோம். இவற்றுக்கும் மேலாக நூல்களுக்கான விருதுகள் கௌரவிப்புகள் விழாக்கள் பொன்னாடைகள் மலர் மாலைகள் இப்படியெல்லாம் ஈழத்து இலக்கியச் சூழலிலே பரவலாக நடைபெற்று வருகிறது. இத்தகைய ஒரு சூழல் இன்று இருக்கின்றது. பல நூற்றுக் கணக்கில் விமர்சனங்கள் நடந்திருந்தாலும் காலமும் விமர்சனமும் தக்க வைத்திருப்பது ஒரு சிலவற்றைத்தான் என்பதை தமிழ் வரலாறு காட்டி நிற்கிறது. இது ஒரு புறம். இன்னொரு புறத்திலே பேராசிரியர்கள் தங்களது உரைகளிலே கூறியது போல எழுத்தாளர்களுக்கும் விமர்சகர்களுக்குமான இடைவெளி மிகப் பாரியதாக இருக்கின்றது. விமர்சகர்கள் யார்? அவர்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்ற பல விவாதங்கள் நம்மத்தியிலே இருக்கின்றன. இவை படைப்பிலக்கியச் சூழலில் பல இடைவெளிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

எனவே இத்தகைய ஒரு இடைவெளி நிகழும் சூழலில் எவ்வாறு நாம் ஒரு எழுத்தாளனை கௌரவப்படுத்துவது என்ற கேள்வி நம்முன்னே அல்லது உங்கள் முன்னே தோன்றுகிறது. இது ஒரு யதார்த்தமான கேள்வியாக இருக்கின்றது. அப்போதுதான் நாம் தமிழ் இலக்கிய வரலாறுபற்றி யோசிக்க முடிகின்றது. தனிமனித ஆளுமையாளர்களின் இலக்கியப் பங்களிப்பினுடைய வரலாறுதான் தமிழ் இலக்கிய வரலாறு.

தனிமனித ஆளுமையாளர்கள் தமது சிந்தனை செயற்பாட்டின் மூலம் இலக்கிய வெளியைச் செப்பனிட்டார்கள். காலத்துக்கு ஏற்ப இலக்கிய வெளியில் புதுப்பயிர் செய்தார்கள். ஆனால் கிடைத்த பயன்கள்தான் இலக்கிய வரலாற்றிலே நின்று நிலைக்கின்றன. எனவே ஒரு படைப்பாளியை கௌரவித்தல் என்பது அவருக்கு விருதுகளையோ கௌரவங்களையோ கொடுப்பதைவிடவும் அவருடைய எழுத்தூழியத்தை மதிப்பிடுதல் அதனை விமர்சித்தல் இலக்கிய வரலாற்றில் அவர் என்ன புதிய சாதனைகளை நிகழ்த்தினார் என்பதை அவதானித்தல் அதனைப் பதிவு செய்தல் என்பது முக்கியமானதாக அமைகிறது.

அந்த அடிப்படையில் ஒரு இலக்கிய ஆளுமையாளனைக் கொண்டாடுவது என்பது அல்லது இலக்கிய வெளியிலே அவரை வைத்து மதிப்பிடுவது என்பதுதான் சரியானது என்ற

நோக்கிலே செயற்பட்டு இந்த பவளவிழா மலரினை தயாரித்துள்ளோம். ஈழத்து இலக்கியச் சூழலில் நன்கு அறியப்பட்ட பன்முக ஆளுமையாளராகிய தி.ஞானசேகரன் அவர்களுடைய 52 வருடகால இலக்கியப் பணிகளின் மதிப்பீடுகளாகவும் விமர்சனங்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்திருப்பதுதான் ஞானரதம் என்கின்ற இந்த பவளமலர் தொகுப்பாகும். இதற்கான கட்டுரைகளை ஆய்வறிஞர்களிடமும் இலக்கிய நண்பர்களுடனும் கலந்து ஆலோசித்து நாவல் மற்றும் சிறுகதை இலக்கியம் சார்ந்த பங்களிப்பு, தன் வரலாறு மற்றும் பயண இலக்கியம் சார்ந்த பங்களிப்பு, தொகுப்பு மற்றும் பதிப்புரை சார்ந்த பங்களிப்பு, இதழியல் சார்ந்த பங்களிப்பு, சமூகச் செயற்பாடுகள் சம்பந்தமான பங்களிப்பு என்கின்ற 5 விதமான தலைப்புகளிலே அவற்றை வாங்கி இந்த மலரிலே தொகுத்துத் தந்திருக்கின்றோம். இதை வாசிக்கின்றபோது நீங்கள் ஒரு விடயத்தை உணர்வீர்கள். இது தனியே ஞானசேகரன் அவர்களைப் பாராட்டுகின்ற அல்லது விமர்சிக்கின்ற அல்லது அவரை வழிபடுகின்ற மலர் மாத்திரம் அல்ல.

தி.ஞானசேகரனை முதன்மைப்படுத்தி அவரது இலக்கியப் பங்களிப்பை மதிப்பிடும் ஆய்வுசார் கட்டுரைகளின் தொகுதியாக இது இருந்தாலும் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக ஈழத்து இலக்கியத்தினுடைய புனைகதைச் செல்நெறியை, சமூக பண்பாட்டு மாறுதல்களை, இலக்கியச் செயற்பாடுகளை, இலக்கியச் சிற்றிதழ் பிரசுரவெளியீட்டு கருத்துநிலைக் கூறுகளை, ஈழத்தவர்கள் ஈழத்திலும் பிறநாடுகளிலும் நிகழ்த்திய தமிழ் இலக்கிய முன்னெடுப்புக்களை இந்த பவளவிழா மலரிலே நீங்கள் அவதானிக்க முடியும்.

நூற்றுக்கு மேற்பட்ட படைப்புகளைத் தாங்கி இந்த பவளமலர் வெளிவந்திருக்கிறது. பேராசிரியர்கள், கலாநிதிகள், எழுத்தாளர்கள், நண்பர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் இதில் எழுதியுள்ளார்கள். ஈழத்தைச் சேர்ந்தவர்கள், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், புலம்பெயர் தேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் இந்த மலரிலே தம்முடைய எழுத்துக்களைப் பதிவு செய்துள்ளார்கள். எழுத்தாளர்களிடமும் ஆய்வாளர்களிடமும் கட்டுரைகள் தருமாறு வேண்டிக் கொண்டபோது எல்லோரும் மனமுவந்து உரிய காலத்தில் தந்து உதவினார்கள். ஞானசேகரனுடைய பவளவிழாச் செய்தி அறிந்து மகிழ்ந்து நண்பர்கள் சிலர் தாமாகவே கட்டுரைகள் தந்து உதவினார்கள். அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அனுப்பிய கட்டுரைகள் அவர்கள் ஆக்கியவாறே இந்த மலரில் இடம்பெற்றுள்ளன. தி.ஞானசேகரனுடைய படைப்புக்களை அவர்கள் எவ்வாறு விமர்ச்சித்திருந்தாலும் அந்த விமர்சனத்தை ஏற்றுக்கொண்டு அவர்கள் எழுதிய கட்டுரைகளை அவ்வாறே இந்த மலரில் பதிவு செய்துள்ளோம். எனவே ஒரு எழுத்தாளனை மதிப்பிடுவதற்குரிய ஆய்வு செய்வதற்குரிய விமர்சிப்பதற்குரிய அத்தனை தகுதியும் ஒரு எழுத்துலகில் இருக்கின்றது என்பதைக் காட்டும் முகமாகவும் இந்த மலரை நீங்கள் ஏற்றுக் கொள்ளலாம்.

கட்டுரைகள் அனுப்பிய அனைவருக்கும் பவளவிழாகுழுவின் சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். பதிப்பிக்கும் பணியை பவளவிழாக்குழுவினரும் ஞானம் நிர்வாக ஆசிரியர் சகோதரர் பாலச்சந்திரனும் என்னிடம் வழங்கினார்கள். தமிழ் நாட்டில் இருந்து என்னை அவர் அழைப்பிப்பதற்காகவும் இந்தப் பதிப்புப் பணியை எனக்கு வழங்கியமைக்காகவும் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். என்னையும் என்போன்ற இலக்கிய இளைஞர்களையும் நவீன தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்து வைத்ததில் ஞானத்திற்கு முக்கிய பங்கு உண்டு. எனவே ஈழத்திலே இருக்கின்ற இலக்கிய இளைஞர்கள் சார்பிலே ஞானம்





ஆசிரியர் அவர்களை நன்றியோடு வணங்குகிறேன். இந்த இனிய தருணத்திலே ஞானம் ஆசிரியர் ஞானசேகரனிடத்தில் பவளவிழாக்குழு சார்பிலும் இதிலே எழுதிய எழுத்தாளர்கள் சார்பிலும் நாங்கள் கேட்டுக்கொள்வது இதுதான் நீங்கள் இலக்கிய வெளியில் பதித்த சுவடுகளை, தடங்களை எதிர்காலத்தில் நீங்களே புறநிலையில் நின்று மதிப்பிடவும் அதனடிப்படையில் தொடர்ச்சியான பணியை முன்னெடுக்கவும் மலரில் எழுதிய அனைவரது சார்பிலும் வாழ்த்தி விடைபெறுகிறேன். சீருக்கெல்லாம் முதலாகவும் ஒரு தெய்வம் துணை செய்யவேண்டும்.

**பவளவிழா நாயகர் தி. ஞானசேகரன் ஏற்புரை**



எனது இன்றைய வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த இரண்டு விடயங்களை பவளவிழாக்காணும் இந்தத் தருணத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். முதலாவது எனது பரம்பரை அலகு. எனது மூதாதையர்களிடமிருந்து எனக்கு இரண்டு விடயங்கள் பரம்பரை அலகினூடாக வந்து சேர்ந்திருக்கின்றன. ஒன்று தமிழ்ப்பணி மற்றது சமூகப்பணி

தமிழறிஞர் கதிர்காம ஐயர் அவரைத்தொடர்ந்து வித்துவசிரோமணி கணேசையர், காசிவாசி செந்திநாதஜயர், அப்பாச்சமி ஐயர் அவர்களைத் தொடர்ந்து மணிஜயர் என்கின்ற சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இவர்கள் செய்த தமிழ்ப்பணியின் தொடர்ச்சிதான் என்னிடம் வந்து சேர்ந்துள்ளது என நினைக்கிறேன்.

இவர்கள் தமிழ்ப்பணியை மட்டும் செய்யவில்லை சமூகப் பணியையும் செய்தார்கள் கதிர்காமையர் எங்கள் ஊரில் முதன்முதலாக ஒரு தமிழ்ப் பாடசாலையை அமைத்தார். எனது தாத்தா துரைசாமி ஐயர் ஒரு ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார். இப்பாடசாலைகள் இன்று அரசினர் பாடசாலைகளாக விளங்குகின்றன. எங்களது ஊரில் சிறுவர்களுக்கான முன்பள்ளி இருக்கவில்லை. எனவே நான் ஒரு காணிவாங்கி அதில் ஒரு முன்பள்ளி அமைப்பதில் முன்னின்று உழைத்தேன். அந்த முன்பள்ளி இப்போது பிரதேச சபையின் கீழ் சிறப்பாக இயங்குகின்றது

இப்போது பின்நோக்கி யோசிக்கும்போது இந்தத் தமிழ்ப்பணியும் சமூகப்பணியும் ஒரு அஞ்சல் ஓட்டம்போல் எனக்குள் வந்து சேர்ந்திருக்கிறது என நினைக்கிறேன்.

பரம்பரை அலகு எத்தகைய வலிமை வாய்ந்தது என்பதை உணரவைக்கும் ஒரு நிகழ்வினை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன் எனது மகன் பாலச்சந்திரன் அவுஸ்திரேலியாவில் கணினிப் பொறியியலாளராக உயர்கல்வி பெற்றவர். அங்கு வதிவிட உரிமைபெற்று நான்கு வருடங்கள் உயர்தொழில் பார்த்தவர்.

அவரிடம் இருந்த அந்த பரம்பரை மரபணு அவரைச் சும்மா இருக்கவிடவில்லை. அவரைத் தமிழ்பணிசெய்ய உந்தித்தள்ளியது. உறவினர் பலரது ஆட்சேபனையையும் மீறிக்கொண்டு அவர் தமிழ் பணிசெய்ய இலங்கை வந்துவிட்டார். அஞ்சலோட்டத்தின் தடி தற்போது என்னிடம் இருந்து அவருக்கு கையளிக்கப்பட்டுவிட்டது. அவர் ஞானத்துக்குள் உள்வாங்கப் பட்டுள்ளார். அத்தோடு ஈழமும் தமிழும் என்ற தொடர் ஆய்வு நூல்களை வெளியிட்டு வருகிறார்.

இந்த பரம்பரை அலகைவிடவும் இன்னுமொரு விடயமும் என்னுள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறது என நினைக்கிறேன். அது இறைவனுடைய அருளாசி.

எனது தந்தை ஓர் ஏழைப் பிராமணர். அந்தண குலத்துக்குரிய ஒழுக்கசீலர். சேட் அணிய மாட்டார். காலுக்குச் செருப்பு அணிய மாட்டார். தனது செயற்பாடுகள் எதுவும் மற்றவர்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தக்கூடாது, பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்ற குறிக்கோளோடு வாழ்ந்தவர். தான் நட்டப்பட்டாலும் மற்றவர்கள் நட்டப்படக்கூடாது என்ற தத்துவத்துடன் வாழ்ந்தவர். அவருக்குள்ளால் அந்தக்குணம் எனக்குள்ளும் வந்துவிட்டது என நினைக்கிறேன்.

எனது தாயார் விருந்தோம்பலில் சிறந்து விளங்கியவர். அவரே என்னை வாசிப்புப் பழக்கத்தில் ஈடுபட ஊக்குவித்தவர். அதனால் நான் எழுத்தாளனாக வர முடிந்தது என நினைக்கிறேன்

எனது மனைவியின் பெயர் ஞானலட்சுமி. சமூகத்தில் இந்தப் பெயர் மிகவும் குறைவு. ஞானசேகரன் என்ற பெயரும் குறைவுதான். எப்படி இந்த ஞானசேகரனுக்கு ஞானலட்சுமி வந்தமைந்தார்! அதுதான் இறையருள் என நான் நினைக்கிறேன். நான் அவரை திருமணத்தின் முன்னர் பார்த்ததில்லை. திருமணத்தின் பின்னரே கதைத்தேன். அவர் கீரிமலை நகுலேஸ்வரத்தைச் சேர்ந்த மகாமகோபாத்யாய இராமையர் என்கிற பேரறிஞரின் புதல்வி. மாவை ஆதீனம் இராஜராஜஸ்ரீ ஷண்முகநாதக்குருக்களின் பெறாமகள். பெருமை மிக்க பின்புலத்தைச் சேர்ந்தவர்.

எனது தாயாரையப் போலவே இவரும் விருந்தோம்பலில் முன்னிற்பவர் வீட்டுக்கு வருபவர்களை வெறுங்கையோடு அனுப்பமாட்டார். இந்த விருந்தோம்பல் சிறப்பு எங்களது

# கார்மேகம்

நீலவானவீதியில்
நீ வரைந்த கோலத்தில்
நீண்டு சென்ற
ஓவியன் தீட்டிடாத
ஒரு கோடி வர்ணம்
அற்புத ஆதவன்
ஆனந்தக் கதிர்களால்
ஆங்காங்கே
ஆலம் குருவிகள்
ஆர்ப்பாட்டத்துடன்
சிறகு விரித்தன
சின்னதுக்கு இரைதேடி
மூடுபனி தென்பட
மூச்சை பிடித்ததுபோல்
முத்தார முகத்துடன்
இலங்கைவேந்தன்
இராவணனின் புஸ்பகம்
இலங்காபுரிக்கு பறந்தது
ஆதவன் மறைவிலும்
அம்புலியின் வரவிலும்
அண்டம் காக்கா தூங்கிட
அன்னம்மா அரிசியிடிக்க
அந்தோனி அணியத்துடன்
அறகுளா மீன் பிடிக்க
அரவம் ஊர்ந்திட
ஆந்தை அலறிட
வவ்வால் இலுப்பையில்
பழம்தின்ன
காவல் காத்திடும்
கந்தனின் வைரவர்
குரைத்து சிணுங்கி
கள்வனை காட்டிநின்றது

சுவிஸிலிருந்து
**பொலிகை ஜெயா**

குடும்பத்திற்கு பெரிய பலமாக இருக்கிறது என்பதை நான் பலமுறை உணர்ந்திருக்கிறேன். இவர் ஞானம் சஞ்சிகையின் இணை ஆசிரியர், சமயநூல்களின் ஆசிரியர்.

எமது பிள்ளைகள், என்னையும் மனைவியையும் கண்ணை இமைகாப்பதுபோல் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். பூர்வீகத் தொடர்பால் எமக்கு மருமகனாக வந்து வாய்த்தவர் சுவாமிநாதன் சர்மா. அவர் எமக்கு மருமகனாக ஒரு போதும் இருப்பதில்லை. எங்கள் மகனாகவே இருப்பார். இந்தப் பவளவிழாவை இத்துணை சிறப்பாகச் செய்யவேண்டும் என முன்னெடுத்தவர் அவர். எங்களுக்குக் கிடைத்த மருமகள்மார் இருவரும் என்னையும் மனைவியையும் தமது தாய்தந்தையர்கள் போலக் கவனித்துக் கொள்கிறார்கள். இத்தகைய குடும்பச் சூழல் அமைந்தமையாலேதான் நாங்கள் எந்தக் கவலையுமின்றி உற்சாகத்துடன் இயங்கிக் கொண்டிருக்கிறோம். மன நிறைவோடு இருக்கிறோம்.

எமக்கு பேரப்பிள்ளைகள் ஒன்பதுபேர். இன்று மகளின் பிள்ளைகள் இந்தப் பவளவிழாவில் இசைவிருந்தளிக்க இருக்கிறார்கள்.

தொகுத்துக் கூறுவதானால் ஞானசேகரன் என்ற ஞானரதத்தின் வரைபடத்தை வரைந்தவர்கள் எனது பரம்பரை முன்னோர்கள். இந்த ரதத்திற்கு வடிவம் கொடுத்தவர்கள் எனது பெற்றோர். வர்ணம் தீட்டியவர்கள் எனது ஆசிரியர்கள். இந்த ஞானரதம் பவனிவர ஒரு புறத்தில் வடம் பிடித்தவர்கள் எனது சகோதரர்கள், மனைவி மக்கள் உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள். மறுபுறத்தில் வடம்பிடித்தவர்கள் எழுத்தாள நண்பர்கள், சஞ்சிகையாளர்கள், பத்திராதிபர்கள், பல்கலைக்கழகப் பேராசான்கள். ஞானம் சஞ்சிகையில் எழுதிய மூத்த எழுத்தாளர்கள், ஞானம் சஞ்சிகை வளர்த்தெடுத்த இளம் எழுத்தாளர்கள், புலம்பெயர் நாடுகளில் எம்மை வரவேற்றுக் கௌரவித்த எழுத்தாளர்கள் இப்படிப் பலர். ஊர்கூடித் தேர் இழுப்பது போன்று எனது இன்றைய நிலைக்கும் சிறப்புக்கும் மேற்குறிப்பிட்ட எல்லோரும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்புச் செய்துள்ளார்கள். இவர்கள் யாபேரும் எனது நன்றிக்குரியவர்கள்.

இந்த பவளவிழாவை இவ்வளவு சிறப்பாக நடத்திய பவளவிழாக்குழுவினர், விழாவுக்குத் தலைமை தாங்க கனடாவில் இருந்து வந்து சிறப்பித்த பேராசிரியர் நா. சுப்பிரமணியன் தம்பதியினர், விழாவில் உரையாற்றிய பேராசிரியர் தில்லைநாதன், பேராசிரியர் சபா ஜெயராசா, சிறப்புரை ஆற்றிய ஹேமச்சந்திர பதிரன, ஞானரதம் மலரில் எழுதிய எழுத்தாளர்கள், அதன் பதிப்பாசிரியர் செல்லத்துரை சுதர்சன் மற்றும் இவ்விழாவுக்கு வருகை தந்து எம்மைப்பெருமைப்படுத்திய அன்பர்கள் ஞானம் சஞ்சிகை நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## ஞானம் பாலச்சந்திரனின் "சித்திரக்கவித்திரட்டு" – நூல் அரங்கேற்றம்

ஞானம் பாலச்சந்திரனின் ஈழமும் தமிழும் தொடரில் வெளிவரும் "சித்திரக்கவித்திரட்டு" நூல் அரங்கேற்றம் 04.02.2017 மாலை 4.00 மணியளவில் யாழ்ப்பாணம், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் தலைமையில் இடம்பெற்றது. கடவுள் வாழ்த்தினை பிரம்மஸ்ரீ சு. வரதராஜ சர்மா அவர்களும், வரவேற்புரையை திரு. கணபதி சர்வானந்தா அவர்களும், ஆசியுரையை சிவஸ்ரீ. தியாக. கெங்காதரக் குருக்கள் அவர்களும் நிகழ்த்தினார்கள். நூலாசிரியர் ஞானம் பாலச்சந்திரன், காணொளி காட்சி உதவியுடன் நூலினை அறிமுகம் செய்தார். தொடர்ந்து பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்களின் தலைமையுரை, பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்களின் கருத்துரை, பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் வாழ்த்துரை, கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களின் ஆய்வுரை ஆகியன இடம்பெற்றன. நூலின் முதற் பிரதியை பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு, திரு. தி. சாமிநாத சர்மா, திரு. கொற்றை பி. கிருஷ்ணானந்தன், திருமதி கோப்பாய் சிவம் ஆகியோர் பெற்றுச் சிறப்பித்தனர். கலாநிதி அரங்கராஜ் அவர்கள் ஈழமும் தமிழும் தொடர் நூல்கள் பற்றிய விமர்சன உரையை நிகழ்த்தினார். திரு. கெ. சர்வேஸ்வரன் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

# வாழ்வார் !



காந்தி ஐயா இரங்கல்!

19.12.1918 - 03.02.2017

1. ஒரு காந்தி இந்தியனாய் ஓயாத பணியாற்றி உயர்ந்தார் நெஞ்சில்!
திருமலையில் ஒரு காந்தி செயலாற்றிச் செயலாற்றித் திரிந்தே போனார்!
பரிதாபம், பணங்கண்டு பாதாளம்வரை பாய்ச்சிப் பார் வாழ்வாருள்
வருநாளில் எளிமைதனை வாழ்வாக்க இங்கொருவர் வரவாபோறார்?

2. சமயத்து நூலோடு தள்ளாடி நடைபோட்டுத் தலங்கள் எல்லாம்
சுமையென்று பாராமல் தொண்டென்று பார்த்தபெரும் தூயர் எங்கே?
அமையாது எல்லோர்க்கும் அதனாலே அவரவர்தம் அலுவல் பார்ப்பார்!
இமையாது இரவு பகல் எங்கெங்கும் திரிந்திளைத்த இனியர் எங்கே?

3. பேச்சுப்போல் செய்கையிலும் பெருங்காந்தியாய் வாழ்ந்தே பெருமை பெற்றார்!
மூச்சுள்ளவரை நேர்மை - முன்னுதவி எனக்கடமை முடித்தே சென்றார்!
ஏச்சுக்கள், வாழ்த்துக்கள் எல்லாமே சமமாக இங்கே கொண்டார்!
ஆச்சுதெலாம் இனி இங்கே "ஆனந்தம்" கூறிடவே ஆர் உள்ளாரோ?

4. காந்தியார் கோட்பாடு கனவாகிப்போனாலும் காந்தி ஐயா
ஏந்தியநற் கோட்பாடு இங்கு கனவாகாது என்றும் வாழும்!
சாந்தமுகம், கையின்பை, தாடி, கதர், வெறுங்கால்கள் தக்க சான்றாம்!
சேர்ந்தவரின் சால்புதனை சீராகப் பற்றின் அவர் சேர்ந்தே வாழ்வார்!

"தாமரைத்தீவான்"
(ஈச்சந்தீவு – கிண்ணியா)

---

## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2016



(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

**முதற் பரிசு : ரூபா 5000 /=**
**இரண்டாம் பரிசு: ரூபா 3000/=**
**மூன்றாம் பரிசு: ரூபா 2000/=**

ஏனைய ஏழு சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### போட்டிக்கான விதிகள்

சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல் வேண்டும்.
போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல் வேண்டும்.
தபால் உறையின் இடது பக்க மூலையில் "அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஞானம் கிளை அலுவலகம் – 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.

**போட்டி முடிவுத் திகதி : 30.03.2017**

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது. –**ஆசிரியர்**

# அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழா – 2017

கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கும் கொழும்புக் கம்பன் கழகத்தினரின் கம்பன் விழா 2017 பெப்ரவரி 9, 10, 11, 12 ஆம் திகதிகளில் மிகவும் கோலாகலமாக நடந்தேறியது. இலங்கையில் இத்தகைய தமிழர்தம் பெருவிழாக்களை கம்பன் கழகத்தினராலேயே நடத்த முடிகிறது என்பதே பலரின் கணிப்பாக இருந்தது. பெருந்தொகையான மக்கள் கூட்டம் இந்த நான்கு நாட்களும் அலைமோதிய வண்ணம் இருந்தது. கம்பன் கழகத்தினருக்கேயுரிய சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு இந்த விழாவின் வெற்றிக்குப் பெரும்பங்காற்றியிருக்கிறது.

9 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கம்பன் பட ஊர்வலம் ஸ்ரீ ஐஸ்வர்யலக்ஷ்மி திருக்கோயிலில் ஆரம்பமாகி இராமகிருஷ்ண விழா மண்டபத்தை அடைந்தது. தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், கடவுள் வாழ்த்து, தலைமையுரை, தொடக்கவுரை, நூல் வெளியீடு இறுவட்டு வெளியீடு, அறக்கட்டளை விருது வழங்கல், சமூக நிதி உதவி வழங்கல், குடும்பநிதி உதவி, பட்டிமண்டபம் ஆகியன இடம்பெற்றன. அன்று சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை, சங்கீதபூஷணம் கலாநிதி நா.வி.மு. நவரத்தினம், தமிழ்மணி அகளங்கன், இலக்கிய சாகரம் அல் அஸூமத், நாதஸ்வர வித்துவான் கே.பி. குமரன் ஆகியோர் கௌரவம் பெற்றனர்.

10ஆம் திகதி காலை சிறப்பு நிகழ்வுகளாக தனியுரை, இலக்கிய ஆணைக்குழு என்பனவும் மாலை கவியரங்கம், இன்று சந்திக்கும் இவர்கள் ஆகிய நிகழ்வுகளும் இடம் பெற்றன.

11ஆம் திகதி காலை சிறப்பு நிகழ்வாக தனியுரை, விவாத அரங்கு என்பனவும் மாலை அஞ்சலி உரையரங்கு, மேன்முறையீட்டுப் பட்டி மன்றம் ஆகியவையும் இடம்பெற்றன.

12ஆம் திகதி நிறைவு நாளன்று சிறப்பு நிகழ்வுகளாக தனியுரை, சிந்தனை அரங்கு என்பனவும் மாலை நிகழ்வாக சான்றோர் விருது வழங்கல், வழக்காடு மன்றம் என்பனவும் இடம்பெற்றன.


வண. மரியசேவியர் அடிகளார், எழுத்தாளர் அருள் சுப்பிரமணியம், திரு. விக்டர் ஐவன், பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம், அறங்காவலர் பி. சுந்தரலிங்கம், வைத்தியகலாநிதி ரி. சத்தியமூர்த்தி ஆகியோர் கௌரவம் பெற்றனர். கம்பன் புகழ் விருது 2017 பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டிலிருந்து புலவர் தா.கு. சுப்பிரமணியம், பேராசிரியர் வி. அசோக்குமாரன், திரு. எஸ். ராஜா, திருமதி பாரதி பாஸ்கர், பேராசிரியர் ரி. ரெங்கராஜன், பேராசிரியர் சாலமன் பாப்பையா ஆகியோரும், மலேசியாவில் இருந்து மாண்புமிகு டத்தோ எம். சரவணன் அவர்களும், புதுச்சேரி சட்டசபை சபாநாயகர் கௌரவ. வெ. வைத்திலிங்கம் அவர்களும், மாண்புமிகு டி.எம். சுவாமிநாதன் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு இரா. சம்பந்தன் அவர்களும் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.



## ஈழத்துப் படைப்பாளிகளுக்கு திருப்பூர் தமிழ்ச் சங்க விருது








கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக ஆண்டு தோறும் தமிழ் மொழியில் வெளிவரும் சிறந்த படைப்புகளுக்கு விருது வழங்கிவரும் திருப்பூர் தமிழ்ச் சங்கம் இவ்வாண்டு ஈழத்துப் படைப்பாளிகளின் இரண்டு நூல்களுக்கு விருது வழங்கி கௌரவம் செய்துள்ளது.

வவுனியூர் இரா. உதயணன் எழுதிய "வலியின் சுமைகள்" என்ற நாவலுக்கும்,

ஆசி. கந்தராஜா எழுதிய ஆறு குறுநாவலைக் கொண்ட தொகுதியான "கீதையடி நீயெனக்கு" என்ற நூலுக்கும் விருது வழங்கியுள்ளது.

இவ்விருதளிப்பு விழா 07.02.2017 அன்று தஞ்சை-தமிழ்ப் பல்கலைக்கழக துணை வேந்தர் க. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.





## இலங்கையில் "கரிகாற்சோழன்" விருது

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை நிறுவியுள்ள சிங்கப்பூர் "தமிழவேள் கோ.சாரங்கபாணி ஆய்விருக்கை சார்பில் வழங்கப்படும் "கரிகாற்சோழன்" விருதுகள் வழங்கும் நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்க ஏற்பாட்டில் (21.01.2017 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு) புரவலர் எம் ஏ. முஸ்தபா தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விருது கடந்த காலங்களில் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள், ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டன. இம்முறை இலங்கைத் தமிழ் எழுத்தாளர் களுக்கும் வழங்கப்படுகின்றது.



இலங்கையைச் சேர்ந்த எழுத் தாளர் மு. சிவலிங்கம் எழுதிய "பஞ்சம் பிழைக்க வந்த சீமை" என்ற நாவலுக்கு இம்முறை விருது கிடைத்துள்ளது.

இலங்கை ஒருங்கிணைப்பாளர் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேரா சிரியர். வ. மகேஸ்வரன் ஏற்பாடு களைச் செய்திருந்தார்.

### பகிர்வோம்....

**ஈழமும் தமிழும்**

நல்லூரைச் சேர்ந்த ***திருஞானசம்பந்தப் பிள்ளை*** 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் தர்க்க அறிஞர். இவர் நாவலருக்கும் பொன்னம்பலப்பிள்ளைக்கும் மாணவர். தர்க்க சாஸ்திர ஆராய்ச்சியிலும் தர்க்க வாதஞ் செய்வதிலும் பெரும் வேட்கையுடையவர். இதனால் இவருக்கு ***தர்க்க குடார தாலுதாரி*** என்னும் பட்டப்பெயரும் அறிஞர்களால் வழங்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### பகிர்வோம்....

**ஈழமும் தமிழும்**

ஆறுமுக நாவலரின் தந்தையாரான **ப. கந்தப் பிள்ளை** பெரும் தமிழறிஞர். இவர் 21 நாடகங்கள் பாடியுள்ளதாகப் பதிவு உள்ளது. இவர் கையறக் கவிகள் பாடுவதில் அதிசூரராம். இவர் 'கண்ட நாடக'த்தைப் பாடும்பொழுது முற்றத்தில் நின்ற மாமரத்திற் காய்களை உண்டுகொண்டிருந்த அணிலுக்குக் கையறம் பாடச் சற்றென்று அது விழுந்து இறந்ததாகக் கூறுவர்.

# வாசகர் பேசுகிறார்

**2017 200வது இதழ் வெளியீட்டு விழாவும், பவளவிழாவும்.**

இந்த நிகழ்வுகளின் அழைப்பிதழ் பார்த்தோம். மகிழ்ச்சியாக இருக்கின்றது. நீங்கள் உண்மையில் சாதனை நாயகன்தான். இக்கட்டான காலகட்டத்தில் இச்சஞ்சிகையைத் தோற்றுவித்து பல சோதனைகள் அச்சுறுத்தலுக்கு மத்தியில், இலக்கியச்சுவை மாறாது சஞ்சிகையை தொடர்ந்து நடாத்தி வருகின்றீர்கள்.அதற்கெனத் தனித்திறமை வேண்டும். இலக்கிய ஆர்வம் இருக்கவேண்டும். அனைத்தும் நிறைந்தவர் நீங்கள். இந்தச்சஞ்சிகை மூலம் எத்தனையோ புதிய எழுத்தாளர்களை வெளிக்கொணர்ந்து அவர்களை இலக்கிய உலகில் தரமான இலக்கியவாதிகளாகப் பிரகாசிக்க வைத்திருக்கின்றீர்கள். எழுத்தாளர்களாக அங்கீகாரம் வழங்கியிருக்கிறீர்கள். காலத்திற்குக்காலம் சஞ்சிகையுடன் கனதியான தொகுப்புகளை வெளியிட்டு சரித்திரத்தில் இடம்பிடித்தீர்கள்.

அடுத்த நிகழ்வாக இருநூறாவது இதழ் நேர்காணல் இலக்கியத் தொகுப்பாக வெளிவருகின்றது. என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம். அத்தோடு தங்களின் பவள விழாநிகழ்வும் நடைபெறுவதை அறிந்து பேருவகை கொள்கிறோம். இரண்டு விழாவிற்கும் எம்மால் கலந்து கொள்ள முடியாவிட்டாலும் இதயபூர்வமான வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கிறோம். யேர்மனியில் வாழ்ந்தாலும் இலக்கியத்தால் ஒன்றிணைந்தவர்கள் நாங்கள். எங்கள் இலக்கியங்களுக்கு முன்னுரிமை அளித்து சிறப்பித்தீர்கள். எமது யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செவ்வரத்தை நூல் வெளியீட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக தம்பதிகளாக வருகை தந்து எம்மைக் கௌரவித்தீர்கள்.

எதையும் நாம் மறப்பதற்கில்லை. நோய் நொடியில்லாமல் நீங்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து இலக்கிய உலகத்திற்கு தொடர்ந்து சேவையாற்ற வேண்டுமென்று மனமொத்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அன்புடன் பொன்.புத்திசிகாமணி**
**செயலாளர், யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம்.**

***

உங்கள் அழைப்பிதழுக்கு நன்றி! மிகத் தொலைதூரத்தில் நான் வசிப்பதால் உங்கள் விழாவில் கலந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. உங்கள் எழுதும் திறமை மென்மேலும் வளர்ந்து வைரவிழா காண உங்களை வாழ்த்துகிறேன்.

**சரஸ்வதி தேவி உன் நாவில் குடியிருக்க**
**அகஸ்தியர் உன் கையில் அமர்ந்திருக்க**
**தமிழை வளர்த்திட பிறந்தது ஞானம்**
**தமிழை காத்திட பிறந்தவர் ஞானசேகரன்**
**பவள விழா காணும் நாயகனே**
**நூற்றாண்டு விழாவும் காண வேண்டும்**
**தமிழ் நாயகனே!**
**வாழ்க நீ பல்லாண்டு**
**வளர்க உன் தமிழ்ப்பணி**

**நெதர்லாந்து சிலம்பொலி கலாஷேத்ரா அதிபர்,**
**ஸ்ரீமதி ஷாந்தி இரவீந்திரன்**

***

## வாழ்த்தி மகிழ்கிறோம்!....

ஈழத்திருநாட்டின் தலைநகர் கொழும்பிலிருந்து கடந்த 17 ஆண்டுகளாக வெளிவரும் "ஞானம்" கலை இலக்கியச் சஞ்சிகையின் 200ஆவது இதழானது, 1000 பக்கங்களில் "நேர்காணல்"சிறப்பிதழாக 2017 ஜனவரி மாதம் 22ஆம் திகதி (ஞாயிறு) கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் மாலை 5 மணிக்கு வெளியிடப்பட்டதை வாழ்த்தி மகிழ்கிறோம். இச்சிறப்புத் தருணத்தில் "ஞானம்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக இலக்கிய உலகில் இயங்கிவரும் தி.ஞானசேகரனின் பவளவிழாவும் நடைபெற்றதையிட்டு பெருமகிழ்வு கொண்டோம். "ஞானம்" சஞ்சிகையின் 200ஆவது இதழானது 1.000 பக்கங்களைத்தாங்கி ஈழத்துத் தமிழ் நவீன இலக்கியவெளி என்னும் தலைப்பில் மிகவும் கனதியாகவும் வரலாற்றுப்பதிவாகவும் வெளிவந்திருப்பது சிறப்பான விடயமாகும். ஆசிரியரின் கடின உழைப்பு, குடும்ப உறவுகளின் உழைப்பு, நட்பு வட்டத்தாரின் உதவி, எழுத்தாளப் பெருமக்களின் படைப்புக்கள் என ஒன்றுசேர்ந்து ஞானம் என்னும் சுடரை உலகெங்கும் ஒளிரவிட்டிருப்பது போற்றுதலுக்குரிய விடயமாகும். ஞானம் இதழ் ஆசிரியரின் பணியானது நாடுகடந்து வாழ்ந்துகொண்டிருக்கும் எம்போன்ற பல்லாயிரம் எழுத்தாளர்களை மகிழ்வுகொள்ள வைத்தது. இன்றைய நவீன ஊடகத்துறையில் ஒரு சஞ்சிகையாளனின் தமிழ் இலக்கிய எழுத்துப் பணியானது பல சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி வெற்றி நடைபோட்டுவரும் இச்சஞ்சிகையினரின் கடும் உழைப்பிற்கு எங்கள் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். எமது "மண்" கலை இலக்கிய சமூக சஞ்சிகையும் புலம்பெயர் தேசமான ஜேர்மனியில் 27ஆண்டுகள் கடந்து 181வது இதழை 2017 மாசி மாதம் படைத்துள்ளது என்பதனை ஞானம் சஞ்சிகையின் வாசகப் பெருமக்களுக்கு அறியத்தருகிறோம். தங்களின் 200 ஆவது ஞானம் இதழின் வெளியீட்டு விழா அழைப்பிதழை எமது சஞ்சிகை வாசகர்களுடன் பகிர்ந்துகொண்டுள்ளோம். மேலும் ஞானம் இதழ் உலகப்பரப்பெங்கும் பரவியிருக்கும் தமிழர் மனங்களில் நிலையான இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இதழும் ஆசிரியரும் ஆசிரியர் குழுவினரும் எழுத்தாளர்களும் நீண்ட ஆயுள்பெற்று, நீண்ட காலம் ஞானம் வெளிவரும் என்று அன்புகொண்டு வாழ்த்தி மகிழ்கிறோம்!..

**வ.சிவராசா**

**பிரதம ஆசிரியர், எழுத்தாளர்கள், வாசகர்கள்.**

**"மண்" கலை இலக்கிய சமூக சஞ்சிகை – ஜேர்மனி.**

❋❋❋

ஞானம் 200 சிறப்பிதழ், 1000 பக்கங்களில் எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், கலைஞர்கள், 55 பேரின் நேர்காணல்கள், பல்வேறுபட்ட சிந்தனைகள், கருத்துக்கள், ஈழத்து நவீன கலை இலக்கியங்கள் பற்றிய அற்புதமான தொகுப்பு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு உலகம், பல்வேறுபட்டு மோதும்போது புதிய சிந்தனைகள் நமக்குள். சிலரின் ஆளுமைகள் சரித்திரம் படைக்கிறது உன்னதம் தொட்டு.

சிறு குறிப்பு: சிற்பியின் நேர்காணலில் (பக்கம் 127)

"ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கொண்ட கலை நயம் மிக்க ஆக்கங்களால் ஈழத்து தமிழ் இலக்கியத் துறையை செழுமைப்படுத்தி வரும் செங்கைஆழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன், யாழ். நங்கை, ச.வே. பஞ்சாட்சரம், பெனடிக்ற் பாலன், சாந்தன், வே.குமாரசாமி, மயிலன், பொ. சண்முகநாதன், மு. பொன்னம்பலம், தி. ஞானசேகரன், மு. கனகராஜன், பா. சத்தியசீலன் மட்டுவிலான், கவிதா, பாமா இராஜகோபால், கான மயில்நாதன், து. வைத்திலிங்கம், வி.க. ரட்னசபாபதி, **இளையவன்**, செ. கதிர்காமநாதன், முனியப்பதாசன், க. பரராஜசிங்கம், மணியம், முகிலன், பெரி.சண்முகநாதன் என்பவர்கள் கலைச்செல்விப் பண்ணையில் வளர்ந்தவர்களே" என்ற குறிப்பு தரப்பட்டுள்ளது.

இதில் "இமையவன்" என்ற எனது புனைபெயரே "இளையவன்" என்று தவறாக அச்சிடப்பட்டுள்ளது என்றே நினைக்கிறேன். என் ஆரம்ப எழுத்துக்கள் கலைச்செல்வியிலேயே வந்தன.

அன்று கலைச்செல்வி செய்த சேவையை இன்று இன்னும் விரிவாக, பெரிய அளவில் ஞானம் செய்து வருகிறது.

- **இ. ஜீவகாருண்யன்**

❋❋❋




ஞானம் - 200 ஆவது இதழ்
பக்கங்கள்: 1000
விலை: ரூபா 2000/=





தி. ஞானசேகரன் பவளமலர்
விலை: ரூபா 750/=




## ஈழமும் தமிழும்

நூல் எண் : 6
ஞானம் பாலச்சந்திரன்
பக்கங்கள்: 1020
விலை: ரூபா. 1500/=



## ஞானம் பதிப்பகம்

3B 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06
+94 11 258 6013, +94 777 306 506. editor@gnanam.info